
சர்வக்ஞர்

கே.பி. பிரபு பிரசாத்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

சர்வக்ஞர்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
படஉதவி: நேஷனல் மியூசியம், புதுதில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

சர்வக்ஞர்

ஆங்கிலத்தில் : கே.பி. பிரபு பிரசாத்

தமிழில் : பட்டு. எம். பூபதி

சாகித்திய அக்காதெமி

Sarvajnar - Tamil Translation by Pattu M. Bhoopathi of K.B. Prabhu Prasad's monograph in English, Sahitya Akademi, 1995, Rs. 15

முதல் வெளியீடு 1995

ISBN 81-7201-747-2

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்
இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை, புது தில்லி – 110 001.

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை புது தில்லி – 110 001.

'குணா பில்டிங்', 304 – 305, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை–600 018.
ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா – 700 053.
172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய் – 400 014.
109, ஜே.ஸி. சாலை, பெங்களூர் – 560 002.

விலை ரூ. 15

அச்சிட்டவர் : வெல்டன் பிரஸ், சென்னை-600 021.

பொருளடக்கம்

நூன்முகம்

சாகித்திய அக்காதெமியின் இந்திய இலக்கியச் சிற்பிகள் நூல் வரிசைக்காக சர்வக்ஞரின் வாழ்வும் தொண்டும் பற்றிய இந்நூலை நான் எழுத ஒப்புக் கொண்ட போது அது எத்துணை கடினமான காரியம் என்பதை அறிந்திருக்க வில்லை. சர்வக்ஞர் பற்றி கிடைத்திருந்த செய்திகளை நான் ஆய்ந்த போதுதான், மேலும் தகவல் தேடிய போதுதான், அது தெரிந்தது.

அவரது வாழ்க்கை வரலாறு பற்றிய ஆதார பூர்வமான தகவல் பெறுவதில் இருந்த சிரமம் தலையாயது. அவ்வாறு கிடைத்த தகவல் மிக மிகக் கொஞ்சம். அந்தத் தகவலும் வெறும் நம்பிக்கைகள், புழக்கத்திலிருந்த கதைகள் இவற்றை அடிப்படையாகக் கொண்டதேயன்றி வரலாற்றுச் சான்றுகளுடன் கூடியதன்று. இதில் மிகவும் விநோதமானதும் வருத்தத்திற்குரியதுமான அம்சம் என்னவெனில் தமது காலத்தில் புகழுற்று விளங்கிய சர்வக்ஞர் பற்றி வேறு எந்த – அவரது சம காலத்து கவிஞரோ, அல்லது பிற்காலத்தில் வாழ்ந்திருந்த கவிஞரோ அவரைப்பற்றி குறிப்பிட வில்லை என்பதே. அவரது மூன்று வரிப் பாடல்களை சேகரித்து வெளியிட்டவர்களுக்குக் கூட அவரது வாழ்க்கை பற்றிய ஒரு சிறு குறிப்பு எழுதுவதற்கு போதுமான அளவில் தகவல் கிடைத்திருக்கவில்லை.

எனவே அவரது வாழ்க்கைப்பற்றி எழுதும் பணியை ஏற்றுக்கொண்ட நான், அவரது முதற் பதினான்குப் பாடல்களில் கண்ட ஆதாரமற்ற, கேள்விக்கு இடமான இடைச் செருகல்களாகவும் இருந்திருக்கக் கூடிய – குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு நான் ஊகித்த விஷயங்களைக் கொண்டே எழுத வேண்டி இருந்தது. இவற்றிற்கு ஆதாரமாக இன்னும் அவரது வேறு சில பாடல் களின் அனுசரணையான விவரங்களைக் கொள்ள வேண்டி இருந்தது. இவற்றை அகச் சான்றுகளாகக் கருதலாம்.

இவரது பாடல்களைப் பொறுத்தவரை இவற்றிலிருந்து போலியான இடைச் செருகல்களை இனங்கண்டு பிரித்து எடுக்கும் கடினமானக் காரியத்தை குறிப்பிட வேண்டும்.

ஜெர்மனியைச் சேர்ந்த மதப் பிரசாகரர் அருள் தந்தை வர்த் என்பவர் 1868–ஆம் ஆண்டின் வாக்கில் புத்தக வடிவில் சுமார் 300 பாடல்களைத் தொகுத்துப் பதிப்பித்து வழங்கியதே சர்வக்ஞரின் முதல் புத்தக வடிவாகும். இதன் பிறகு இவரது அனைத்துப் படைப்புகளும் அருள் திரு உத்தங்கி சென்னப்பா அவர்கள் 1924–ஆம் ஆண்டு தொகுத்து வெளியிட்டதே ஆகும். வாசகர்கள்

அருள் திரு சென்னப்பா அவர்களுக்கு அவர் மிகவும் உழைத்து சர்வக்ஞரின் வசனங்கள் அனைத்தையும் தொகுத்து வெளியிட்டமைக்காக நன்றிக் கடன் பட்டிருக்கிறார்கள். கண்ட இடங்களிலெல்லாம் கடைவீதிப் பதிப்புகளாகவும், தூசி படிந்த இருண்ட மூலைகளிலும் சிதறிக் கிடந்த ஓலைச் சுவடிகளைக் கண் டெடுத்து அவற்றுக்கு நூல் வடிவம் தந்தவர் இவர். இந்நூலுக்கு அருள் திரு சென்னப்பா அவர்கள் ஒரு நீண்ட உயிரோட்டமுள்ள முகவுரையும் எழுதி யிருந்தார். சர்வக்ஞரின்பால் இலக்கிய ஆர்வத்தை மக்களிடையே இது உயிர்ப்பித்தது. இந்த பதிப்பில் (1928) மூன்று வரிச் செய்யுள்கள் சேர்ந்து தொகை 2100 –ஆக உயர்ந்தது. இந்த உத்தங்கி பதிப்பே ஆதாரப் பூர்வமான பதிப்பாக 'பரமார்த்தர்' என்ற பெயரில் சர்வக்ஞரின் அனைத்துப் பொன் மொழிகளும் மைசூர் பல்கலைக் கழகத்தின் வசம் இருந்த பனை ஓலைக் சுவடிகளிலிருந்து எடுக்கப் பெற்று பதிக்கப் படும் வரை ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தது. இந்தப் புதிய பதிப்பு கன்னடப் பேராசிரியரும் புலமை மிக்க ஆராய்ச்சியாளருமான டாக்டர் எஸ். பசவராஜு அவர்களால் பதிப்பிக்கப் பெற்றது. பசவராஜு அவர்கள் பல ஆராய்சி நூல்களின் ஆசிரியர் என்ற புகழுக்குரியர். இந்த பதிப்பு 1980–ஆம் அண்டு பெங்களூர் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டது. கிடைக்கப் பெற்றிருந்த அத்தனைப் பாடங்களையும் ஆய்வு செய்து அதில் அசலான ஆதாரப் பூர்வமானப் பாடங்களைத் தேர்வு செய்து டாக்டர் பசவராஜு அவர்கள் பதிப்பித்து இருக்கிறார். அதோடு கூட உத்தங்கி பதிப்பின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி யிருக்கிறார். இந்தப் பதிப்பில் 948+554 மூன்றுவரிச் செய்யுள்கள் அல்லது பாடல் கள் சர்வக்ஞரின் உண்மையான கவிதைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பாடல்கள் அடங்கியுள்ளன.

இந்தப் பதிப்பில் அடங்கியுள்ள பாடத்தின் வியப்பிற்குரிய, சுவையான விஷயம் என்னவெனில் பாடல்களின் இறுதி வரியில் குறிப்பிடப்படும் பாடல் ஆசிரியரின் பெயர், இதற்கு முந்திய பாடங்களில் காணப்பட்ட 'சர்வக்ஞர்' என்பதாக இல்லாமல், 'பரமார்த்தர்' என்பதாகும். இந்தப் பாடம் ஒன்றில்தான் 'பரமார்த்தர்' என்னும் பெயர் இயற்றியவர் பெயராகக் குறிக்கப் பெறுகிறது. இது பாடல்களின் உண்மை ஆசிரியர் யார் என்பதை ஆராய்சியாளர் களுக்கிடையே சர்ச்சைக்கரிய விஷயமாக ஆக்கியுள்ளது. 'பராமார்த்தர்' என்ற பெயரே, பாடல்களில் காணப்பெறும் உண்மையான, ஆதாரபூர்வமான பெயர் என வாதிடும் டாக்டர் பசவராஜு அவர்கள்கூட இப்பாடல்களுக்கு உரியவர் சர்வக்ஞர் தான் என்பதை ஏற்றுக் கொள்கிறார்.

பாடல்களின் இறுதி வரி பேசும் பெயர் சர்வக்ஞரா அல்லது பரமார்த்தரா என்பதில் கருத்து வேற்றுமை இருந்தாலும் இவற்றைப் யாத்த கவிஞர் சர்வக்ஞர்தாம் என்பதில் யாருக்கும் இரண்டு வித அபிப்பிராயம் இல்லை.

டாக்டர் பசவராஜு அவர்கள் பதிப்பித்த பாடல்களையே நான் எனது நூலில் பயன்படுத்திக் கொண்டுள்ளேன். பாடல் குறிப்பிடும் பெயரைப் பொறுத்தவரையில்

அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட சர்வக்ஞரையே நானும் ஏற்றுக் கொண்டுள்ளேன்.

சர்வக்ஞரின் மூன்று வரிக் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதில் இருந்த சங்கடத்தை அடுத்ததாகக் குறிப்பிட வேண்டும். இந் நூற்றாண்டின் முப்பதுகளின் ஆரம்பத்தில் அருள்திரு. சென்னப்பா அவர் களாலும், அதன் பிறகு டாக்டர் வி.கே. கோகேக் அவர்களாலும் செய்யப்பட்ட மொழி பெயர்ப்பு கிடைக்கவில்லை. புத்தக வடிவிலோ அல்லது சஞ்சிகைகளிலோ வெளியிடப்பட்ட ஏனையோரின் மொழி பெயர்ப்புகள் எனக்கு திருப்தி அளிக்க வில்லை. எனவே என்து கருத்துகளை விளக்க தேவைப்பட்ட இடங்களிலெல்லாம் நான் பயன் படுத்திய கவிதைகளை நானே மொழி பெயர்த்துள்ளேன். அவற்றில் குறைபாடுகள் ஏதேனுமிருப்பின் அவை என்னுடையவையே.

டாக்டர் வி.கே. கோகேக், டாக்டர் எஸ். பசவராஜு, டாக்டர் எம். அக்பர் அலி ஆகிய அறிஞர்களுக்கு அவர்களைச் சந்தித்து எனது நூற் பொருள் பற்றி விவாதித்த போது அவர்கள் எனக்கு தெளிவு படுத்திய பல கருத்துக்களுக்காக நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். அவர்கள் மனந்திறந்து, கனிவுடன் எனக்கு வழங்கிய அரிய யோசனைகளை நான் மதித்துப் போற்றுவேன். அவற்றை யெல்லாம் நான் இந்நூலில் பயன்படுத்திக் கொண்டுள்ளேன். இந்நூலின் சில அத்தியாயங்களை நான் படிக்க பொறுமையுடன் செவிமடுத்து எனது நடையை மெச்சி தொடர்ந்து அதே தொனியில் நூலை எழுதி முடிக்க உற்சாகமூட்டிய டாக்டர் எஸ். பசவராஜு, டாக்டர் ஜி.எஸ். சிவருத்ரப்பா, டாக்டர் எச். திப்பருத்ரஸ்வாமி, டாக்டர் எஸ்.எம். அக்பர் அலி, ஸ்ரீ சன்னவீரகனவி ஆகியோர்க்கு என் நன்றி உரியதாகிறது. சிறப்பாக எனது நெருங்கிய நண்பர் டாக்டர். சிவருத்ரப்பா, அவர்கட்கும் இந்த நூலை ஒரு புதிய முறையில் நான் தொடங்குவதற்கு காரணமாயிருந்ததற்காக, ‘சர்வக்ஞரின் சமுதாயப் பார்வை’ என்னும் தமது பி.எச்.டி. ஆய்வுக் கட்டுரையின் மூலம் எனது சர்வக்ஞரின் கவிதா மதிப்பீட்டிற்கு உதவி செய்த டாக்டர் அக்பர் அலி அவர்கட்கும் நான் என் நன்றியினை உரித்தாக்குகிறேன்.

இந்த நூலின் கைப் பிரதிக்கு இறுதி வடிவம் தருவதில் துணை புரிந்த திருமதி. பிரபாவதி கிருஷ்ணமூர்த்திக்கும், இதை நேர்த்தியாக தட்டெழுத்துப் பிரதி எடுத்துக் கொடுத்த ஸ்ரீ ரகுநாதனுக்கும் நான் மிகவும் கடமைப்பட்டவன். தட்டெழுத்தால் நேர்ந்த எழுத்துப் பிழைகளைத் திருத்தி, மேலும் அதை நேர்த்தி செய்ய துணை புரிந்த என் சகோதரர் சதானந்தத்தின் அன்பினை நான் நினைவு கூறவேண்டும்.

இறுதியாக மாபெரும் தவசிரேட்டரும், கவிஞருமான சர்வக்ஞருக்கு, அவரது சிந்தனைகளில் ஆழ்வதன் மூலம் அறிவும் இன்பமும் எய்திய பேற்றுக்காய் எனது வணக்கங்கள். சர்வக்ஞர் ஓர் உலகக் குடிமகன் ஆவார். அவரைப் போன்ற கவிஞர்கள் கலையைக் காட்டிலும் வாழ்க்கையையே பெரிதாக மதித்தவர்கள். எனவே அனைத்துக் காலத்திற்கும் அனைத்து நாடுகளுக்கும்

சொந்தமானவர்கள். மனித குலம் முழுவதற்கும் பொதுமையான லட்சியங்களை, மானுடப் பண்பினை உயர்த்தி நின்றவர்கள்; அருளுணர்வோடு சமுதாயத் தொண்டின் மூலமே ஒருவன் சுயானுபூதி எய்த முடியும் என வழி காட்டியவர்கள். 'சமுதாயத் தொண்டே வாழ்வின் லட்சியம்' என்பதை மக்களுக்கு வழங்கக் கூடிய பயன் மிக்க செய்தியாகக் கருதியவர்கள்.

சர்வக்ஞரின் சத்தான காரிய சாத்தியமான ஞானச் செல்வம் மனித குலத்திற்கு தொடர்ந்து வழிகாட்டியருளுமாக.

மைசூர்
1-8-1989

கே. பி. பிரபு பிரசாத்

அத்தியாயம் ஒன்று

நாடு சுற்றிய ஞானி

ஆண்டில் ஓர் இனிய நாள் அது. சிவ சிந்தனையும் இயற்கை எழில் கூட்டும் இன்பமும் நெஞ்சை நிறைத்திட வாழ்ந்த அவருக்கு எல்லா நாட்களும் இனிய நாட்களே. காடும் வயலும் வீசிய நறுமண நெடியில் காற்று கனக்கிறது. புழுதி படிந்த நெடுஞ்சாலை அவர்முன்னால் விரிகிறது. அவர் வெகுதூரம் நடந்து வந்திருக்கிறார். எனினும் களைப்பில்லை. அந்த நடையில் ஒரு கம்பீரம். சீரான கதி. பாதையோ மனத்தைக் கொள்ளை கொள்ளும், அலைந்து நெளியும் வசீகரம் மிக்க பாதையாக இருக்கலாம்; அல்லது சோர்வை உண்டுபண்ணும் மேடு பள்ள நெரிசலாக விரியும் பொட்டல் சாலையாகவும் இருக்கலாம். அவருக்கு அவர் நடையில் ஒரு திளைப்பு. அந்த திறந்தவெளி உலாவில் ஓர் ஈடுபாடு. ஆனால் தனித்து ஒதுங்கிய வாழ்க்கையை அவர் நேசித்தார் என்பதில்லை. ஜனக்கூட்டத்தை எப்போதும் விரும்பியவர் அவர். பொதுவாக அவரது நீண்ட பாதயாத்திரைப் பயணங்கள் ஒரு கோயிலிலோ, ஒரு கிராமப்புற மடாலயத்திலோ ஓரிருநாள் அவர் தங்கி இருப்பதற்காக தற்காலிகமாக முடியும். அது எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது யாருக்கும் தெரியாது. சில சமயங்களில் வாரக் கணக்கில் ஒரே இடத்தில் தங்கிவிடும் ஆசையும் வருவதுண்டு.

ஒரு கிராமத்தை அவர் அணுகும் போது அனைத்து ஜனங்களும் குறுகிய இண்டு இடுக்குகளில் எல்லாம் திரண்டு அவரை வரவேற்கிறார்கள். அந்த இடத்தைவிட்டுச் செல்லும் அவரை மீண்டும் பல ஆண்டுகளுக்குப் பிறகே அவர்கள் சந்திக்கிறார்கள். அவர் இன்னும் அதே மனிதராகவே காணப்படுகிறார். எவ்வித மாற்றமும் இல்லை. மழுங்க வழித்த மொட்டைத் தலை, பளீரென்ற முகம், ஒளி உமிழும் கண்கள். ஒரு கோவணத்தைத் தவிர அவர் உடுத்தும் ஆடை வேறு எதுவும் இல்லை. உடம்பை மூடி, தோள்களிலிருந்து தொங்கிய முரட்டுக் கம்பளிப் போர்வை ஒன்று. தடித்த, வலிமையான தடி ஒன்றை அவர் கரம் பற்றி இருக்கிறது. இன்னொரு கரத்தில் யாசகனின் ஓடு. மந்தையை விட்டுப்பிரிந்து, எதேச்சையாகத் திரியும் ஓர் களிற்றின் சுவாதீனம் அவர் தோற்றத்தில்.

குழந்தைகள் எப்போதும் அவரை சுற்றி வளைய வருகிறார்கள். அவர்களை மகிழ்விக்கும் அழகான கதைகளை அவர் சொல்கிறார். பலதேசத்துக் கதைகள், அவர்களுக்காக அவர் பாடவும் செய்கிறார். மலைகள், மடுக்கள், காடுகள், ஆறுகள் இவைபற்றி அவர் பாடுகிறார். இளைஞரும் முதியவரும் ஒரு சேர அவர்

உடனிருந்து களிக்கிறார்கள். அவரது பேச்சு ஒரு மந்திரமாக அவர்களை வசீகரித்துப் பிணிக்கிறது. அவர் பேச்சுக்களில் ஒலித்த சாதுரியமும் நகைச் சுவையும் இளம் நெஞ்சங்களைக் கவர்கின்றன. முதியவர்களோ அவற்றை ஞானக்கருவூலமாகக் காண்கிறார்கள். அவர் பேச்சைக் கேட்டுக் கொண் டிருப்பதில் அவர்களுக்கு அளவிறந்த ஆர்வம். அவருடைய வார்த்தைகளில் நகரவாசியின் வாடை இல்லை. அதில் அவர்கள் தங்கள் மனப்போக்கின் துடிப்பையே காணுகிறார்கள். எளிமையும் இனிமையும் கூடிய அந்தப் பொன் மொழிகளில் இருந்த வார்த்தைச் சிக்கனம் அவர்கள் நினைவில் நின்றது. அவர் போன பிறகும் வெகுகாலத்திற்கு அவர் வார்த்தைகளை சொல்லித் திரும்ப திரும்ப தங்களுக்குள் சொல்லிப் பார்த்து அவர்கள் மகிழ்கிறார்கள். ஆசிரமங்களில் வாழ்ந்த இளம் மாணவர்கள் பனை ஓலைச் சுவடியில் அவற்றை எழுதிவைத்துப் பாதுகாக்கிறார்கள்.

அவரது வாழ்க்கையோ கிராமத்து சாதாரண மக்களை மிகவும் கவர்ந்தது. உண்மையாகவே அவர் ஒரு பெரிய மனிதர். போலித்தனங்கள் ஒரு சிறிதும் இல்லாதவர். அவர் சும்மா இருந்து யாரும் அவரைப் பார்த்ததில்லை. வயலில் உழைக்கும் குடியானவர்க்கு உதவி செய்வது முதல் ஒரு குயவனுக்கோ அல்லது ஒரு நெசவாளிக்கோ கைகொடுப்பது வரை ஏதாவது ஒன்றில் அவர் எப்போதும் ஈடுபட்டிருக்கிறார். வீட்டில் தனித்து கிடந்து வேதனைப்படும் ஒரு நோயாளிக்கு சிகிச்சை செய்கிறார் அல்லது போகிற பாதையில் பாரம் தூக்க முடியாமல் கஷ்டப்படும் ஒரு மூதாட்டிக்கு உதவுகிறார். உணவுக்காக யாரையும் நாடிப் போகவேண்டிய அவசியமில்லை. அவரை யாராவது ஒருவர் தமது இல்லத்திற்கு விருந்துக்கு அழைக்கிறார். பெரிய விருந்து ஆயினும் அல்லது பழைய கஞ்சி ஆயினும், வழங்குபவர் மகிழ்ச்சி அடைய அதை அவர் விரும்பி உண்கிறார்.

பகற்பொழுதில் உழைப்பிற்குப் பின் அந்திவேளை. ஓர் ஆசிரமத்தின் முற்றத்திலோ அல்லது கோயிலிலோ பல்வேறு தரத்து கிராமத்து மக்கள் அவரை சுற்றிச் சூழ்ந்து கொள்கிறார்கள். அவர்களில் அறிவு நாட்டம் கொண்ட இளைஞரும் முதியவரும் கூட அவரிடமிருந்து மேலும் அறிவு பெற வருகிறார்கள். அவர் சொல்வதை விரும்பிக் கேட்க ஆசைப்படுகிறார்கள். அவசர அவசரமாக தங்கள் வேலைகளை முடித்துக் கொண்டு, ராச்சாப்பாட்டுக்கு பிறகு அவரைத்தேடி அவர்கள் வருகிறார்கள்.

ஆசிரமத்துத் தலைமைத் துறவியோடு அவர் அமர்ந்திருக்கிறார். நாள் பூராவும் நூல் நூற்பது அல்லது தோட்டத்தில் உழைப்பது, ஆசிரமத்து துறவியர்க்கு வேலை. ஆசிரமத்தைச் சேர்ந்தவர்களுக்கும், தேடிவரும் விருந்தினர்களுக்கும் ஆன தேவைகளைப் பூர்த்தி செய்ய அவர் எப்போதும் குறைவாகவே பேசுகிறார். ஒதுங்கியே வாழ்கிறார். அவரைஅடுத்த அவர் சீடரே, இதர இளைய சீடர்களுக்குப் பாடம் சொல்கிறார்கள்.

கம்பளம் விரித்த திண்ணையின் மேல் சர்வக்ஞரும் ஆசிரமத்தலைவரும் அமர்கிறார்கள். வந்திருக்கும் மக்களைப் பார்த்து சர்வக்ஞர் அந்த ஆசிரமத்தின் தலைவரின் ஆன்மசாதனை பற்றிச் சிறப்பித்துப் பேசுகிறார். அவர் எப்போதும் உடன் இருப்பதால், அவரது பெருமை அவர்களுக்குத் தோன்றாமல் போய் இருக்கலாம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். அதே சமயம் மறைமுகமாகக் கூட ஆண்டில் மூத்த அந்த ஆசாரிய புருடரைப் புகழ்ந்து பேசுவதில்லை. அப்படிச் செய்வதை அவர் விரும்பவில்லை என்பதை சர்வக்ஞர் அறிவார். எனவே எப்போதும், ஒரு பொதுவான தோரணையில் யாரோ ஒருவர் பேசுவதைப் போலவே தனது கருத்தைச் சொல்வார்.

மழித்த தலையும், முரட்டுக் கம்பளிப் போர்வையுமாய், தன் இனத்தைப் பிரிந்து ஏகாந்த வழி நடக்கும் சர்வக்ரு வேழம் இவன்; நம்புதற்குரியன். இப்படிப் பேசும்போது ஆசிரமத் தலைவரை அவர் கவனிக்கிறார். அவர் சொல்வதை புரிந்து கொண்ட அன்பர்கள் தலை அசைத்து ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் கூட்டத்தில் இருந்து ஒருவர் சமீபத்தில் தனக்கு ஏற்பட்ட ஒரு கசப்பான அனுபவத்தை விவரிக்கிறார். மழுங்க மொட்டை அடித்துக் கொண்டிருந்த யாரோ ஒரு சாமியார், அவன் வீட்டில் தங்கி ஒருவாரம் விருந்துண்டவர் அவனை ஏமாற்றிய கதை அது.

சர்வக்ஞர் இப்போது அவனுக்கு உண்மையைப் புரிய வைக்கிறார்.

> "மழித்தலும் நீட்டலும் கண்டு மயங்கற்க;
> மனத் துறவின் மாண்பறிவாய், சர்வக்ஞா !".

யாரோ ஒருவர் இந்த சமயம் பார்த்து கேள்வி தொடுக்கிறார். 'தீயவர்கள் நிரம்பிய இந்த உலகில் நல்லவர்கள் இருப்பது சாத்தியமா?' என்பது அந்த கேள்வி. விழிகளில் ஒரு புத்தொளியுடன், உடனே பதில் அளிக்கிறார் சர்வக்ஞர்

> "வெட்டும் பற்களுடன்
> வாழ்ந்திடும் நாவினைப்போல்
> தீயோர் தமக்கிடையில்
> சேர்ந்திருப்பர் நல்லவரும்
> தெரிந்திருப்பாய் சர்வக்ஞா!"

இப்படியாக தொடங்குகிறது ஞான விசாரம். இறுதியில் வயதான ஒருவர் எழுந்து, சர்வக்ஞரை புகழ்ந்துரைக்கிறார். "சர்வக்ஞர் மட்டும் ஒரு மன்னனின் அரசவையிருந்து தமது ஞானச் செல்வத்தை வழங்குவாரேயானால் முத்தும் மணியும் வழங்கி அரசவைக் கவிஞராக ஏற்று மன்னன் அவரை கொண்டாடுவான்" என்று சிறப்பிக்கிறார். ஒரு சிறிய புன்னகையோடு அந்த பாராட்டை ஏற்றுக்கொள்ளும் சர்வக்ஞர் மேலும் சொல்லுவார்.

" கையில் திருவோடு
கரையற்ற பேருலகம்
காக்கும் கடவுளவன்
உடனிருப்பான் இரந்துண்ணும்
நம்மினும் செல்வர் யார்?
சொல்லிடுவாய் சர்வக்ஞா!"

பணம் காசு நமக்கெதற்கு என்று கேட்கும் அவர், மற்றவர்கள் நினைப்பதுப் போல்தான் அத்தனை பெரிய மனிதன் அல்லன் என்கிறார்.

"பேசும் திறம் அற்றேன்
பெருமான் முக்கண்ணன்
ஆட்கொண்ட அடியார்தம்
அடிமையான் பேசுகின்றேன்
சர்வக்ஞா அறிந்திடுவாய்!"

எத்தனை அடக்கம், எத்தனை ஞானத் தெளிவு! எண்ணற்ற மாலைப் போதுகள் இவ்வாறு கழிகின்றன. எத்தனை எத்தனை கேள்விகள், ஐயப்பாடுகள், சமயங்களில் அவரது சொந்த வாழ்க்கை பற்றி கூட துளைக்கிறார்கள். அவர் பேர் என்ன? பெற்றோர்கள் யார்? ஊர் என்ன? இப்படி எத்தனையோ கேள்விகள். அவற்றை எல்லாம் ஒன்று தட்டிக்கழிக்கிறார் அல்லது புதிர் போட்டு பதில் அளிக்கிறார். அவர் பேர் என்ன? ஒருவருக்கும் நிச்சயமாகத் தெரியாது. வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாக வெவ்வேறு பெயர்களில் அவர் நடமாடுகிறார். அவர் உண்மைப் பெயரைத் தெரிந்து கொள்ள இளைஞர்கள் தொந்தரவு செய்ய, பெரியவர்கள் கண்டிக்கிறார்கள். இதென்ன முட்டாள்தனமான கேள்வி! கால் போன போக்கில் நாடு சுற்றும் சர்வக்ஞஞானி அவர். இடமும் காலமும், கட்டுப்படுத்த முடியாதவர். திரிகாலமும் உணர்ந்த யோகி. இந்த உலகத்தில் அவர் அறியாதது ஒன்றுமில்லை. அனுபவபூர்வமான அவரது அறிவுரைகளைத் தொகுத்து வைத்து இதய பொக்கிஷமாக, விலைமதிப்பற்ற, வாழ்க்கைச் சாகரத்தை அகழ்ந்தெடுத்த ரத்தினங்களைப் போன்ற அவரது கருத்துக்களைப் போற்றுவது ஒன்றே போதாதா? இந்த உண்மையை உணர்ந்தவர்களாக முதியவர்கள் வாழ்க்கையின் அனைத்து பிரச்சினைகள் பற்றியும் கேள்வி மேல் கேள்வியாக அவரைக் கேட்டு அவரது அறிவுரை பெற்றுப் பலனடைகிறார்கள். அவரும் கொஞ்சமும் அயராமல் பெருத்த மகிழ்ச்சியுடன் அவர்களது கேள்விகளுக்குப் பதில் அளிக்கிறார்.

தான் ஊர் பேர் அற்றவர் என்று சொல்லிக் கொண்டாலும் ஜனங்களும் அவரது ஞான வாழ்க்கைக்கு ஏற்ற வண்ணம், அவரைத் தாங்கள் புரிந்து கொண்ட விதமாக அவர்களே அவருக்கு ஒரு பெயரை வழங்கியிருந்தார்கள். அந்தப் பெயர் யாரால் வழங்கப்பட்டது என்று யாரும் அறியார். அவரது ஆழ்ந்த ஞானத்தால், மனம் கவரப்பட்ட ஓர் அன்பரின் உவப்பிலிருந்து பிறந்த பெயராகவும் இருக்கலாம். சர்வக்ஞர் – சகலமும் அறிந்த ஞானி என்பதே அந்தத் திருநாமம்.

ஒரு வேளை யாரோ ஒரு பண்டிதரின் பொறாமை உணர்விலிருந்து கூட பரிகசிப்பாக அந்தப் பெயர் இடம் பெற்றிருக்கலாம். பரிகசிப்பை விடப் பாராட்டு ணர்வின் வெளியீடாகவே அவரது தகுதிக்கேற்ற அந்தப் பெயர் வாய்த்தது எனலாம். ஆனால் அவரோ அந்தச் சொல்லை எண்ணி தனக்குள்ளாகச் சிரித்துக் கொள்வார். அந்த விஷயத்திலிருந்து அன்பர் கூட்டத்தின் கவனத்தைப் பரம் பொருளின் பால் திருப்பிவிடுவார்.

"அனைத்தும் அறிந்தவன் அனைத்துயிரும் படைப்பவன்
உலகம் யாவிற்கும் உகந்த பரம் பொருள்
ஒருவன், ஒருவனே ஓர்ந்திடுவாய் சர்வக்ஞா!"

எப்படிப் பார்த்தாலும் 'சர்வக்ஞர்' என்ற பெயர் அவர் மணி மொழிகளாக உதிர்த்த அற உரைகளுக்கு ஒரு முத்திரையாக அமைந்துவிட்டதை அவரால் உணர முடிந்தது. நாடோடி வகைப் பாடல் சந்தத்தை அடிப்படையாகக் கொண்டு மூன்று வரி கவிதை வடிவில் அவரது கருத்துக்கள் வெளிப்பட்டன. ஈஸ்வர அர்ப்பணமாக எல்லாம் அறிந்த யாருடைய பேரருளால் தர்மஞானம் அவருக்குக் கூடி வந்ததோ அந்தப் பரம் பொருளுக்கு அர்ப்பணமாக அவர் பேசிய இந்த மூன்று வரிப்பாடல்கள் தன்னை விளித்துத் தனக்குத் தானே பேசிக்கொள்ளும் பாணியில் அமைந்தன. அப்படித் தன் பெயரை இணைத்துப் பாடல்களை முடிப்பதில் அவருக்குப் பெரும் மகிழ்ச்சி.

இப்போது சர்வக்ஞர் என்றே அவரை அனைவரும் அறிவார்கள். அந்தச் சொல்லை ஓர் இடுகுறிச் சொல்லாக அவர் ஏற்றுக்கொண்டாரே அல்லாமல் காரணப் பெயராக அன்று. பார்க்கப் போனால் ஓர் அடையாளத்திற்காக உலக வாழ்க்கையில் ஒரு பெயர் தேவைப்படுகிறது. அந்நிலையில் ஜனங்களாகப் பார்த்து வைத்த பெயரை அவர் ஏற்றுக் கொள்வதில் என்ன தவறு?

பலர் அந்தப் பெயர் பொருத்தத்தைச் சுட்டிக் காட்டி மகிழ்ந்தார்கள். "ஐயா எல்லாம் அறிந்த ஞானாசிரியரான நீங்கள் சர்வக்ஞரே." என்று அவர்கள் அவரிடமே கூறி மகிழ்ந்தார்கள். "வாஸ்தவம்தான் நீங்கள் சொல்வது. ஆனால் இந்த அறிவு எனக்கு எவ்வாறு கிட்டுகிறது என்பதை நீங்கள் அறிவீர்களா?" என்று அவர்களைப் பார்த்து அவர் கேட்கின்றார்.

"ஆணவத்தின் விளைவோ நினதறிவு சர்வக்ஞா!
அவரிடமும் இவரிடமும் ஆர்வத்துடன் கேட்டு
இவன் ஞான மலையானான், சர்வக்ஞா!"

சர்வக்ஞரின் அடக்கம் இதுவே. இயற்கையான தன்னுணர்வு அற்ற ஸ்வதர்ம வெளியீடு இது. அவரது மகத்தான தன்னம்பிக்கையின் பிரதிபலிப்பு.

அவரது இதோபதேசங்கள் செவிவழி மனதில் சதா ஒலித்துக் கொண்டிருக்க அவர்கள் வேலை மேல் செல்லும் போதும் அவர்கள் உழைப்பால் களைப்படையும் போதும் சர்வக்ஞரின் பொன்னுரைகள் அவர்கள் நினைவில் பளிச்சிட்டு அவர்களுக்குத் தெம்பூட்டுகின்றன. மீண்டும் அவரை மாலையில் தரிசிக்கக் காத்திருக்கிறார்கள்.

சில நாட்கள் கழித்து திடுமென்று அவர் அந்த ஊரை விட்டுப் போய்விடுகின்றார். புழுதி கிளம்பும் நெடுஞ்சாலையில் வேறு ஏதோ ஒரு கிராமத்தையோ அல்லது ஊரையோ நோக்கி அவர் வழிநடந்து போவதை மக்கள் பார்க்கிறார்கள். முடிவற்ற அவரது பயணம் வடக்கிலிருந்து தெற்கிற்கும், மேற்கி லிருந்து கிழக்கிற்கும் தொடர்கிறது.

இவரே சர்வக்ஞர் – ஒரு கவிஞர்; முனிவர்; இதோபதேசி; பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானபுருஷர். வடமொழி இலக்கியத்தில் பர்த்ருஹரிக்கும், தெலுங்கில் வேமன்னாவிற்கும் தமிழ் இலக்கியத்தில் திருவள்ளுவருக்கும் இணையான இடத்தைக் கன்னட இலக்கியத்தில் பெற்றிருப்பவர். கடந்த நானூறு ஆண்டுக் காலத்திற்கு மேலாகவும் இவரது கீர்த்தி மங்காது ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

ஒரு பிறவிக் கவிஞராக இருந்தும், ஒரு கவிஞனின் புகழுக்காக அவர் பேசியது இல்லை. அரசவை மரியாதைகளுக்காகவும் வெகுமதிகளுக்காகவும் அவர் ஆசைப்பட்டது இல்லை. கவிதை என்பது அவருக்கு வாய்த்த ஓர் இயல்பான சாதனம். அவர் தன்னைச் சுற்றி வாழ்ந்தவர்க்கு வாழ்வு பற்றித் தெளிவு பெறவும் ஒரு சரியான மனப்போக்கை அவர்கள் மேற்கொள்ளவும் தமது கவிதையை ஒரு சாதனமாகப் பயன்படுத்தினார்; அவ்வளவுதான்.

அத்தியாயம் இரண்டு

ஞானக் குழந்தை

சர்வக்ஞரின் சொந்த வாழ்க்கை பற்றி எதுவும் சரியாகத் தெரியவில்லை. அவர் பிறப்பு, தாய் தந்தையர் பற்றியும் ஆதாரபூர்வமான செய்தி எதுவும் இல்லை. அவரது பாடல்களில் இதுபற்றிய எந்தக் குறிப்பும் இல்லை. அவரது சமகாலத்துக் கவிஞர்களோ, பிற்காலத்தவரோ – யாருமே அவரது வாழ்க்கை பற்றி பேசி இருக்கவில்லை. எனவே நம்பத்தக்க வகையில் எதுவும் தெரியாத நிலையில் அவரது வாழ்க்கை வரலாறு ஒன்றை எழுதுவது என்பது எளிதான காரியமன்று.

ஆயினும் 17ஆம் நூற்றாண்டிலிருந்து அவரைப்பற்றி வழங்கி வரும் ஒரு கதை உண்டு. அதற்கு ஆதாரமாக இருப்பது பதினான்கு பாடல்கள். அவையும் கூட எல்லாச் சுவடிகளிலும் இல்லை. சிலவற்றில் மட்டுமே காணப்படுபவை. ஜனன நினைவுகள் என்ற தலைப்பில் அவை அமைந்துள்ளன. தமது பிறப்பு, தாய் தந்தையர், பிள்ளைப் பிராயத்திலேயே தான் வீட்டை விட்டு வெளியேறிய காரணம் ஆகியன பற்றிக் குறிப்பாக இப்பாடல்களில் பேசியிருக்கிறார் எனலாம்.

இதன்படி சர்வக்ஞர் பிறந்த ஊர் அம்பாளூர் (அப்பளூர் என்பது இப்போது வழங்கும் பெயர்) எனத் தெரிகிறது. இது தார்வார் மாவட்டத்தைச் சேர்ந்தது. இவரது தந்தையார் ஆராத்ய பிராமணர். பசவரசா என்பது இவரது பெயர். தாயார் மாலி என்பவர். குயவர் குலத்தைச் சார்ந்தவர். சர்வக்ஞரின் பிறப்பு பற்றிய கதை இதுவே.

தார்வார் மாவட்டத்தில் ஹரேகரூர் அருகில் மாசூர் என்னும் கிராமத்தில் ஒரு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர் பசவரசா. மனைவி அக்கமல் லம்மாளும் அவரும் இனிய இல்லறம் நடத்தி வந்தனர். ஆனால் அவர்கள் மகிழ்ச்சியைப் பூரணமாக்க ஒரு குழந்தை இல்லாத குறை இருந்தது. அவர்கள் மனத்தை மிகவும்அரித்து வந்த விஷயம் இது. தம்பதியர் இயல்பாகவே தெய்வ நம்பிக்கையும், பக்தியும் உள்ளவர்கள். அக்கமல்லம்மா கணவரை காசிக்குப் போய் விஸ்வநாதப் பெருமானைப் பிள்ளை வரம் கேட்டுப் பிரார்த்திக்கத் தூண்டினாள். பசவரசாவும் காசிக்கு யாத்திரை போனார். காசி விஸ்வநாதரின் அருளும் அவருக்குக் கிடைத்தது. மனைவிக்குப் பிரசாதத்தோடு ஊருக்குப் புறப்பட்டார். மிகவும் பாடுபட்டு ஊருக்குத் திரும்பிவரும் பயணத்தின் பெரும் பகுதியை அவர் முடித்திருந்த வேளையில் அம்பளூர் என்னும் இடத்தைச் சமீபித்தார். இரவு வந்து விட்டது. இன்னும் ஆறுகல் தூரத்தைக் கடந்தால் தான் சொந்த ஊரான மாசூரை அடைய முடியும். வானம் வேறு இருட்டிக் கொண்டு வந்தது. மேகங்கள் திரண்டு

எந்த விநாடியும் பொத்து கொண்டு பெய்யலாம் என்ற நிலை. எனவே பயணத்தைத் தொடரமுடியவில்லை. ஊரில் அருகிலிருந்த ஒரு வீட்டில் தங்கும்படி நேரிட்டது. அது ஒரு குயவரின் வீடு. உணவு சமைப்புதற்காக அந்த வீட்டுப் பெண்மணியிடம் சிலப் பாண்டங்களை வாங்கினார். அந்த வீட்டுத் தலைவன் 'மாலன்' என்னும் இளைஞன். 'மாலி' என்பது அவனது மனைவியின் பெயர். 'பசவரசா' அன்றிரவு அங்கு தங்க நேரிட்டபோது மாலியின் புருஷன் தொலைதூர வெளியூருக்குப் பயணம் போயிருந்ததால் 'மாலியே' வந்திருந்தவருக்கு விருந்து உபசாரம் செய்ய நேரிட்டது. விருந்தினர் ஆசாரம் மிக்க ஒரு பிராமணர் என்பதைக் கண்ட மாலி மிகுந்த மரியாதையுடனும், இதமாகவும் அவரை உபசரித்தாள். அவளது பக்தியும், அவளது வசீகரப் பண்பும், இனிய சுபாவமும் பசவரசாவைப் பெரிதும் கவர்ந்தன.

எதிர்பார்த்தபடியே இடியும் மின்னலுமாகப் பெரும் மழை பிடித்துக் கொண்டது. வீடுவேறு எல்லா இடத்திலும் ஒழுகிற்று. மாலி மிகவும் சிரமப்பட்டு வந்திருந்த அதிதிக்கு எந்தவிதக் குறையும் இல்லாமல் கூடவே இருந்து கவனித்துக் கொள்ள நேர்ந்தது. இந்த மனத்தைக் கொள்ளை கொள்ளும் அழகிய மோக உணர்வைத் தூண்டும் இரவுச் சூழ்நிலை இருவர் உள்ளங்களிலும் பெருங்காதல் உணர்வை உண்டு பண்ணிற்று. இதன் விளைவாக ஒரு மாலைப் பொழுதைக் கழிக்க நேர்ந்த பசவரசர் ஒரு வாரத்திற்கு மேல் அங்கேயே தங்கி இருந்து விட்டுப் பிறகே ஊருக்குப் புறப்பட்டார்.

நாட்கள் கழிய, காசி விஸ்வநாதப் பெருமானின் அருளும் திருவுளப் பாங்கும் மாலிக்கு மகப்பேற்றினை அருளின. எதுவும் தெரியாத அவள் கணவன் மாலன் அக்குழந்தை தனக்குப் பிறந்ததாகவே எண்ணி எல்லையற்ற இன்பம் அடைந்தான். அன்பை வாரிப் பொழிந்தான்.

குழந்தையோ கருவில் திருவுடையதாய் விளங்கிற்று. மிகுந்த சூட்டிகையுடன் அறிவுச் சுடராகக் குழந்தை விளங்கிற்று. மாசூர் பிராமணரான பசவரசாவால் தரப் பெற்ற காசி விஸ்வநாதரின் பிரசாத அருளால் பிறந்ததாக தாய் சொல்ல சர்வக்ஞர் பின்னர் அறிந்து கொண்டார். பாலனாக இருந்த போது பசவரசா அவ்வப்போது வீட்டுக்கு வந்து போனதையும் அவர் அறிந்திருந்தார். அதோடு கூட ஊர் மக்கள் அவர் காதில் படும்படியாக இவர் தாய் மாலிக்கும் பசவரசாவிற்கும் இருந்த கள்ளத் தொடர்பை பேசியிருக்கலாம். சாதுர்யம்மிக்க குழந்தையான சர்வக்ஞரின் மனம் அதனால் வேதனைக்கு உள்ளாகியிருக்கலாம். மிகவும் புண்பட்டிருக்கலாம். மக்களின் பரிகசிப்பிற்கும் கேலிக்கும் அவர் ஆளாகியிருக்கலாம். ஆனால் சிறு பிள்ளையான சர்வக்ஞர் தைரியசாலியாகவும் ஒளிவுமறைவு இல்லாத பேச்சுடையவராகவும் இருந்தார். தனக்குச் சரி என்று பட்டதை அஞ்சாமல் தைரியமாகப் பேசும் சுபாவம் உடையவராகவும் தனது அன்னையிடம் அளவற்ற அன்பு கொண்டவராகவும் இருந்தார். அவரது குலத்திற்கும் அந்தஸ்துக்கும் அப்பாற்பட்ட பண்பும் உயர் குணமும் படைத்தவள் அவள் என்பதை அவர் அறிவார். அவளது பல அரிய நற்பண்புகளை எண்ணி

அவர் வியப்பது உண்டு. அப்பபண்புகளைத் தானும் உடையவராக இருந்ததில் அவருக்கு அளவற்ற பெருமை.

ஒரு நாள் மாலனும் மாலியும் பகல் உணவுக்குப் பிறகு அசாதாரணமான ஒரு மனத்திளைப்பில் இருந்தனர். தங்கள் மகவை வருடி, கொஞ்சி மகிழ்ந்து கொண்டிருந்தனர். மாலன் குழந்தை தன்னைக் கொண்டிருப்பதாக விவாதித்தான். மாலியோ அவன் தன் பிள்ளை என்று கொண்டாடினாள். அவ்வப்போது மாலன் குழந்தையைப் பார்த்து விளையாட்டாக "நீ யார் பிள்ளை?" என்று கேட்டான். குழந்தையின் பதில் அவர்கள் முற்றிலும் எதிர்பாராத விதத்தில் திகைப்பூட்டுவதாக இருந்தது.

'எனது தந்தை ஒரு பிராமணனும் இல்லை. இந்த மாலியும் என் தாய் இல்லை. எனது ஈசன் சந்திரசேகர வள்ளல் ஈன்றெடுத்த பிள்ளை நான் என்று பதில் சொன்னார் பாலகனான சர்வக்ஞர்.

தந்தையின் மனம் வருத்தமுற்றது. பெற்றவளின் மனச்சான்றோ அவளை உறுத்திற்று. குழந்தையின் அப்பட்டமான பதில் அவளைத் துணுக்குறச் செய்தது. இனம் தெரியாத பயம் ஒன்று அவள் நெஞ்சை அரித்தது. ஒரு நாள் அவள் பிள்ளையே புருஷனுக்கு அவள் இழைத்த துரோகத்தை வெளிச்சமாக்கி விடுவானோ எனப் பயந்தாள். எனவே பிள்ளையின் அதிகப்பிரசங்கித்தனமான பதிலால் மிகவும் கோபமுற்றவளைப்போல் ஒரு பெரிய நாடகமே ஆடிக்காட்டினாள். இருவரும் சேர்ந்து அவனைத் திட்டி வெளியே துரத்தினர்.

சர்வக்ஞரின் வாழ்க்கை வரலாறு பற்றிய இப்படிப்பட்ட சூசகமான குறிப்புகள் அடங்கிய அவரது பதினான்கு பாடல்களும் இதற்குமேல் ஒன்றும் சொல்லவில்லை. பதினைந்தாவது பாடல் அவரது ஆன்மீகத் தேட்டத்தின் ஆரம்பநிலைக்கு இந்த கட்டத்தில் தாவி விடுகிறது. இந்தப் பாடலில் கவிஞர் சோகத்தோடு வெளியிடும் உண்மை இது. வாழ்க்கை என்னும் பல வண்ணக் கவர்ச்சி மிக்க சிலந்தி அவரை வலைப்படுத்த முயன்றதைப் பற்றி பேசுகிறார். இளமை வெறி, பொருளாசை, ஞானச் செருக்கு ஆகிய மூன்றும் தப்பமுடியாத ருசிகளாக அவரை ஈர்த்தாகக் கூறுகிறார். ஈஸ்வர தரிசனம் அவருக்குள் இன்னும் வாய்த்திராத நிலை அது.

வீட்டைவிட்டுத் துரத்தப்பட்ட சர்வக்ஞர் எங்கே சென்றார்? எத்தனை கஷ்டங்களை அனுபவித்தார்? அவருக்குச் சாப்பாடு போட்டது யார்? அவரை பாதுகாத்தது யார்? கல்வி புகட்டியது யார்? அவரது ஆசானாய் இருந்தது யார்? திருமணம் செய்து கொண்டு இந்த வாழ்க்கையினை வாழ்ந்து பார்த்தவரா? அல்லது நேராகவே துறவுப்பாதையில் தன் பயணத்தைத் தொடங்கியவரா? சந்நியாச வாழ்க்கைக்கு அவர் வந்த விதம்தான் எது? இந்த கேள்விகளுக் கெல்லாம் இன்றுவரை திட்டவட்டமான பதில்கள் இல்லை. மற்ற விஷயங்களாவது எப்படியாவது போகட்டும். அவரது பேர் என்ன பெற்றோர் அவருக்கு என்ன பெயர் வைத்தார்கள் என்பது கூடத் தெரியாது.

தமது வாழ்க்கை பற்றிய மேற்குறித்த பாடல்களில் இதுபற்றி அவர் கூறுவதெல்லாம் இதுவே. தவசால சர்வக்ஞர் என்று அழைக்கப்பட்ட அவர் அதற்கு முந்திய பிறவியில் 'வரருசி' எனும் வடமொழிக் கவிஞராக இருந்தவர். அதற்கும் முந்தி கைலாசத்தில் புஷ்பதுத்தர் என்னும் பெயரோடு சிவனது கணங்களில் ஒருவராக இருந்தவர், என்று இப்படியாக அவரது வாழ்க்கை வரலாறு புராணப் புனைவாக மாறிவிடுகிறது.

அவரது ஆளுமை பற்றிய சில தகவல்கள் அவரது பாடல்களில் காணக்கிடக்கின்றன. சர்வக்ஞரின் வாழ்க்கை போராட்டத்தினையும் அவரது வளர்ச்சியினையும் பாதித்த இந்தக் காலகட்டத்தை நாம் சரியாகத் தெரிந்து கொள்ள இந்தத் தகவல்கள் உதவுகின்றன. ஆனால் இப்படி நாம் அறியும் அவரது வாழ்க்கைக் கதை ஏறக்குறைய ஒரு கற்பனை விஷயம் என்பதை மட்டும் மறக்கலாகாது. இப்படியும் இருக்கலாம், அப்படியும் இருக்கலாம் என்கிற மாதிரியான சூசகமே தவிர நிச்சயமாக வரலாறு அன்று.

இவ்வாறு பெற்றவர்களால் புறக்கணிக்கப்பட்ட சிறுபிள்ளையான சர்வக்ஞர் வீட்டைவிட்டு வெளியேறி வெகுதூரம் சுற்றி அலையும் கட்டாயத்துக்கு உள்ளானார். அவரது பிறப்பைப் பற்றிய கேவலமான ஊர்மக்களின் பேச்சைக் கேட்டுக் கேட்டு அவர் மனம் கசப்படைந்தது இதற்கு முக்கிய காரணமாகும். முன் பின் அறியாத இடங்களில் எல்லாம் கால் போன போக்கில் அலைந்து திரிந்த சர்வக்ஞர் இரக்கமற்ற உலகின் வழிமுறைகளுக்குப் பழக்கமானார். பசிக்கு உணவு கொடுத்த ஒவ்வொருவரும் அவரை முதலில் கேட்ட கேள்வி அவர் என்ன ஜாதி என்பதுதான். அடிநாளில் அவருக்கு ஏற்பட்ட இந்த அனுபவம் பல்லாண்டுகளுக்குப் பின் சதையும் இரத்தமும் கூடியதான இந்த உடம்பின் உண்மையினைத் தெரிந்து கொண்ட நிலையில் அந்தத் தெளிவு இப்படி பாடலாக வெளிப்பட்டது.

> "என்பு தோல் போர்த்திய
> மலமூத்திர குட்டைக்கு
> ஜாதி என்ன சொல்வாய், சர்வக்ஞா,
> ஜாதி என்ன சொல்வாய்?"

ஆயினும் அதே சமயம் இளைஞரான சர்வக்ஞர் இந்த ஜாதி என்கிற விஷயம் ஒரு மனிதனோடு எப்படி ஒட்டிக் கொண்டிருந்தது என்பதை எண்ணி வியந்தார். ஜாதி உணர்வினை அவர் எப்போதும் மதித்ததில்லை. சோற்றுக்கும் நிழலுக்கும் போராடியதைவிட அவர் அறிவு தேடி அலைந்ததே அதிகம் எனலாம். ஞான வேட்கையால் உந்தப் பெற்று ஓர் ஆசாரியனைத் தேடி அவர் ஊர் ஊராக அலைந்திருக்கிறார். அவரது ஆழ்ந்து சிந்தித்த உள்ளத்திற்கு திருப்தி அளிக்கக் கூடிய ஒரு குருநாதன் அவருக்குக் கிடைத்திருக்க வாய்ப்பில்லை. இந்த நிலையில் சோதனைகள் மலிந்ததாகவே அவரது தேட்டம் இருந்திருக்கக் கூடும். எனினும் ஒரு பாடலில் அவர் சொல்வதைப் போல அவரது அறிவு எதிர்ப்பட்ட ஒவ்வொருவரிடமிருந்தும் சிறுகச் சிறுக அவர் சேகரித்ததே. இப்படி அவர் பெற்ற அறிவு திட்டமிட்ட முறையான கல்வியின் மூலமாக அவர் பெற்றதன்று. உலகத்

தோடு அவருக்கு ஏற்பட்ட நேரடி உறவால் அவர் அடைந்ததுதான். இந்த உலகம் அவரது பள்ளி. வாழ்க்கை அவர் படித்த புத்தகம். அனுபவம் அவரது ஆசாரியன்.

அவரது இளமைக்காலத்தில் ஊர் ஊராக அலைந்த போது அவரிடம் அனுதாபம் கொண்ட யாரோ ஒருவர் தாயன்புடன் அவரைப் பேணிக் காத்திருக் கலாம். அவரை வளர்த்தவர் அவரது பள்ளிப்பருவத்தில் அவரை படிக்கவும் வைத்திருக்கலாம். இவ்வாறு சர்வக்ஞர் தார்மீக கோட்பாடுகள் போதித்த வட மொழி நூல்களை ஆழ்ந்து படிக்கும் வாய்ப்பை பெற்றிருக்கலாம். வாழ்க்கைப் படிப்பையே முக்கியமாகக் கருதிய சர்வக்ஞர் முறையான பள்ளிப் படிப்பில் அக்கறை இல்லாதவராகவும் இருந்திருக்கலாம்.

காலப்போக்கில் மணம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கை வாழ்ந்திருக்கலாம்.[1] ஆரம்ப நாட்களில் அவர் வாழ்க்கையை சந்தோஷமாகவும் கழித்திருக்கலாம். ஆயின் வெகு சீக்கிரமே மணவாழ்க்கை என்பது மலர்ப் படுக்கை அன்று என்பதை அவர் உணர்ந்திருக்கலாம். வறுமையோடுகூட மனப் பொருத்தமற்ற மனைவியோடு வாழ நேர்ந்த வாழ்க்கை அவருக்கு வெறுத்துப் போயிருக்கலாம்.

அவரைப் புரிந்து கொள்ளத் தவறிய மனைவியோடு நுட்பமான மன உணர்வு கொண்ட அவருக்கு வாழ்க்கை ஒரு சோதனையாகப் போயிருக்கலாம். ஒருவேளை அவள் ஒரு ஊதாரியாக இருந்திருக்கலாம். வேண்டிய போதெல்லாம் அவளுக்குத் தேவைப்பட்ட பணத்தை தன்னால் கொடுக்க முடியவில்லையே என்ற ஏக்கத்திற்கு அவர் ஆளாகி இருக்கலாம். இதை எல்லாம் சேர்த்து நினைத் துத்தான் பிற்காலத்தில் இப்படி அவர் பாடினாரோ என்னவோ!

“இதம் தரும் மனை,
ஏராளமாய்ப் பணம்,
மனத்துக்குகந்த மனைவி, சர்வக்ஞா,
இவை உனக்கு கிட்டுமாயின்
எங்கோ இருக்கும் சொர்க்கத்தை
எரிமூட்டி கொளுத்திடுவாய்.”

பார்க்கப்போனால் ஒரு நல்ல எளிய இல்லறத்தால் ஏற்படும் மகிழ்ச்சியைக் காட்டிலும் பெரிதாக சொர்க்கத்தில் என்ன இருக்கப்போகிறது!

வறுமையும், சண்டைக்கார மனைவியும் ஒருபக்கம். அவரது ஆன்ம விசாரம் ஒருபக்கம். இரண்டுமாகச் சேர்ந்து அவரை இல்வாழ்வைத் துறக்கச் செய்து ஒரு குருநாதரைத் தேடி, சாந்தியும் ஞானமும் பெற அவரை வழிநடத்தி இருக்கலாம்.

---

[1] இந்தக் கருத்து முழுக்க முழுக்க இந்நூலாசிரியரின் ஊகமே. இங்கும் அங்குமாக பாடல் வரிகளில் கண்ட குறிப்பை ஆதாரமாகக் கொண்ட கருத்து. அகச்சான்றாக ஏற்றுக் கொள்ள முடியாததாகலாம். அவர் இல்வாழ்க்கையை மேற்கொள்ளாத ஒரு பரிபூரண விரக்தர் (துறவி) என்பதே மக்கள் நம்பிக்கை.

ஆனால் ஈஸ்வர ஞானம் சித்திக்கப் பெற்ற ஒரு ஆசாரியனை அடைவது அத்தனை எளிதாக இல்லை. இந்த அனுபவத்தை வெளிப்படுத்தும் பாடல் இது.

'மனைதுறந்து சிரம் மழித்து
தண்டம் கரம் ஏந்தி
வலம் வந்தும் ஏது பயன்,
வழிகாட்டும் ஞானகுரு
வாய்க்கவில்லையெனின், சர்வக்ஞா!'

அவரது வாழ்வின் இந்த தருணத்தில் அவரது வளர்ப்புத்தந்தை மீண்டும் குறுக்கிட்டு அவருக்கு உரிய சரியான ஆசாரியனை இனம் காட்டி இருக்கலாம். அவரைப் பொருத்த வரையில் அவருக்குப் பரம்பொருள்ஞானம் சித்திக்க உதவும் எவரையும் ஆசாரியனாக ஏற்றுக்கொள்ள அவர் ஆவல் கொண்டவராகவே இருந்தார். இதோ அவரே பேசுகிறார்:

'பயணத்தின் எல்லையதில்
பரஞானம் சித்திக்க
வழிகாட்டும் ஆன்மகுரு
யாராய்த்தான் இருக்கட்டுமே,
சர்வக்ஞா, தவறென்ன?'

இப்படி அவரைப்பற்றிய தகவல்கள் எல்லாம் அவரது பாடல்களைக் கொண்டு ஊகிகப்படுவனவே.

திருமணம் ஆகியிருந்ததோ இல்லையோ, சர்வக்ஞர் அவரது வாழ்வின் ஒரு தருணத்தில், அலைந்து திரிந்த அவரது வாழ்வின் ஒரு நிலையில், வீரசைவ மாமுனிவர் ஒருவரைக் குருவாக அடைந்திருக்க வேண்டும். அந்த மகானே அவரை அஞ்ஞான இருளிலிருந்து வெளிச்சத்துக்கு, மாயப் பொய்மையிலிருந்து பிரத்தியட்சத்திற்கு வழிநடத்தி இருக்க வேண்டும். இப்படித்தான் எழுச்சிமிக்க ஞான வேட்கை கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்த ஆண்டகை சர்வக்ஞர் வீரசைவ மார்க்கத்தை ஏற்கும் தீட்சை பெற்றிருக்க வேண்டும். அந்த மகானோடு வேண்டியகாலம் தங்கி வீரசைவ மார்க்கத்தின் தத்துவார்த்தம் பற்றி அயராது ஆய்ந்து தெளிவு பெற்றிருக்க வேண்டும். நடைமுறைக்கு ஏற்ற கடுத்தமற்ற இந்தச் சமயநெறியும் அதன் அனைத்துயிருக்கும் பொதுவான நோக்கும் வியக்கத்தக்க வகையில் அவரது பரந்த மனப்பாங்கிற்கு உகந்ததாக அவர் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். வீரசைவ மார்க்கம் அதன் சரியான கருத்தில் மிகவும் பொருத்தமான வாழ்க்கை வழியாக அவருக்குத் தோன்றியிருக்க வேண்டுமே அன்றி ஏதோ இன்னுமொரு சமயப் பிரிவைக் குறிப்பிடும் சொல்லாக அது தோன்றியிருக்க முடியாது. ஏனெனில் எந்தவித சாதி சமயப் பிரிவினையும் அவர் கடுமையாக எதிர்த்தவர். தான் மேற்கொண்ட வீரசைவ வாழ்க்கை நெறியில் படிப்படியாக அவரது ஆன்மீகத் தேட்டம் வளரலாயிற்று. அவரது ஞான வாழ்வின் சிகரமான சாதனைகளை அவை துல்லியமாகச் சுட்டிக் காட்டுகின்றன. அவருக்குள் கரந்திருந்த தெய்வாம்சத்தை அவரால் அறிந்து கொள்ள முடிந்தது.

இது பற்றி அவர் இப்படி ஒரு பாடலில் பேசுகிறார்.

'பாலில் படுநெய்யாய் பைம்புனலில் தீக்கனலாய்
யாருக்கும் தெரியாமல் உன்னுள் உறைந்திடுவான்
ஈசன் சிவன் என்றே உணர்வாய் நீ, சர்வக்ஞா.

தனது குருநாதரின் பெரும் கருணைத் திறத்தை, அதனால் அவருக்கு சாத்தியமான பேரின்பத்தில் மூழ்கித் திளைத்த மனநிலையில் வியந்துரைக்க அவருக்கு வார்த்தைகள் கிடைக்காமல் போயிருக்கக்கூடும். முழுமுதற் பொருளான சிவபெருமான் மானுட வடிவம் தாங்கி நிலவுலகம் வந்து, ஆன்ம தாகத்தால் ஏங்கித் தவிக்கும் உயிர்களுக்கு வழிகாட்டி இன்பமும், ஒளியும் வழங்கி ஆட்கொள்கிறான் என்று அவர் பேசுகிறார். சர்வக்ஞரும் மனிதர்தான். ஆயினும் வாழ்க்கையில் மற்ற மனிதரினின்றும் வேறுபட்டவர். அவரே இதுபற்றிக் கூறுகிறார்.

'வாழ்வாகும் தீக்கிணற்றில்
வீழ்ந்துபட்ட மாந்தரெல்லாம்
வெளிப்போந்து துயர் மீள
படிநிலையாம் சத்குருவின்
புனிதபதம் வாழ்வளிக்கும், சர்வக்ஞா!'

ஆசாரியர்கள், எங்கும் ஆசாரியர்களே. சர்வக்ஞர் தனக்குத் தானே சிரித்துக் கொண்டாரோ ஒருவேளை! நாடு பூராவும் அவர் சென்று தங்கியிருந்த மடாலயங்கள், ஆசிரமங்கள் அங்கேயெல்லாம் அவர் சந்தித்திருந்த ஆசாரியர்கள் தாம் எப்படிப்பட்டவர்! அவர்களில் பெரும்பான்மையினர் சத்திய ஞானத்தின் அடிச் சுவட்டைச் கூட அறியாதவர்கள். இருப்பினும் அவர்களைப் போலவே உண்மையான ஞான வேட்கையோ அதனை அடையக் கூடிய சிந்தனை வலிவோ அற்ற சீடர்களுக்கு வழிகாட்ட அவர்கள் செய்த வீண்முயற்சி குருவும் சீடருமாய் இருட்டில் தடுமாறிய நிலை.

இத்தகைய ஆசாரியர்கள் ஒருவகை. இன்னொரு வகையான ஆசாரிய அனுபவம் அவரது ஆசிரமத்திலேயே அவருக்கு வாய்த்திருந்தது. இறையருள் பெற்ற ஒருவரை ஆசாரியனாக பெற்றிருந்தும் அவரது பெருமையறியாமல் இருட்டில் குழம்பித் தவித்த சீடர்கள் அவர்கள். அவருக்கு மரியாதை செய்யும் தகுதி கூட அற்றவர்கள். வயிறு புடைக்க உண்டு மகிழ்ந்ததே, வீணில் வாழ்ந்ததே அவர்கள் ஆற்றிய பணி. பன்றியினும் கேவலமான வாழ்க்கை அது.

அவர்கள் பால் பரிதாபம் கொண்டு அவர்களுக்காக வருந்துவதைத் தவிர வேற வழியில்லை அவருக்கு: ஏனெனில்

'ஆவின் மடிவாழ்ந்தும் அமுதின் சுவையறியா
அட்டையாம் மாந்தரிவர்
தம்வாழ்வில் தமக்குரிய சுகமேதும் தான் அறியார்
சர்வக்ஞா!'

என்று ஆதங்கப்படுகிறார்.

இந்த உலகின் அற்ப விஷயங்களில் தீவிர நாட்டமும், பக்குவமற்ற சுபாவமும் கொண்ட இம்மக்கள் பெருநெறிபற்ற வெகுகாலம் பிடிக்கும். அதுவரை சர்வக்ஞர் காத்திருக்க முடியாது. இதுபற்றி அவரே பல இடங்களில் பேசியுள்ளார்.

"நெய் மீண்டும் பாலாக தயிராக
நேர்கின்ற அதிசயம்தான் உலகில் உண்டோ?
நீர்த்திவலை நல்முத்தாய் வடிந்த பின்னர் நீராக
நிலையெய்தல் அவசியமோ?
சர்வக்ஞ தூய நிலை சித்திபெற்றோன்
சம்சாரச் சுழல் வீழ்வதுண்டோ மீண்டும்
குண்டலினி யோகத்தால் முக்தனானோன்
குலவு மனையாட்டிச்சுகம் மீண்டும் நாடுவனோ?
பிரத்யட்ச வாழ்வொதுக்கி பேரின்ப நிலைகண்டார்
புலால் வாழ்க்கைச் சுகம்நாடி மாள்வரோ
சர்வக்ஞா?

சர்வக்ஞரை இவ்வாறு பேசவைத்தது யாது?[2] தவவாழ்வை மேற்கொண்ட பின்னர் இவ் உலக வாழ்வென்னும் பந்தம் சென்றொழிந்த காலத்தின் வெற்று நினைவுதானே! அவற்றைத் திரும்ப நாடுவ தென்பது கிஞ்சித்துமில்லை.

சர்வக்ஞர் தம் குருநாதரின் ஆசிரமத்தை விட்டு வெளியேறும் நாளும் வந்தது. ஒருவேளை தனது குருவின் மரணத்திற்குப் பிறகு தமது ஆன்ம தேட்ட யாத்திரிக வாழ்க்கையை அவர் மேற்கொண்டு இருக்கலாம். வடக்கிலும், தெற்கிலும், மேற்கிலும், கிழக்கிலும் அவர் பார்த்தறிந்த இடங்களை மக்கள் பற்றி அவர் இசைத்த பாடல்கள் விவரிக்கின்றன. அவரது யாத்திரீக வாழ்க்கையின் இறுதி நாட்களில் நிச்சயமாக ஏதாவதொரு இடத்தில் சிலகாலமாவது நிரந்தர மாக அவர் தங்கியிருந்திருக்க வேண்டும். எப்போது எங்கே அவர் உயிர் நீத்தார் என்பது தெரியாத விஷயம். ஹரக்கேரூர் என்னும் இடத்தில் ஒரு கல்லறையை மக்கள் அவருடையதாக அடையாளம் காட்டுகிறார்கள். அவ்வளவுதான்.

சர்வக்ஞரின் பிறப்பு, அவரது தாய் தந்தையர் பற்றி முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. ஏற்கனவே சுட்டியபடி அவரது இளம்பிராய நினைவுகளைப் பேசும் அவரது பதினான்கு பாடல்களில் காணக் கிடைக்கும் குறிப்புகள் தவிர வேறு எந்தவித ஆதார பூர்வமான தகவலும் இல்லை. சில ஆராய்ச்சியாளர்கள் இந்தப் பதினான்கு பாடல்களும் பிற்காலத்தில் இடைச் செருகல் என்று கருதுகின்றனர். முதலாவதாக இந்தப் பாடல்கள் அவரது பாடற் சுவடிகளில் இடம் பெற்றன்ளன. இரண்டாவதாக சர்வக்ஞர் எத்தனைதான் வெளிப்படையாக அப்பட்டமாக உண்மை பேசும் பண்புடையவராக இருந்திருப்பினும் தனது தாயாரைப் பற்றி, பெற்றோரின் காதல் வாழ்வு பற்றி ஒரு மகன் என்ற நிலையில் அவர்களின் பெயருக்கு இழுக்கு நேரும் விதத்தில் பேசியிருப்பார் என்பது சாத்தியமில்லை.

[2] சர்வக்ஞர் இல்லறத்தவராக இருந்து பின் துறந்தவர் என்பதை இது வலியுறுத்துகிறது.

தமது வாழ்க்கையைப் பற்றிய சங்கதிகளை வெளியிடுவதில் எப்போதுமே அடக்கம் காட்டியவர் அவர். எனவே இந்த விவாதத்தை இறுதியாக முடித்து வைக்கும் விதத்தில் அவர் ஒரு பிறவி பிராமண மேதையாகவே இருக்க முடியும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்ட கதையே என்றும் இது பிராமணர்கள் செய்த குறும்பாகும் என்றும் முடிவு கட்டப்பட்டுள்ளது.[3]

மேற்கூறிய கருத்தை மறுப்பது போலவே ஆதரித்துப் பேசவும் இடம் உண்டு. குறிப்பிட்ட மூன்று வரிப்பாடல்கள் பிற்காலத்திய இடைச் செருகல்கள் என்பதாக கொண்டாலும், இந்தப் பிற்காலத்திய பாடல்களில் நாட்டுப்புற இலக்கிய பாணியில் சர்வக்ஞரின் வாழ்க்கை பற்றிய செய்தி இடம்பெற நேர்ந்திருக் கக்கூடிய சாத்தியக் கூறு உண்டு. இப்பாடல்களில் காணப்படும் வெளிப் படையானக் குறிப்புகள் சத்திய நாட்டத்தை தம் வாழ்வின் நெறியாகக் கொண்டிருந்த சர்வக்ஞரின் உயர் பண்பு பற்றியே பேசுவன.

நமது எண்ணத்தில் மதிப்பீட்டில் இதன் காரணமாகவே அவர் சத்திய காம ஜாபாலியாக உயர்ந்து நிற்கிறார். அவரது உண்மையுடைமையே அவர் தம் குருநாதரின் பேரருளுக்கு அவரைப் பாத்திரர் ஆக்கியதோடு மட்டுமின்றி பின்னர் தாமே ஓர் தவஸ்ரேஷ்டராக ஆகின்ற பெற்றியையும் அவருக்கு ஆக்கித் தந்தது.

சர்வக்ஞரின் காலம் இன்று வரை கருத்து வேற்றுமைக்கு உட்பட்டதாகவே இருந்து வருகிறது. அவர் காலத்தைச் சுட்டும் சான்று அவரது பாடல்களிலோ அல்லது சரித்திரக் குறிப்புகளிலோ கிடைக்கப் பெறாமையால் அவரது காலத்தை நிர்ணயம் செய்வது கடினமான ஒரு பிரச்னையாக உள்ளது. பல அறிஞர்கள் தெரிவித்த கருத்துக்களிலிருந்து சர்வக்ஞர் 15ம் நூற்றாண்டிற்கும் 18ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்கக்கூடும் எனத் தெரிய வருகிறது.

சிறந்த ஆராய்ச்சியாளர்கள் இவ்வறிஞர்களின்[4] கூற்றுகளிலிருந்து சர்வக்ஞர் 16ஆம் நூற்றாண்டின் முதல் அறை நூற்றாண்டு கால கட்டத்தில் வாழ்ந்தி ருக்கலாம் என்று உறுதி செய்ய இடமுண்டு. அவரது பாடல்கள் பற்றி முதல் முதலாகப் பேசும் நூல் விரக்த தொண்டாத்திரியர் அவர்கள் தொகுத்த அனாதி வீரசைவ சங்கரஹம் என்பது ஆகும்.

கி.பி. 1560ஆம் ஆண்டு வாக்கில் வாழ்ந்தவர். இதுவன்றி கி.பி. 1504ஆம் ஆண்டைச் சார்ந்த விராட மகாலிங்கர் இயற்றிய கவிதை நூலான போதாம்ருதா சர்வக்ஞரின் கவிதா ஞான தாக்கத்திற்கு உள்ளாகிய படைப்பு என்பது தெளிவாகிறது. இவர் சர்வக்ஞர் காலத்தில் வாழ்ந்த வயதில் மூத்த ஞானியர் ஆவர். ஏன், அவரது குருவாகவும் இருந்திருக்கக் கூடும். இதுபற்றிய குறிப்பு குரு போதாம்ருதத்தில் உண்டு.

---

[3] *கவிஞர் சர்வக்ஞர் - டாக்டர் ஜீ.எஸ். சிவருத்ரப்பா*

[4] இ.பி. ரைஸ், எப். கிட்டல், டாக்டர் ஆர் எஸ். முகளி, ஆர். நரசிம்மாச்சார், ஜி.எம். உமாபதி சாஸ்திரி, சென்னப்ப உத்தாங்கி, டாக்டர் எல் பசவ ராஜூ, சித்தைய்யா புரானிக், எஸ். சிவண்ணா.

எனினும் இதையே முடிந்த முடிவாகக் கொள்வதற்கு இல்லை. இதை உறுதிப் படுத்தப் போதுமான சரித்திரபூர்வமான ஆதாரம் தேவைப்படுகிறது.

சர்வக்ஞரின் பாடல்களிலிருந்து அவரது வாழ்வு பற்றிய செய்தி போதுமான அளவு நமக்குக் கிடைக்கவில்லையாயினும், எந்தெந்தப் பாடல்களில் அவரது வாழ்க்கை வரலாறு பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன என்பதைத் தெரிந்து கொள்வது மிகவும் கடினமாய் இருப்பினும் அவரது ஆளுமை பற்றி இப்பாடல் களிலிருந்து நிறையவே நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

சர்வக்ஞர் மாபெரும் தவசி. சொந்த ஆசாபாசங்களிலிருந்து முழுக்க விடு பட்டவர். சொல், சிந்தனை, செயல் ஆகிய மூன்றிலும் தூயவர். உயிர்கள்பால் பேரருள் ஒன்றையே கொண்டு வாழ்ந்தவர்.

இடம்விட்டு, இடம் மாறி ஊர் ஊராக அன்பும் தொண்டு உணர்வும் கொண்டு உலாப் போந்து ஒரு ஜங்கமரைப் போல வாழ்ந்தவர். தன்னை ஒரு யாசராகக் கருதியவர்; இரப்போர்க்கு ஈதலையும் இல்லார்க்கு இட்டு வாழ்தலையும் போற்றியவர். ஒரு போதும் சோர்வு அறியாதவர். உண்டு கொழுத்தோரை அச்ச மின்றி நிந்தனை செய்தவர். நாளும் உழைத்து தனது தேவைக்கு எங்கு இருப்பினும் சம்பாதித்தவர். எந்த ஒரு குறிப்பிட்ட சமயமடாலயத்துடனும் தொடர் பின்றி வாழ்ந்தவர். நேரிய நடைமுறை ஞானமும் வாய்த்தவர். பரந்த அறிவும் வாழ்வைப் பற்றிய ஆழ்ந்த அகக்காட்சியும் பெற்றிருந்தவர். அவர் தீப்பிழம்பினர். சுதந்திரர். பொரு ளையும், புகழையும் ஒரு போதும் பொருட்படுத்தாதவர். அனைத்துப் போலித்தனத் திற்கும் வைரியாக வாழ்ந்தவர்.

அவரது குருபக்தியும் ஈஸ்வர பக்தியும் ஈடற்றது. வாழ்க்கையில் ஒருதுளியும் பற்றற்ற விரக்தராக அவர் இருந்தபோதிலும் மானுட வாழ்க்கையை நேசித்தார் அவர். நற்செயல் எங்கு காணினும் மனம் உவந்து அதைப் போற்றியவர். அதே போல் தீமையை நேருக்கு நேர் வன்மையாகக் கண்டிக்கத் தயாங்காதவர். மனித குலத்திற்கு ஊறு விளைவிக்கும் எதையும் அவர் எதிர்த்தவர். அற்ப மானுட பலவீனங்களைக் கண்ணுற்ற போது வெறுப்புக் காட்டாதவர். அப்படிப்பட்ட வர்களை அவர் லேசாகக் கடிந்து கொண்டவர். அனைத்து மக்களையும் நேசித்தவர். உயர்ந்தவர், தாழ்ந்தவர், இந்த ஜாதி அந்த ஜாதி என்று மக்களை ஒரு போதும் பிரித்துப் பார்க்காதவர். அவர் குறிப்பிடும் பெண்ணின் கற்பின்மை ஆகிய நிலைகள் பற்றி மனிதர்களின் தவறான கருத்துக்களை அவர் விமர்சித்தி ருக்கும் விதத்திலிருந்து அவரே தாழ்ந்த குலத்தில் பிறந்தவர் ஆகவும், அதுவும் திருமண உறவுக்கு வெளியே அவர் பிறந்ததும், அதனால் சமுதாய ஒறுத்தலுக்கும் பரிகசித்தலுக்கும் அடி நாட்களில் ஆளானதும் தெரிகிறது.

நல்ல காலமாக அவரது ஆன்மீக வாழ்வும் வளர்ப்பும், மனிதர்பால் வெறுப்பு கொண்டவராக அவரை மாறாமல் காத்தன. உலகத்தின் பால் வேஷமோ, கசப் புணர்வோ ஒரு போதும் வளர இடங்கொடுத்தவரில்லை அவர். மாறாக அவரது

பற்றற்ற துறவு மனம் அவரை பரிபூரண தன்னலமற்ற அருளாளராக விளங்கச் செய்தது. அகந்தையை வளர்க்கும் எதையும் அவர் ஒறுத்தார். தன்னைப் பற்றிய சொந்த நினைவுகளையும், தம் பெயர் உட்பட அனைத்தையும் அவர் அசட்டை செய்தார். புதிர்மை என்னும் போர்வையில் தன்னை அவர் முழுதும் மறைத்துக் கொண்டார். சர்வக்ஞர் என்று அவரை மக்கள் அழைத்தபோது அந்த நாமத்தை அவர் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டார். அவரது சொந்தப் பெயரை மறந்து ஒதுக்கி விட அது வசதியாக இருந்தது. மேலும் சர்வக்ஞர் என்ற சொல் சமுதாயத்தோடு ஒன்றிய ஒருவராக அவரை அடையாளம் காட்டுவதாக இருந்தது.

'தான்' என்னும் நிலைமையை அடியோடு துறந்த ஒரு பரிபூரண வாழ்க்கை நிலையை அவர் எய்தியவர் ஆனார். ஜாதி, மதம், இடம், காலம் என்னும் எல்லா வரையறைகளையும் தாண்டி நிற்கும் ஒரு மகத்தான முழு மனிதராக அவர் விளங்கினார்.

"பூதமைந்தும் இணைந்து புணைந்த
இதோ இவனோர் மானுடன்
என இயற்கையவள் ஏற்றிப் போற்றுபவன்
இவனே கண்டாய்?" என்னும் கூற்றுக்கு உரியவர்.[5]

[5] ஜூலியஸ் சீசர் – ஷேக்ஸ்பியர்.

அத்தியாயம் மூன்று

உலக வாழ்வின் உண்மை நிலை

இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியும் அன்று, அர்னால்டு கூறுவது போல், கவிதை வாழ்க்கையைப் பற்றிய விமரிசனமும் அன்று. எனினும் கவிஞன் அறிவானோ அறியமாட்டானோ இலக்கியத்தில் மனித வாழ்க்கை பிரதிபலிப்பது என்பது உண்மையே. அதோடுகூட இலக்கியம் என்பது வாழ்க்கையை மதிப்பீடு செய்யும் ஓர் முயற்சியும் ஆகும். ஆனால் இலக்கியத்திற்கு இவற்றையெல்லாம் மீறியதோர் குறிக்கோளும் உண்டு.

ஞானி சர்வக்ஞரின் அறிவுரைகள் இதைப் புலப்படுத்தும். அவரது பாடல் களிலிருந்து அவர் அறிந்திருந்த சமுதாயம் பற்றிய படப்பிடிப்பு ஒன்றும் கிடைக்க வில்லை. அந்தச் சமுதாயம் வரலாற்றில் எந்தக் கால கட்டத்தைச் சேர்ந்தது என்பதும் தெரியவில்லை. சர்வக்ஞர் தமது காலத்து முக்கிய நிகழ்ச்சிகள், பிரச்சினைகள் எதைப் பற்றியும் குறிப்பிடவில்லை. வடக்கென்றும், தெற்கென்றும், கிழக்கென்றும், மேற்கென்றும் நாடு நகரமெல்லாம் சுற்றித் திரிந்த யாத்ரீகராக வாழ்ந்தார் யோகி சர்வக்ஞர். தமது சில பாடல்களில் இங்கும் அங்குமாகத் தாம் பார்த்து அறிந்த உள்ளூர் பழக்கவழக்கங்கள், உணவு, உடை போன்ற தகவல்கள் பற்றி இங்கும் அங்குமாகக் குறிப்பிட்டிருப்பது அல்லாமல் வேறெதுவும் அவர் பேசியிருக்கவில்லை. பாடல்கள் பெரும்பான்மையும் மனித வாழ்வு பற்றிய அவரது கணிப்பு, உலகப் போக்கு, மனித வாழ்வின் இலட்சியம், கலா நோக்கம், இந்த வாழ்வின் அர்த்தம் பற்றிய தம்முடைய கருத்துக்கள், மனித குலம் அனைத்துக்கும் பொதுவான அவரது அறிவுரைகள் இவற்றையே அவை பேசும். எல்லா இடத்திற்கும், எல்லாக் காலத்திற்கும் மனித இயல்பின் அடிப்படை அம்சங்கள் அனைத்தையும் அலசும் பெற்றி வாய்ந்தவை அவை.

இருந்த போதிலும் அவரது பாடல்களில் காணக் கிடைக்கும் அவரது காலத்தின் மக்கள் ஒழுகலாறுகள், பண்புகள் புறச் சாட்சியங்களாகச் சுட்டும் தகவல்கள், இவற்றைச் சரித்திரச் செய்திகளோடு ஒப்பு நோக்குகையில் அவர் விஜயநகர சாம்ராஜ்ய பொற்காலத்தில் வாழ்ந்தவர் என்பது தெரிகிறது.

விஜய நகரப் பேரரசின் மன்னர்கள் இசை, இலக்கியம், கலை ஆகியவற்றைத் தாமே நேசித்தவர்கள். கலைஞர்களையும், கவிஞர்களையும், கற்றோர்களையும் பேணிப் புரந்தவர்கள். கலைஞர்களும், கவிஞர்களும் போட்டிப் போட்டுக் கொண்டு இவர்தம் அரசவை விருதுகளுக்காக வாழ்ந்த காலம் அது.

சர்வக்ஞரோ இக்கூட்டத்தைச் சாராதவர். வள்ளன்மை மிக்க மன்னர்களை அவர் வாழ்த்தியதுண்டு. ஆனால் அவர்தம் ஆதரவு அரவணைப்பிலிருந்து ஒதுங்கி நின்றவர். அம் மன்னர்களின் கேளிக்கைமிக்க தர்பார்களை அவர் சற்றும் நாடிய தில்லை. மக்கள் இதயமாம் பேரவையில் வாழ்வதிலே அவர் ஆனந்தம் உற்றார். ஓர் பற்றற்ற பார்வையாளராக வாழ்ந்த சர்வக்ஞர், வாழத் துடித்த மனித சமுதா யத்தைப் பல்வேறு நிலைகளில், சூழல்களில் உற்று நோக்கி அறிந்து தமது அனுபவங்களை வழங்கியிருப்பவர். ஒரு தலைசிறந்த கேலிச் சித்திர கலைஞனைப் போல் சிலவாகிய சிக்கனமான எளிய தமது தூரிகைக் கோடு களில் மனிதர்களைப் படம் பிடித்தவர். அர்ச்சகர்கள், ஆருடக்காரர்கள், மந்திர வாதிகள், கணக்கர்கள், கிராம அதிகாரிகள், வரி வசூலிப்போர், கைத்தொழில் வினைஞர்களான தச்சர்கள், கருமான்கள், தையல்காரர்கள், குயவர்கள், வணிகர்கள், வாணியர்கள், லேவாதேவி செய்தவர்கள், உழவர்கள், வேடுவர்கள், செம்படவர்கள் ஆகிய அனைத்து மக்களைப் பற்றியும் கருத்து வழங்கியுள்ளார். எனினும் அவர் புகழ்ந்து பேசியிருப்பது உழவர்களையும், ஆடை வழங்கிய நெசவாளர்களையுமே. சூதாடிகள், குடிகாரர்கள், வேசியர், அவர்தம் வாடிக்கை யாளர்கள், அசடர்கள், கள்வர், போலித் துறவிகள், அவர்தம் சீடர்கள், பிறனில் விழைந்து வாழ்ந்த ஆண்கள், பெண்கள் ஆகியோரை அவர் வன்மையாகக் கடிந்து பேசியுள்ளார். நல்லோர், அறவோர், விவேகியர் உண்மை ஆன்மீக வாழ்வு வாழ்ந்த மகான்கள், சத்தியம் நாடிய அவர்தம் மாணவர்கள், கற்புடன் வாழ்ந்த இல்லத்தரசிகள் ஆகியோரை அளவிறந்து பாராட்டிப் புகழ்ந்து பேசியுள்ளார்.

குடும்ப வாழ்வு பற்றிய படப் பிடிப்பும் அவர் தம் பாடல்களில் அடங்கும். பெண்டிரை ஆட்டிப் படைத்த மூர்க்கர், அவர் தம் கொடுமைக்கு உள்ளான பெண்கள், தனிமைச் சோகத்தில் வாழ்ந்த இளம் விதவைகள்; ஆடவரை வதைத்து வாழ்ந்த மனைவியர், வறிய குடும்பத்தினர், துயருழந்த மானுடர், அமைதியும் இன்ப நலனும் கூடிய அன்பில் திளைத்த குடியினர். சர்வக்ஞர் இவர்கள் அனைவர் பற்றியும் பேசியுள்ளார்.

சர்வக்ஞரின் இத்தகைய பல்வண்ண சமுதாயப் படப்பிடிப்பில் இருந்து நமக்குக் கிடைக்கும், ஒட்டு மொத்தமான பெரும் அனுபவம் அவர் வாழ்ந்த சமுதாயம் முரண்பட்ட வாழ்க்கை நெறிகளில் சிக்கி இருந்த ஒன்று என்பதே ஆகும். பயபக்தி மிகுந்த சாமான்ய மக்களுக்கு தார்மீக ஆதரவும், வழிகாட்டும் உதவியும் தேவைப்பட்டன. போதுமென்ற மனமும், இனிய அமைதி கூடிய குடும்ப வாழ்க்கை அதன் எளிய இன்பங்கள், சௌகரியங்கள், ஒழுகலற்ற கூரை, கணவனைப் புரிந்து கொண்டு அன்பு நலம்புரியும் அன்பு மனைவி, நல்ல மக்கள், ஏவலாட்கள், உடுக்க நல்லாடை வெயிலின்றும் காக்கும் குடை, பாத அணிகள், முக்கிய நாட்களில் உற்றமும் சுற்றமும் விருந்துண்டு வாழும் வாய்ப்பு ஆகிய வற்றிற்காக எளியவர்கள் ஆசைப்பட்ட வாழ்க்கை அது.

பொதுவாக, சமயப் பொறையும், பிறமதத்தினரின் பால் மதிப்பும் நிலவிய காலம் அது. இருப்பினும் உயர்பதவிகளில் இருந்த மாந்தரும், மன்னரும் வீரசைவ வைஷ்ணவ சமுதாயத்தினராய் இருந்ததால் இச்சமயங்கள் ஒருங்கிணைந்து

நன்கு தழைத்தன. வீரசைவ மறுமலர்ச்சிக் காலம் இது. சமணர்கள் செல்வந்தர் களாகவும் வளமைமிக்க வணிகர்களாகவும் விளங்கிய போதிலும் அவர்தம் சமயச் சிறப்பு மங்கத் தொடங்கிய காலம்.

பாரதம் முழுவதும் பக்தி மார்க்கம் ஓர் இயக்கமாகப் பரவத் தொடங்கிய காலப் பகுதி அது. பக்தியும் ஆன்மீக நாட்டமும் சமுதாயச்சூழலாக தழைத்த நாட்கள். அஸ்ஸாமைச் சார்ந்த சங்கரர் வங்காளம் தந்த ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மகான் நிஜகுண சர்வயோகி, தொண்டாட சித்தலிங்கேஷ்வரர், புரந்தர தாஸர் கர்நாடக கனகதாசர் போன்ற மகான்கள் மக்களின் ஆன்மீக வாழ்க்கையை உயிர்ப்பித்து ஓங்கச் செய்த காலம் அது.

அதேசமயம் இதற்கு முற்றிலும் மாறுபட்ட விசித்திரமான பெரும்பான்மை மக்களின் வாழ்க்கையாக நிலவிய சமுதாயக் கூறுபாடுகளும் உண்டு. சமய வாழ் வென்பது ஜாதி வேறுபாடுகள், அர்த்தமற்ற சடங்குகள், பொருளற்ற சம்பிரதா யங்கள், மனிதாபிமானமோ குறிக்கோளோ அற்ற வாழ்க்கைப் போக்காக இருந்த நிலை அது. வகுப்பு உணர்வும், ஜாதிவெறியும் உச்ச கட்டத்தில் இருந்தன. தீண்டாமை, போலித்தன்மை, சமுதாயத்தின் பேரால் நிகழ்ந்த படாடோப கோலா கலங்கள் ஆகியவற்றால் தன்னிலை இழந்து பிற்பட்டுக் கிடந்தது பெரும் பான்மைச் சமுதாயம். ஒருசில மடங்களும் கோயில்களும் நீங்கலாக ஏனைய அனைத்தும் மதிப்பிழந்து கிடந்தன. பேராசைப் பூசாரிகளும் உண்டு. களித் திருந்த போலிச் சாமியார்களும் கேட்பாராற்று உலவிய திரைமறைவுச் சமுதாயம் அது. ஆங்கில நாட்டு தேவாலயங்கள் நிலை பற்றி மகாகவி மில்டன் கூறுவது இங்கு நினைவு கூரத்தக்கது.

“வயிற்றுச் சோற்றுக்காய்
வழி ஊர்ந்து உட்புகுந்த
குருட்டுத் துருத்திகள்!
மேய்ப்பதறியார்!
மேய்ப்பருக்காம் அரிய கலை
வேண்டிக் கற்றறியார்!
ஒன்றுக்கும் தகுதியிலார்!”

இந்த நிலையில்தான் இங்கேயிருந்த வீரசைவ, வைஷ்ணவ மடாலயங் களின் ஒழுகலாறும் இருந்தது. ஆன்மீக நெறி போற்றி, வழி காட்ட வேண்டிய அமைப்புகளின் கதியே இந்நிலையில் இருந்தபோது சாமான்ய மக்கள் உலகச் சுக நாட்டங்களில் மூழ்கிக்கிடந்ததில் என்ன ஆச்சரியம்!

புறவாழ்க்கையின் லௌகீகச் செழிப்பை தார்மீகச் சீர்குலைவு தொடர்ந்தது. பணம் மட்டும் இருந்துவிட்டால் ஒருவன் எந்தவிதக் கேட்டிலும் ஈடுபடலாம். தான் மட்டும் அனுபவிக்க வேண்டும் என்பது நோக்கமாயிருந்தது. காமச் சுகம் நாடி எளியவரும் கூடத்தான் கடன்பட்டு யாசித்து அலைந்தனர். இவரிடையே அதிஉற்சாகிகளாக இருந்தவர் பணம் குவிப்பதற்கும், அரசியல், பதவி அதிகாரம் என்றும் வெளிபிடித்துத் திரிந்தனர். எந்தவித பாவங்களுக்கும் அஞ்சாமல் தமது

கட்டுப்பாடற்ற ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்ள இவர்கள் கொஞ்சமும் தயங்கவில்லை. ஆசையும் வெறியும் சரி எது தவறு எது என்னும் சிந்தனையையே அழித்துவிட்டிருந்தது. பணமே எதையும் தீர்மானித்து பலம் வாய்ந்த பொருளாக விளங்கிற்று.

அரசர்களும் அவர்தம் சேனைத்தலைவர்களும் அதிகார வெறி பிடித்து யுத்த சன்னத்தர்களாய் வாழ்ந்த காலம். மேல் மட்டத்திலிருந்து அடி மட்டம் வரை அரசாங்க அதிகாரிகள் ஊழலில் ஈடுபட்டிருந்தனர். ஏழைகளும், குறிப்பாக பெண் களும், சமுதாயத்தின் நலிவுற்ற பிரிவினரும் ஊழற் சமுதாயத்திற்கு இரையா யினர். வறுமையும் அச்சமும் மக்களை ஒழுங்கீனர்களாய் ஆக்கியிருந்தன. காமமும் வன் முறை வெறியும் சமுத்திரமாகப் பெருகி ஜன சமூகத்தை மூழ்கடித்திருந்தது. 15ஆம் நூற்றாண்டு இத்தாலிய நாட்டின் ஒழுங்கீனச் சூழலுக்கு இதை ஒப்பிடலாம்.

பணக்காரரின் போலி கௌரவம் அறிவாளிகளின் கர்வம், படைவீரர்களின் திமிர் பிடித்த போக்கு, ஏழைகளின் மௌனத் துயரம், அதிகாரிகள், வணிகர்கள் ஆகியோரின் நேர்மையின்மை ஆகியவற்றால் நலிந்துகிடந்த சமுதாயத்திற்கு அறநெறியும், ஆன்மீக புத்துயிர்ப்பும், சமுதாய புனரமைப்பும் உடனடித் தேவை களாக அமைந்தன. இதைப் பூர்த்தி செய்வதே போல் ஞானியரும், கவிஞரும் தோன்றினர். யோகி சர்வக்ஞரும் இத்தகைய சமுதாயப் பிணி போக்க வந்துதித்த மகான்களில் ஒருவராவர்.

அத்தியாயம் நான்கு

மூன்று வரிக் கவிதைகளில் வாழ்க்கைப் படப்பிடிப்பு

சர்வக்ஞரின் இலக்கியப் படைப்புக்களாக இரண்டாயிரத்து நூறு மூன்று வரிக் கவிதைகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. இவற்றில் சுமார் ஆயிரம் பாடல்களே சர்வக்ஞரின் சுய படைப்புகள் ஆகும். இதர பாடல்கள் பின்னால் வந்து சேர்ந்த இடைச் செருகல்கள் ஆகும். இத்தனைக் குறைந்த அளவிலான படைப்புகளோடு கர்நாடகாவில் வான்புகழ் கொண்ட கவிஞர்களில் ஒருவராக சர்வக்ஞர் பிரகாசிப்பது குறிப்பிடத்தக்கச் செய்தி ஆகும். இவரது கவிதைகளின் இலக்கியச் சிறப்பு, சிந்தனை வளம் இவற்றையே இது எடுத்துக் காட்டும்.

இவரது இந்தக் கால கட்டத்தில் சமய கருப் பொருளை அடிப்படையாகக் கொண்ட அளவில் நீண்ட காவிய வடிவத்திலேயே தமது தார்மீக, சமயக் கருத்துக்களை வெளிப்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் கவிஞர். பாடல் இயற்றும் ஆற்றல் படைத்த அறிஞர்கள் பொருள் குவிக்கவோ அன்றாட சுகவாழ்விற்காகவோ புகழுக்காகவோ அரசவையில் இடம் பெறவோ தங்கள் திறமையை வெளிப்படுத்திய காலம் இது. சர்வக்ஞருக்கு இப்படிப்பட்ட ஆசைகள் எதுவும் இருந்ததில்லை. இலக்கிய உலகிலும், தனக்கு ஓர் இடம் தேடிக் கொள்ள அவர் ஆசைப்பட்டதில்லை. ஓர் அறநெறியாளர் சமுதாயச்சீர்திருத்த நோக்கினர் என்றே அவரது பாடல்களிலிருந்து அவரைப் பற்றி நாம் தெரிந்து கொள்கிறோம். எனினும் இப்படிப்பட்ட லட்சியத்தை வரையறுத்துக் கொண்டு தமது வாழ்க்கையை அவர் தொடங்கினார் என்று சொல்வதற்கில்லை. ஒரு குறிப்பிட்ட தார்மீகக் கோட்பாட்டையோ தத்துவார்த்தத்தையோ, வகுத்து அளிப்பது இவரது நோக்கமன்று. கல்வி நோக்கமோ, பண்டிதத்தனமோ இவர் பாடலில் இல்லாத அம்சங்கள். எந்த ஒரு நேரத்திலும் இவர் இவற்றை எழுதியதில்லை. பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒரு கவிஞரிடமிருந்து உணர்வு பூர்வமாக தாமாக வெளிப்பட்டவை இவை. ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு வாய்வழிச் செய்தியாக பரவியவை. மக்களின் நினைவில் கிராமீயப் பாடல்களாக இவை நிலைத்துப் பாதுகாக்கப்பட்டன. சர்வக்ஞரின் அத்யந்த ரசிகர்களால் இவை எழுத்து வடிவம் பெற்றிருக்கக் கூடும்.

தனது பாடல்களுக்கு சர்வக்ஞர் பண்டைய, தீர்ந்த இலக்கிய ரீதியான கவிதா வடிவினை விட்டு எளிய கர்நாடகத்திற்கே உரிய நாட்டுப்புறக் கவிதை நடையாகிய மூன்றுவரிப் பாடல் வகையினையே பின்பற்றுகிறார். பெரும் பான்மையும் கிராமப்புறத்து எளிய மக்களே அவரை நாடி வந்தவர்கள் ஆதலால் அவர்களுக்கு பரிச்சயமான இந்த மூன்றுவரி நாட்டுப் பாடல் வடிவம் அவருக்கு வசதியாக அமைந்தது. மக்களின் அன்றாட வாழ்க்கையில் புழக்கத்தில் இருந்து எளிய மொழியில் குறுகிய அடிகளால் ஆன இம்மூவரிப் பாடல் வகையே மிகவும் அற்புதமாக தனது கருத்தை வெளியிடும் சாதனமாகப் பொருந்தி இருந்தது என்பது அவரது எண்ணம்.

உரைநடையைக் காட்டிலும் கவிதையே அவரது ஆற்றலுக்கு இசைந்த தொரு வடிவமாக அவர் கருதியிருக்கலாம். உண்மையில் ஏற்கெனவே இவ் வகைச் செய்யுள் வடிவம் சமயம் சார்ந்த ஆய்வு, கதை நூல்களில் கையாளப் பெற்றிருந்தது. ஆனால் சர்வக்ஞரின் சொல்லாட்சியில் இதற்கு ஓர் புதிய ஜீவனும் களையும் வந்து சேர்ந்தன. அவரது மந்திரஸ்பரிசத்தில் சக்தி வாய்ந்ததொரு எழில் கூடிய பாடல் வடிவாக இது உருப் பெற்றது. இது விஷயத்தில் அவரது கை வினையின் அருமையதனையும் இதை அவர் கையாண்ட பெற்றியினையும் விஞ்சக் கூடிய சாதனை வேறு யாரும் புரியாத ஒன்றாகும்.

சர்வக்ஞர்தம் பாடல்களின் கருப்பொருள் பலவாகும். அவர் தொட்டுத் துலங்காத சங்கதி ஏதும் இல்லையெனலாம். தமது கவிதைப் பொருளாக அவர் கையாண்டுள்ள பல்வேறுதுறைகளைக் காணும்போது இந்த மூன்று வரி குறுங் கவிதைத் தொகுதியினை ஒரு சிறு கலைக் களஞ்சியமாகவே கருதலாம். மனித வாழ்க்கையோடு தொடர்புள்ள இன்றியமையாத அனைத்து விஷயங்களையும் பற்றி ஏதாவது ஒரு வகையில் பேசியிருக்கிறார். குடும்பம், சமுதாயம், அரசியல், பொதுநிர்வாகம், பொருளாதாரம், விவசாயம், கைவினைக்கலைகள் பல்வேறு தொழில்கள், வாணிபம், சுகாதாரம், மருத்துவம், பேச்சு, இசை, பருவகாலங்கள், பெண்கள், ஆடை, உணவு, வீட்டுத் தேவைகள், கல்வி, தார்மீகம், ஒழுகலாறுகள், ஜோதிடம், வருவதுரைத்தல், தர்க்கம், ஜாதி, மதம், ஆன்மீகம், இத்யாதிப் பொருள்கள் பற்றியெல்லாம் பாடியுள்ளார். இவரது பரந்த மனிதாபிமான நோக்கு முதிர்ந்த விரிந்த ஞானம், தெளிந்த முடிவுகள், பொருள் தெளிவு, அனுபவம் யாவும் இவரது கவிதைகளில் நிரந்தர வடிவம் பெற்றுள்ளன.

இப்பாடல்களைச் சேகரம் செய்ய இவற்றை உரிய தலைப்புகளின் கீழ் தொகுத்து வழங்கிய அன்பர்கள் இவற்றின் ஊடே விரிந்து கிடக்கும் ஒரு பொது அடிப்படையை கண்ணுற்றார்கள். அதற்கிணங்க மூன்று பெரிய அதாவது உலகியல், அறக்கோட்பாடு, ஆன்மீகம் என்ற அடிப்படையில் இவற்றைப் பகுத்து மேலும் இவற்றை 34 துணைப் பிரிவுகளின் கீழ் வரிசைப்படுத்தினார்கள். இந்தத் துணைப் பிரிவுக்கு 'பத்ததி' என்பது பெயர். இதன் பொருள் பலரும் நடந்து தடமாக நிலைத்திருக்கும் பாதை என்பது பொருள் ஆகும். இதற்கு மரபுப் பொருள் உண்டு. படலம் அல்லது காண்டம் என்ற பொருளில் இந்த 'பத்ததி' என்னும் சொல் ஆளப்பட்டிருப்பதின் முக்கியத்துவம் என்ன என்பது தெரியவில்லை.

ஆனால் அறக்கோட்பாட்டினை வலியுறுத்தும் நீதி இலக்கியம் அனைத்திலும் இம்மரபு தொடர்ந்து பின்பற்றப்பட்டிருக்கிறது என்பது உண்மை. இப்பாடல்களின் கருப்பொருள்—இப்பாட்ல்கள்1 அனைத்திலும் ஊடுருவிக் காணப்படுவது உலகியல் அறிவும், வாழ்க்கை பற்றிய முதிர்ந்த ஞானமுமே ஆகும். இதுவே இப்பாடல்களைக் கேட்போரையும், படிப்போரையும் கவர்ந்தீர்த்து அவர்தம் சிந்தனையை தூண்டி விடும் அம்சமாகும். சர்வக்ஞர் வழங்கியிருக்கும் எந்த கருத்தும் உலகம், வாழ்க்கை பற்றிய அவரது ஆழ்ந்த பட்டறிவின் விளைவாக பெறப்பட்டதே ஆகும். இப்பாடல்களைப் படித்த மக்கள் தமது வாழ்க்கையோடு மிக நெருங்கிய தொடர் புடைய ஏதோ ஒன்றை இவை பேசுவதாகவும் தாம் விரும்பி அறியத் துடித்த ஒன்றை இவை தமக்கு வழங்குவதாகவும் உணர்ந்தார்கள். இவை வழங்கிய உல்கியல் ஞானத்தை இவர்கள் மெச்சினார்கள் என்பது உண்மைதான். எனினும் இவர்களைச் சர்வக்ஞரின்பால் ஈர்த்தவை அவருக்கிருந்த அனைவருக்கும் பொது வான அக்கறைகளே. அவரது குரலின் தொனி சில சமயங்களில் மிகவும் அப்பட்ட மாகவும் சில சமயங்களில் ஓர் அந்தரங்க நண்பனின் மென்மை உணர்வோடும் ஒலிக்கும். ஆனால் தமது கருத்துக்களையும் அறிவுரைகளையும் அவர் வழங்கிய விதம் எப்போதுமே உள்ளத்தைக் கவர்ந்து பிணிக்கும் தன்மைத்தனவாக உள்ளன. ஒருமுறை அவர்தம் பாடல்களை கேட்டவர் மீண்டும் மீண்டும் விரும்பி அவற்றைக் கேட்க ஆவல் கொண்டவராக விளங்கினர்.

தம்முடைய அல்லது மற்றவர்களுடைய வெற்று மகிழ்ச்சிக்காக மட்டுமே அவர் தமது பாடல்களை வழங்கினார் என்பதில்லை. மக்களை விழித்தெழச் செய்து அவர்களைச் சிந்திக்கச் செய்வதே அவரது அடிப்படை நோக்கமாகும். தம்மைச் சூழ்ந்து குழப்பிய வாழ்க்கை இருளினூடே உரிய நேரிய பாதை கண்டு தெளிந்து தம்மை வழிநடத்திக் கொள்ள அவர்களது கைகளில் ஒளி பரப்பி நின்ற தீபங்களாக அவரது பாடல்கள் விளங்கின. தாம் பிறர்க்கு போதித்த அறநெறி களைத் தாமே முதலில் கடைப்பிடித்து ஒழுகி தெளிந்த பிறகே மக்களுக்கு அவற்றை அவர் உபதேசித்தார் என்பது அவரது கருத்துக்களுக்கு வலிமையும் வேகமும் ஊட்டின.

அத்தியாயம் ஐந்து

இல்வாழ்க்கைப் பயன்

சர்வக்ஞர் மனித வாழ்க்கையின் அனைத்து அம்சங்கள் பற்றியும் தமது பாடல்களில் விதந்து பேசி இருக்கிறார். உடல், அறிவு, ஆன்மீகம் என்ற அனைத்து நிலைகளிலும் மனிதனுக்கு விளையக் கூடிய இன்பங்கள் பற்றி தமது அனுபவத்தை வழங்கி இருக்கிறார். அவரைப் பொறுத்தவரையில் இந்த உலக வாழ்க்கை ஒருவன் விரும்பி முழுசாக வாழ்ந்து அனுபவிக்க வேண்டிய ஒன்று. வாழ்க்கை பற்றிய சரியான அணுகுமுறை அதனை வெறுத்து ஒதுக்குவது அன்று. அது வழங்கும் அனைத்து நலன்களையும் ஏற்று இன்புறுதலே ஆகும். அடக்கமும் பண்பும் கூடிய ஓர் இயல்பான வாழ்க்கையினை சர்வக்ஞர் புகழ்ந்துரைக்கின்றார். இயற்கைக்கு விரோதமான புலன் ஒடுக்கத்தை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. வாழ்க்கையின் எளிய தீங்கற்ற இன்பங்களை மறுத்தல் அவருக்கு ஏற்புடைத்து அன்று.

அவர்தம் பாடல்களின் ஒரு பகுதி பயனுள்ளதொரு முழு வாழ்க்கை பற்றி அரிய கருத்துக்களை தெரிவிப்பன. இப்பாடல்கள் அனைத்தும் நல்ல ரசனை, உரியதை தேர்ந்தெடுக்கும் சாதுர்யம், ஆரோக்கியமான நோக்கு, இனிய சமுதாய உணர்வு ஆகியனபற்றி பேசுகின்றன. இவர் வழங்கும் எடுத்துக் காட்டுகள், உவமைகள், உருவகங்கள் அனைத்தும் சாதாரண மக்களுக்குத் தேவையான அறிவுரைகள் வழங்கும் தரத்தவை. காரணம் இவை அனைவருக்கும் தெரிந்த அன்றாட வாழ்க்கையின் பல்வேறு நிலை அனுபவங்களின் மூலம் இவர் பெற்ற கருத்துக்களாகும்.

சில பாடல்களில் அன்றாட வாழ்க்கையில் ஒருவன் ஆண்டு அனுபவிக்க கூடிய உடல், அறிவு, ஆன்மீக திளைப்புகள் பற்றிய பரிவுணர்வைக் காணலாம். இன்பத் திளைப்பு என்பது அவை விளையும் பொருள்களில் அல்லாமல் அவற்றை நாம் அனுபவிக்கும் முறையிலேயே அடங்கி உள்ளது என்பதை எடுத்துக்காட்ட அவர் மறந்ததில்லை. அவருக்குள்ளிருந்த உலகியல் விரும்பி (சுகபோகி) வாழ்க்கையின் மிக அற்பப் பொருள்களாகக் கருதப்படுபவைகளிலிருந்தும்கூட மனிதனுக்கு வாய்க்கக் கூடிய எளிய சுகங்களை இவர் புறக்கணிக்கவில்லை. உரிக்கும் வெயிலில் உதவும் குடை, நெய்யுடன் மணக்கும் இனிப்பு, நொறுங்கிய அப்பளத் துண்டுகள், வறுத்த கடலை, பாயசம் போன்ற பொருள்கள்கூட அவருக்கு இன்பம் பயத்தவை. அறநெறி வழுவா புலமை, மாண்புடைப்

பெண்ணின் பண்புமிக்க கணவன், ஞானம் ஊட்டும் ஆன்றோர் வார்த்தைகள் இவற்றையும் அவர் நயந்து பாராட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது. நல்ல மனித நேய உறவுகள், அவற்றால் பெறும் இனிய சமுதாய வாழ்வு இவற்றுக்கான விரும்பத்தக்கதொரு ஒழுகலாற்றினை அவர் குறிப்பிடுகிறார். இனிய சொல், நலன் கூட்டும் சான்றோரின் நட்பு, அறிவிலிகளோடு வீண்வாக்குவாதத்தை ஒறுத்தல், குடி, போதை முதலான தீய பழக்கங்களை விலக்கல் ஆகியவற்றை அவர் வலியுறுத்துகிறார். பிறர் கருத்து, உணர்வினை மதித்து ஒழுகல் இவரது யோசனைகளில் அடங்கும். ஈகை சர்வக்ஞர் மிகவும் போற்றிய பண்புகளில் ஒன்றாகும்.

"வயிற்றுக்குச் சோறிடல், வாய்மை உரைத்தல்
பிறர்நலன் தன்னலமாகக் கொள்ளல்
இவை இங்கே உம்பர் உலகாக்கும்.
இதிலொன்றும் வியப்பில்லை, சர்வக்ஞா"

"முழு மனத்துடன் ஒருதுளி வருத்தமுமின்றி பிறர்க்கு வழங்கிடுவாய். தக்கார்க்கு தயக்கமின்றி மௌனமாய் விளம்பரமின்றி தம்பட்டம் அடிக்காமல் வழங்கிடுவாய். காசோ, கைப்பொருளோ வறியவர்க்கும், தேவை உள்ளோர்க்கும் அளித்திடுவாய். இவற்றுக்கெல்லாம் மேலான அறமாம் பசித்தோர்க்கு உண்டி வழங்குதல். செல்வம் உனை நாடி வரும்போது ஈந்து புரந்திடுவாய். மதிப்பும் அந்தஸ்தும் உனைத் தேடி வரும். ஈசன் உறை கைலாசம் இங்கு உனை நாடி வரும்" என்கிறார். அழுக்காறு, அவா, வெகுளி, காமம் இவற்றை ஒருவன் நிச்சயமாக விலக்கல் வேண்டும்.

ஷேக்ஸ்பியரை போலவே சர்வக்ஞரும் கடன் வாங்குதலுக்கு எதிராக எச்சரிக்கை செய்கிறார். கடன் சொல்லொணா தொல்லைகளுக்கு காரணமாவதைச் சுட்டிக்காட்டி கடனால் வரும் இன்பம் போலியான தற்காலிகமான இன்பமே என்பதை விளக்குகிறார்.

நோயற்ற வாழ்வே வாழ்க்கையின் இன்றியமையாத சொத்து. தகுந்த நல்ல உணவு, வைத்தியரை நாடிச் செல்லும் அவசியமின்றி காக்கும் என்பது சர்வக்ஞரின் கூற்று. இதற்கான சில எளிய விதிகளை இவர் குறிப்பிடுகின்றார். "பசிக்காமல் புசிக்காதே, பசி வந்திடின் புசியாமலும் இருக்காதே. மிகச் சூடாகவும் உண்ணாதே. மிகக் குளிர்ந்த உணவும் ஏற்காதே. பழுதுற்ற அன்னமும் கொள்ளாதே. வைத்தியரின் தயவில் வாழாதே." இவை சர்வக்ஞர் வழங்கும் ஆரோக்கிய விதிகள். "சத்துள்ள தான்யங்களையே தேர்ந்து உட்கொள்வாய். உடல் நலமும் பலமும் நிச்சயம் உனக்கு வாய்க்கும். அளவறிந்து ஒருநாளைக்கு இரு வேளை மட்டுமே உண்பாய். கண்டபடி மீதூண் கொள்ளுதல் நோய்க்கும் மரணத்துக்கும் வழிகோலும்.

இத்தகைய பயனுள்ள குறிப்புகள் உலக ஆசைகள் அனைத்தும் ஒழித்தவராக சர்வக்ஞர் இருந்தும் வாழ்க்கையில் அவருக்கிருந்த நம்பிக்கையை

புலப்படுத்தும். பந்தங்களுக்கு அப்பாற்பட்ட பொதுநல நோக்கோடு மக்கள் நலனை மனதில் கொண்டு அவர் வழங்கிய அறிவுரைகள் ஆகும். இவை உலகில் வாழ்வாங்கு வாழ மக்களை நெறிப்படுத்தும் தலையாய நோக்குடன் இவ்வையக மக்கள் இனிதே வாழக்கூடிய இடமாக விளங்குவதற்கு ஏற்ற அறிவுரைகளையே அவர் வழங்கினார். ஏழைகள், கல்லாத எளியவர்கள், சமுதாயத்தில் ஒடுக்கப்பட் டவர்கள் ஆகியவர்களிடமே என்றும் சர்வக்ஞர் அன்பு வைத்திருந்தார். மனித இயற்கையின் உயர் பண்புகள், பலவீனங்கள் ஆகியவற்றை இவரைவிட அதிகமாக அறிந்திருந்தவர் யாரும் இலர். தன்னைச் சுற்றியிருந்த உலகை ஓர் ஆய்வுணர்வோடு• உற்று நோக்கி அச்சமோ தயவுணர்வோ இல்லாமல் தாம் நினைத்ததை, உணர்ந்ததை வெளிப்படுத்தியவர் அவர்.

நிலையற்ற நம்பத்தகாத ஏன் தீமை பயக்கக்கூடியதான இவ்வுலக வாழ்க்கையை ஒரு தத்துவஞானியின் அனுபவத்தோடு வேறு எவரைக் காட்டிலும் அதிகமாக புரிந்து வைத்திருந்தவர் சர்வக்ஞர். எனினும் உலகின்பால் அவருக் கிருந்த அன்பு வியந்து பாராட்டற்குரியது. ஒருவன் உலகியல் வழிமுறைகளை அறிந்தவனாக எந்த பொருளினுடையவும் மதிப்பினை உண்மையாக அறிந்தவனாக இருப்பது இந்த வாழ்க்கையின் பிரச்சினைகளை மிகத் திறமையாக எதிர்நோக்கும் தகுதி படைத்தவனாக விளங்குவதாகும். அமைதியும் ஆனந்தமும் உலகில் வாழும் கலையை அறிந்தவனுக்கே வாய்க்கும். மனிதன் சமுதாயத்தின் ஓர் அங்கம். எனவே அவனது மகிழ்ச்சிகூடிய சமுதாய வாழ்க்கை அவனைச் சுற்றியுள்ள மக்கள் அனைவரையும் நேசிப்பதில் அடங்கும்.

> "யாதும் ஊரே; யாவரும் கேளிர்
> எமதன்னை பூமி யாம் வணங்கும் தேவதையாம் எனில்
> இங்கு யாரையான் வெறுப்பேன், சர்வக்ஞா !"

என சர்வக்ஞர் மலைக்கின்றார். தம்மை ஓர் உலகப் பிரஜையாக அவர் பிரகடனம் செய்கிறார். உலகனைத்தையும் ஒரு குடும்பமாக நோக்கும் பண்பும், அதனோடு தன்னை பரிபூரணமாக இயைவித்துக் கொள்ளும் உணர்வும் கொண்டவர் அவர். ஜாதி, வகுப்பு வேறு பாடுகள் குறுகிய தன்னல அக்கறைகள் அனைத்தையும் ஒறுத்து விலக்கியவர் அவர்.

> நாம் உறையும் நானிலமும் நாஅருந்தும் நன்னீரும்
> வளர்தீயும் வான்ஒளிர் கதிரோன் அவனும்
> வையமுளோர் யாவர்க்கும் பொது வென்றறியா
> பல்குழுவும் பாழ்செய்யும் சாதிகளும்
> இங்கெதற்கு, தெளிந்திடுவாய், சர்வக்ஞா"

என்பார் அவர். உலகின் உண்மை நடப்புகளை எதிர்த்துநின்று அவற்றி னின்றும் பின்வாங்கிச் செல்லாமல் அவற்றைச் சமாளிக்கும் உறுதி வேண்டும். இந்த உலகின் வழிமுறைகள் மோசமானவை. பணத்திற்கும் அதிகாரத்திற்கும்

காமமும் ஆசையும் அடிமைகள். அரசியலோ சமயமோ எதுவாயினும் அங்கே பொறுப்பிலிருப்பவர்கள் ஊழல் மனிதர்களாக இருக்கின்றார்கள். பெண், பொன், மண் இவ்வாசைகளுக்கு வசப்படாதோர் மிகச் சிலரே.

"பொங்கெழில் மாதர்கண்டும்
பொன்னிறை அணிகள் கண்டும்
கனி நிறை சோலை கண்டும்
காமுறான் யாரே இங்கே, சர்வக்ஞா !"

என்று உசாவி சிந்திக்க வைக்கிறார் சர்வக்ஞர்.

நெஞ்சில் கரந்துறையும் இவ்வாசைகள் தம்மை வெளிப்படுத்திக் கொள்வதில்லை. ஒவ்வொரு மனிதனும் தன்னை நல்லவனாகக் காட்டிக் கொள்ளவே, மற்றவர்களால் அப்படி நம்பப்படுவதையே விரும்புகிறான். ஒவ்வொருவனும் அறநெறிகள் பற்றி உரத்தக் குரலில் பேசுகிறான்.

"உதட்டளவில் தூயவர் மாமுனிவர்
உலகில் நிறைந்துளார் எனினும் இங்கே
மனமுலைக்கும் கூர்முலை மங்கைக்காய்
வசமிழந்து துளியேனும் பொன்னுக்காய்
விரைந்தலையா மக்கள் யார் சர்வக்ஞா !"

பொன் தீயதோர் கவர்ச்சியுடையது. முற்றும் துறந்த முனிவனையும் அந்தச் சொல்லைக் கேட்ட மாத்திரத்திலேயே கெட்டவனாக்கிவிடும் தன்மைத்தது. நெறிதவறா மனையாளையும் விவேகிகளையும் கூட மனங்கெட்டு தடுமாறச் செய்ய வல்லது.

உண்மையிலேயே பொன்னைப் பொறுத்தவரையில் நன்று தீதாகும் தீது நன்றாகும். தீயோர் செழித்து நலம்பெறவும் நல்லோர் துயருறவும் பொன்னே காரணம். பொன்னைப் பற்றிய மதிப்பீடு தவறானது; முறையற்றது. செல்வந்தர் அவர்தம் செல்வம் ஒன்றுக்காகவே மதிக்கப்படுகின்றனர். ஏழையர் அவர்தம் ஏழ்மை காரணமாகவே இழிவு செய்யப்படுகின்றனர். பழிக்கப்படுகின்றனர். அவமான த்துக்கு உள்ளாகின்றனர்.

"நேரிய வழி நடந்தும்
நீதி இங்குனக்குக் கிடைப்பதில்லை
நாய்க்குணம்[1] கொண்டலோபர்
நாயினும் கடையர் மனிதர்
நயந்திது தேர்வாய், சர்வக்ஞா !"

ஆட்சியிலிருப்பவர்கள் தகுதியற்றவர்களாகவோ, பலவீனர்களாகவோ கொடியவர்களாகவோ இருந்துவிடும் பட்சத்தில் ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை

[1] காமம், சினம், ஆசை, பாசம், கர்வம், பொறாமை இவை மனிதனை கெடுக்கின்ற ஆறுவிதமான நாய்க் குணங்கள் எனக் கூறுவர்.

பின்னும் மோசமடைகின்றது. வாழ்க்கைச் சுகங்களுக்கு வசப்பட்டு தீநெறியாளர், சுயநல அதிகாரிகள் இவர்களால் தவறான வழிகாட்டப்படும் நிலையில் உள்ள வர்கள் மக்கள் நலனை புறக்கணிக்கும் ஆட்சியாளர்களாக மாறி, நாட்டின் சாபக் கேடாக விளங்கும் நிலைமை உருவாகிறது. ஆசிரமத்துத்தவசிகள், ஆலயத்து அர்ச்சகர்கள் கூட இந்நிலையில் தங்கள் நெறிபிறழ்ந்து உண்டு களிக்கும் சோம்பர் வாழ்வுக்கு பலியாகிறார்கள்.

சர்வக்ஞர் நமக்கு வழங்கும் வாழ்க்கைப்பற்றிய இந்த பிரத்தியட்சப் படப்பிடிப்பு ஒருதலை பட்சமான, உலக வாழ்க்கையின்பால் அவருக்கிருந்த வெறுப் பினின்றும் விளைந்தது அன்று. அதே சமயம் வாழ்வின் இனிய அதன் மறு பக்கத்தை அவர் அறியாதவரும் அன்று. நல்லதும் கெட்டதும் பிரிக்கவொண்ணா விதத்தில் கலந்து நிகழ்வதே என்பது அவருக்கு நன்கு தெரியும். வாழ்க்கை என்னும் குழம்பிய நீரோட்டத்தில் தங்கள் நம்பிக்கையென்னும் நங்கூரத்தை முற்றிலும் இழந்துவிடாத நன்மக்கள் இன்னும் பலரிங்கே உள்ளனர் என்பதுதான் துயரம்சாம்பிய இவ்வாழ்க்கையில் மிகவும் தெம்பூட்டக் கூடியதாக இருக்கும் ஓர் அரிய நிலையாகும். இவர்கள் நல்லது கெட்டது அறியக்கூடிய விவேகிகளாக தொடர்ந்து விளங்குகின்றனர். இருட்டினின்று ஒளியையும் தீயதினின்று நல்ல தையும் பிரித்தறியும் பண்புடையவர்கள் இவர்கள். இவ்வுலகம் தொடர்ந்து நிலை பெற்று இனிமையும் மகிழ்வும் கூடியதாக இலங்குவதற்கு இதுவே காரணம். இல்லையெனில் என்றோ இங்குவாழ்வு முடிந்து போய் இருக்கும். மேலும் உலகைத் திருத்த முற்படுமுன் ஒருவன் தன்னை முதலில் திருத்திக் கொள்வது எளிமையும் அறிவுடைமையும் கூடிய செயலாகும். சர்வக்ஞர் மக்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் அவர்கள் நன்னெறி தேர்ந்து பயின்று வாழவேண்டும் என்பதே. ஒரு தனிமனிதனுடைய நலனைப் போலவே மனித சமுதாயத்தின் ஒட்டு மொத்தமான நல்வாழ்வும் ஒருவன் தான் தேர்ந்தெடுக்கும் முறையினையே சார்ந்துள்ளது. நன்னெறி பற்றிய தனது கருத்தினை ரத்தினச் சுருக்கமாக இவ்வாறு பேசுவார்.

"சத்தியமே நற்பண்பின் சாரமாகும்
அசத்தியம் பாவத்தில் விளைவதாகும்
ஏய்ப்பும் சிறுமதியும் ஏற்ற வழி ஆகாதிங்கு
சத்தியத்தை பற்றி நிற்பாய்
சரீரத்தை நம்புகில்லாய், சர்வக்ஞா."

நற்செயல்கள் புரிவதன் மூலமே ஒருவன் நல்லபலன் வாழ்க்கையில் எய்த முடியும். பாவச் செயல்களினின்றும் வருங்கால நற்பயன்கள் விளைவதில்லை. நிகழ்கால பொருட் செழிப்பு ஒருவனை அவனது கடந்த கால தீவினையினின்றும் காக்குமோ என்பது சர்வக்ஞரின் கேள்வி.

"இன்றும் என்றும் இனிப்பது வாய்மையே
வாய்மையும் பொய்மையும் கலந்துறையும்
வாய்மையதே இம்மையிலும் மறுமையிலும் வெற்றிபெறும்
வளமை இது கண்டிடுவாய், சர்வக்ஞா !"

எனவே ஒருவன் உண்மையை சிக்கெனப் பற்றிக் கொண்டு பொய் சொல்ல நாணும் தகைமை உடையவனாக விளங்குதல் வேண்டும்.

"பொய்த்துயிர் வாழ்தலின் பசித்துயிர் துறத்தல் மேலாம்
செப்பிடும் பொய்கள்தாம் சேர்த்திடும் பெருஞ்செல்வம்
பன்றிமகிழ் உளைச் சேற்றினும் இழிந்ததாம், சர்வக்ஞா !"

என்று மேலும் பொய்மையைச் சாடும் சர்வக்ஞர் உண்மை விளம்பி ஒருவன் உலகத்தின் மரியாதைக்கு மட்டுமல்ல இறைவனின் அன்பிற்கும் பாத்திரமாகிறான் என்கிறார்.

"வாய்மையுடை நல்லோனை
வாழ்த்தி போற்றும் வையமெலாம்
தாயன்பிற் குரியனாம் அத்தனயனை
தன்னிதயம் ஏற்றிவைத்துத்
தன்னளி செய்வான் ஈசனும்"

என்று மேலும் பேசுகிறார்.

சர்வக்ஞர் தனிமனிதனின் உயர்வை போற்றி ஆதரித்தவர். இந்த தனி மனிதனின் உயர்வு, பெருமை, சுதந்திரம், சுயமரியாதை ஆகிய இரண்டு விஷயங்களைச் சார்ந்து நிற்பது என்பதை சர்வக்ஞர் வலியுறுத்துகிறார். தனிமனிதனுக்கு மட்டுமல்ல ஒரு தேசத்துக்கே சுதந்திரமென்பது மிகமிக இன்றியமையாத ஒன்றாகும்.

வீணைவளர் இசை நன்று
மந்திரியோடு நட்பு நன்று
இங்குன் தேகமெனும் பொறியதனை
இயக்குவான் ஈசனருள் நன்று
இவற்றுக்கெலாம் மேலாய் நிற்கும்
இவ்வுலகில் நின்னுடை உரிமை வாழ்வு

இன்னொருத்தர் சித்தப்படி வாழா சுதந்திரன் தனது ஆசைகளை ஆண்டு அடக்கும் பலவான் தன் மனச்சான்றின் ஆணைப்படி மட்டுமே ஒழுகுபவன் தன்னுயிர் போல் மன்னுயிரை நேசிப்பவன் எவனோ அவன்தான் சுதந்திர வாழ்வின் சரியான அர்த்தத்தையும் மதிப்பையும் உணர்ந்தவன் ஆவான்.

சுதந்திரம் என்னும் சொல்லின் மூலம் சர்வக்ஞர் நமக்கு உணர்த்த விரும்புவது வெறும் அரசியல் உரிமையை மட்டுமன்று. பிறர்க்கு கடமைப்பட்டு வாழ்வதும் அன்று. உண்மையான சுதந்திரமென்பது ஆசைகளினின்றும் முற்றும் விடுபட்டு எந்தவிதமான பலவீனமோ தன்வசமிழக்கும் மனநிலையோ இல்லாமல்

வாழ்தலேயாகும். சர்வக்ஞரின் கூற்றில் அன்றாட வாழ்க்கையின் வசதிக்காக ஒருவன் தன் *சுயமரியாதையை* இழத்தலை, *பிறர்க்கு* தன்னை ஆட்படுத்திக் கொள்ளுதலை ஒருபோதும் செய்யக் கூடாத காரியம் என்று மிக வன்மையாக அவர் தெளிவுபடுத்துவது விளங்குகிறது. அடிமையாய் அரண்மனையில் வாழ்வதை விட சுதந்திர புருஷனாய் ஒரு குடிசையில் வாழ்வது மேல் என்பது அவரது அழுத்தமான கருத்தாகும்.

"அடிமையாய் ஆவின்பால் அருந்துதலின்
அரைப்பட்டினி சிறுகூழ் உண்டு வாழ்தல் மேல்
நாணிழந்து நல்விருந்து சுவைப்பதினும்
நாட்பட்டு நலமிழந்த சோறுண்டல் மேல்,
சர்வக்ஞா, தேர்ந்திடுவாய் !"

மனித வாழ்வின் முன்னேற்றத்தின் முதல்படியே கல்வி என்பார் சர்வக்ஞர். வெற்று அறிவு சேகரிப்பதிலும் நற்பண்புகளை வளர்த்துக் கொளல் மிகவும் அவசியம் என்பது அவரது கருத்தாயினும் கல்வியினால் ஒருவன் எய்தக்கூடிய புலமையின் முக்கியத்துவத்தை அவர் உதாசீனம் செய்தவரில்லை. பெற்றோரின் முதற் கடமை குழந்தைக்கு கல்வி வழங்கலே என்கிறார் அவர். அதைப் போலவே ஒவ்வொரு ஆசிரியனும் மாணவர்க்கு நல்வழிக் காட்டலையே தனது முதற் கடமையாக கொள்ள வேண்டும் என்கிறார்.

"*பெறும் கல்வியே பிதாவும் அன்னையுமாம்*
பேணும் அறிவுடைமை உடன் பிறப்பாம்
உற்றபோது உதவிடுவான் நண்பனவன் உறவாவான்
இன்பநிலை எய்தி வாழும் இடமதுவே தாய் நாடாம்
ஈதறிவாய், சர்வக்ஞா"

எத்தனை வறியவனாய் இருப்பினும் கல்வி உடையவனாக மட்டும் இருந்து விடின் இங்கும் அங்கும் எவ்விடத்திலும், ஏன் மனிதவாடையற்ற மலைத்தொடரின் உச்சியிலும் ஒருவன் இனிதே வாழ முடியும். அறிவே ஒருவன் அடையக்கூடிய உண்மைச் செல்வம், என்றும் நிலைக்கும் செல்வம். உடன்பிறந்தோர், கள்வர், *மன்னர் யாராலும் கவர முடியாத ஒன்று.*

நூல்களை அவற்றின் உட்கருத்தினை கிரகிக்காத நிலையில் அவற்றின் பக்கங்களை மட்டுமே படித்துக் கொண்டிருப்பது கரும்பின் சாரமற்ற இலைகளை சுவைப்பதற்கு ஒப்பாகும். அன்றி ஒருவன் பொருள் உணர்ந்து படிப்பதென்பது கரும்பின் சுவை உணர்ந்து அதன் ரசத்தினைப் பருகுவது போலாகும். பேச்சுக் கலை கல்வியின் ஓர் அங்கமாகும். எதை எப்போது எப்படிப் பேசவேண்டும் என்பதை ஒருவன் நன்கு தெரிந்திருக்க வேண்டும். நல்ல வார்த்தைகள் நல்ல நண்பர்களைக் கொண்டு வரும். இதமான உறவுச் சூழலை உருவாக்கும், ஏன், பேச்சுத்திறன் பொருளையும் நலச் செழிப்பையும் கூட ஒருவனுக்கு வழங்கும். எனவே நல்ல சொல் விலையுயர்ந்த ரத்தினத்துக்குச் சமம். பேசும் இடமறிந்து பேசுவாய். குறைவாகப் பேசுவாய். இனியவே கூறுவாய். பொருள் உணர்ந்து பேசுவாய் என்பது அவரது அறிவுரையாகும்.

"அறிந்தவர் முற்றுமாய் யாருமிலை
அறிந்தார் மிகப்பலர் என்பதுமிலை
அறிந்தவரினும் கவியாற்றல் அனைவர்க்கும்
அவனியில் வாய்க்கின்ற சொத்தல்ல, சர்வக்ஞா !"

அப்படியெனின் ஒருவன் வருந்திக் கற்றல் ஏன்? ஒழுக்கம், எண்ணம், சொல் ஆகியவற்றில் தூய்மை, பேச்சில் பொருத்தமுடைமை ஆகிய பண்புகளுடன் ஆன்று, அவிந்து, அடங்கிய கொள்கைச் சான்றோறாய் விளங்குவதே கற்றவரின் இயல்பு என்கிறார் அவர். உரிய கல்வி கற்ற பின் ஒரு பணியை அல்லது தொழிலை ஏற்று வருவாய்க்கு வழி தேடிக் கொள்ளுதல் அவசியம். ஒருவன் சோம்பலை ஒறுத்தல் வேண்டும். உழைப்பவர்க்கே உறுதிகள் வந்து சேரும். சோம் பலின் அடிமைகள் உள்ளதும் இழப்பர். எனவே ஒருவன் கடுமையாக நேர்மையாக உழைத்தல் அவசியம். எனினும் இவை மட்டும் போதுமானவை அன்று. ஒருவன் திறமையோடும் உழைக்க வேண்டும். திறன் என்பது ஒருவன் அதிபுத்தி கூர்மை யுடனும் வினைத்திட்பத்துடனும் உழைக்கும் போது வெளிப்படுவது.

ஒரு சமுதாயச் சிந்தனையாளர் என்ற வகையில் சர்வக்ஞர் உடல் உழைப்பின் இன்றியமையாமையை வற்புறுத்துவார். அனைத்து சமுதாய பொரு ளாதார பிரச்சினைகளுக்கு ஒப்பற்ற தீர்வு உடல் உழைப்பே என்பது அவரது கருத்து. இதன் அடிப்படையில் உழவுத் தொழிலின் சிறப்பினை அவர் இவ்வாறு பேசுவார்.

"தொழிலில் உழவே தலையாகும்
சுழலும் வாழ்வுச் சகடமதை
சுற்றி இயக்கும் ஏர் இன்றேல்
சூழும் கேடு நாடலைக்கும்"

கௌரவமான வாழ்விற்கு நேரிய முறையில் பொருள் ஈட்டல் அவசிய மென்பதில் ஐயமில்லை. எனினம் ஈட்டலும் பொருள் குவித்தலுமே வாழ்க்கையின் ஒரே குறிக்கோள் ஆதல் கூடாது. அளவிற்குமேல் பொருள் ஆசை கூடாது. அரு ளுணர்வோடு ஈந்துவக்கும் பேருணர்வை வளர்த்துக் கொள்ளுதலே ஒருவன் பேராசையை வெற்றி கொள்ளக்கூடிய உரிய வழியாகும் என்பது கவிஞரின் கருத்து. கொடுக்கக் கொடுக்க கொடுப்பது பன்மடங்காய்த் திரும்ப வரும். ஒளிக்கும் செல்வம் அனைத்தும் யாரோ அனுபவிக்கும் சுகமாய் பயனற்றுப் போகும். எனவே முணுமுணுப்பின்றி முழு மனத்துடன் பிறர்க்கு வழங்குதல் வேண்டும். ஒருவன் சினத்தையும், காழ்ப்பையும், பொய்யாமையையும் விலக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றார் சர்வக்ஞர். அதைப் போலவே தனக்கு உரிய இனிய முறையில் குடி, சூது மிதமிஞ்சிய சிற்றின்ப நாட்டம் ஆகிய தீமைகள் இன்னும் பிற போக கவர்ச்சிகள் ஆகியவற்றுக்கு எதிராக நம்மை சர்வக்ஞர் எச்சரிக்கின்றார். குடிக்கு பலியானவன் இறுதியில் அனைத்தையும் இழப்பான். தன்னையும் தன் குடியினையும் அழித்தவனாவான். மது, பொருள்

மாது ஆகிய மூன்றும் மெலியார் வலியார் ஆகிய இருசாராரையுமே வீழ்த்தும் சக்தி படைத்தவை. மது, மாது இவற்றில் உன்னை நீ ஒரு போதும் இழத்தல் ஆகாது. பெண்களின் கற்புடைமையைப் பொறுத்தவரை அதுவும் பரத்தையுர் விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருப்பாய். ஆக்கலும், அழித்தலும் பெண்ணால் இயலும். இவ்வாறெல்லாம் சர்வக்ஞர் தமது பாடல்களில் அறிவுரை வழங்குகிறார்.

"நம்புவதாய்த் தோன்றும் நம்பிடல் செய்யாய்
நம்பிக்கையின் ஆதாரம் நாடி விழித்திருப்பாய்.
நங்கையர்பால் நம்பிக்கை நாசத்தை தேடுதலாம்
நன்றிது தேர்ந்திருப்பாய், சர்வக்ஞா !"

ஆயினும் மதித்துப் போற்றற்குரிய பெண்டிரும் இருந்தார்கள் என்பதை சர்வக்ஞர் அறிந்திருந்தார். சீதாபிராட்டியை அனைத்துப் பண்புகளும் வாய்க்கப் பெற்ற லட்சியப் பெண்மணியாக அதி உன்னத பீடத்தில் வைத்துப் பேசுகிறார் அவர். பொறுப்பு வாய்ந்த கணவன் பால் பக்தி கொண்ட பதிவிரதையாக வாழ்ந்த ஓர் ஏழையின் இல்லாளிடமும் அவர் அளவற்ற மரியாதை வைத்திருந்தார். வாழ்க் கையில் நிம்மதியும் மகிழ்ச்சியும், 'உள்ளது போதும்' என்ற மன நிறைவிலும் தெய்வ நம்பிக்கையிலும் அடங்கிருப்பது; வருவது எதையும் மனச் சமனத்தோடு ஒருவன் ஏற்றுக் கொள்ள வேண்டும். நமக்கு அப்பாற்பட்டு நின்று நமது வாழ்வை வடிவமைக்கும் ஊழ்வினையின் பால் சர்வக்ஞர் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தார். எனினும் சர்வக்ஞர் எல்லாம் விதிவசம் என்ற போக்கில் ஊக்கத்தை மறுத்த அவலக் கொள்கையை ஏற்றுக் கொண்டவரன்று. நல்லதோ, கெட்டதோ, ஒருவனின் விதி என்பது அவனது செயல்களின் விளைவாக சம்பவிப்பதே அன்றி வேறில்லை என்றே பேசுகிறார். ஒருவன் தான் விதைத் ததையே அறுக்கிறான். அவ்வாறாயின் தான் செய்யும் தவறுக்காக தன் விதி யையோ, கடவுளையோ நோவது எதற்கு? தெய்வ நம்பிக்கை கொண்ட ஒருவன் மிகச் சுலபமாக இறைவன் திருவுளத்திற்கு தன்னைப் பரிபூரணமாக அர்ப்பணித்துக் கொள்கிறான்; அவனிடம் சரணடைகிறான்.

"இவ்வழியோ, அவ்வழியோ, எவ்வழியோ
என்றலைந்து உடல்தேய்ந்து மாய்ந்திடாமல்
ஈசன் இட்ட வழி நன்று
என்றிருப்பாய் சர்வக்ஞா !"

சர்வக்ஞர் அனைத்து விதமான ஜாதிப் பிரிவுகளையும் அர்த்தமற்ற சடங்கு களையும், சமய வழக்கங்களையும், சின்னங்களையும் அறவே எதிர்த்தவர். அவற்றை அவர் எள்ளி நகையாடுவார். சாத்திரங்களின் உட்கிடக்கை அறியாது அவற்றைப் படிப்பதும் நெற்றியில் சமயச் சின்னங்கள் அணிவதும், பூணூல் பூணலும், புனிதத் தலங்களுக்கு யாத்திரை செல்வதும், ஆன்ம ஞானப் பாதையில் ஒருவனை வெகுதூரம் இட்டுச் செல்லா; இறைவனுக்கு ஜாதிகளில்லை. சமயங் களில் உயர்ந்தது, தாழ்ந்தது, மேலானது கீழானது என்று எதுவுமில்லை. மிக இழிந்தவன் என்பவன் ஊன் தின்னும் புலையனில்லை. உழைத்துப் பிழைப்

போரை உறிஞ்சி வாழ்பவனே சமுதாயத்தை ஏய்த்துப் பிழைப்பவன்; அடிப்படையில் இயற்கையில் ஒரு மனிதனுக்கும், மற்றொரு மனிதனுக்கும் இடையில் எந்த வேறுபாடும் இல்லை. அவர் பாடுகிறார்:

"ஏழையின் இல்லொளிர் தீபம் இழிந்ததுவோ?
எந்தச் சாதியையும் ஏற்றிப் புகழ்ந்திடாதே
ஈசன் அருள் பெற்றோம் அவன்தான் இங்குயர்ந்தோன்
ஈதறிந்து போற்றிடுவாய், சர்வக்ஞா !"

எந்தச் சமயம் அல்லது ஜாதியின் குறைகளையும் சர்வக்ஞர் கண்டிக்காமல் இருந்ததில்லை. அன்பையும் அஹிம்சையையும் போதிக்கும் சமயமே அனைத்துச் சமயங்களிலும் மேம்பட்ட ஒன்று, ஏற்றுப் பின்பற்றி வாழத் தகுதியுடையது என்பார் அவர். இத்தொடர்பாக அஹிம்சையைத் தனது தலையாயக் கொள்கையாகக் கொண்டுள்ள சமணம் இதற்கு எடுத்துக் காட்டான சமயம் எனக் குறிப்பிடுகிறார்.

அவர் நமக்குத் தெளிவுபடுத்துவது இதுதான். சமயம் அன்று, ஆன்மீகமே அவர் ஏற்றுக் கொள்வது; ஆதரிப்பது. இந்து தர்மத்தின் ஆன்மீக மரபையொட்டி சர்வக்ஞர் வாழ்க்கையின் லட்சியமாக வலியுறுத்துவது ஜீவன் முக்தியினையே. இதற்குரிய வழியாக அவர் ஏற்றுக் கொள்வது வீர சைவ மார்க்கத்தினையே. தூய இல்லற வாழ்வுடன் ஆன்மீகப் பயிற்சியும் ஒருங்கிணைந்த வாழ்க்கை வழி இது. அறநெறி வழுவாத அளவான இல்லற இன்பம் துய்த்து காமச்சுக இச்சைகளை அறவே ஒழித்த வாழ்க்கை உயரிய ஆன்ம ஞான சித்திக்கான ஒரு பயிற்சியே ஆகும்.

பண்டைய உபநிடதகால மகரிஷிகளும் 12ஆம் நூற்றாண்டின் சிவநெறிச் செல்வர்களும் நமக்கு அருளிய செய்தியினையே சர்வக்ஞர் வலியுறுத்துகிறார். பசவேச்வரரின் திடமான, எளிய, தெள்ளத் தெளிவான அருள் உபதேசங்களில் பொதிந்துள்ள கருத்தும் இதுவே.

எல்லாம் வல்ல, எல்லாம் அறிந்த எங்கும் பிரகாசனாய் இருக்கும் இறைவன் ஒருவனே. அவன் அருளே வடிவானவன். அவனால் படைக்கப்பெற்ற இவ்வுலகம் புதிர் நிறைந்த அற்புத எழில் கூடியது. நம்பிக்கை ஒன்றே அவனை அடையும் சுலப வழி. பக்தியும் மனத் தூய்மையும் இதற்கு அவசியம். உடன் வாழும் உயிர்க ளிடத்து அன்பும் பரிவுணர்வும் அற்ற மாந்தர் எத்தனைதான் மூர்த்தி வழிபாடு செய்யினும் எத்தனை சாஸ்திர அறிவு படைத்தவர்களாயினும் அவன் அருள் அடைய இயலாது. மனத்திட்பமும் கட்டுப்பாடும் இதற்கு உரிய பண்புகள். இறை வனைத் தேடி வெகுதூரம் ஒருவன் அலையத் தேவையில்லை. தனக்குள்ளேயே அவனைக் காண முடியும். ஒருவன் தன்னை அறியும்போது முழுமுதற் பொரு ளான இறைவனையும் அறிகிறான்.

அன்பும் அருளும் உடைய ஆன்மநெறிக்கு ஒருவனை ஆட்படுத்தி வழிகாட்டி அருளக்கூடிய குருவின் கடாட்சம் இதற்கு மெத்தவும் அவசியம். வழி காட்டும் குருவின் உதவியின்றி வெற்று அறிவு தீட்சண்யமும் கல்வியும்

கருத்தான விரதங்களும் மட்டுமே இறையனுபவத்தை ஒருவனுக்கு உண்டு பண்ணி விட முடியாது. வேறு யாரைக் காட்டிலும் குருவே ஈஸ்வர அனுபவத்தை எளிதாக்கி அடைய அருளுபவன். இதய, ஆன்ம பூர்வமாக ஒருவன் குருவை நாடி அவருக்குத் தொண்டு புரிதல் அவசியம். எனினும் போலிகள், பொய்யர்கள் பற்றி ஒருவன் எச்சரிக்கையுடன் இருத்தல் முக்கியம்.

புனித ஆன்மீகப் பயிற்சி வழங்கும் அத்தனை ஆசிரமங்களும் உண்மையான ஆசாரியர்களைக் கொண்டு இயங்குபவை எனக் கொள்ள முடியாது. அவர் கூறுவார்:

"ஆக்கிய உணவின் அறுசுவை யதனை
அதை அகழும் அகப்பைதான் அறியுமோ?
அவ்வகப்பைப் போல்வார் உயர்மனிதர் அன்று
ஆன்ம ஞானப் பெருநெறி வேறாம், சர்வக்ஞா !"

ஆசிரமங்களிலும் மடாலயங்களிலும் வாழ்வதாலேயே யாரும் ஞானியர் ஆகிவிட இயலாது. ஆசையும், காமமும், கோபமும், அகந்தையும் விலக்கியவன் எவனோ அவனே ஞானியாவான். அநுபூதி எய்தியவர்களே வணக்கத்திற்குரிய மகான்கள் ஆவார்.. ஆன்ம விழிப்புக்கு உரிய நெறிகள் வித்தியாசமானவை. தத்துவஞானமும் புலமையும் கூட பயனற்றவை. ஆடுகள் கரும்பின் தழைகளைத் தின்பது போன்றது அது. கரும்புச் சாற்றின் சுவை அறிந்து அதைப் பருகும் யானையின் அனுபவம் வேறு, மழித்த சிரசோ, காவி உடையோ அல்லது இன்னபிற கோலங்களோ ஒருவனை யோகி ஆக்குவதில்லை. உண்மை இறை உணர்வும் துறவில் உறுதிப்பாடும், அக முதிர்ச்சியும், உள்ளத்தூய்மையுமே ஒருவனைத் தவமுனி ஆக்கும் இயல்புகள் ஆகும்.

தன்னைத்தான் அறிந்தவன் அக ஒளி பெற்றவன். அந்த ஒளியில் திகழ் பவனே உண்மை ஞானி ஆவான். கபடமற்ற குழந்தை போலாவான் அவன். பேரண்டப் பிரக்ஞையின் அதி உன்னத நிலையில் வாழ்பவன் அவன். ஒன்றை இன்னொன்றிலிருந்து வேறுபடுத்திப் பார்க்காத அபேதவாதி அவன்; அனைத் துயிரின் முழுமுதற் ஆன்மாவான பரம்பொருளைத் தன்னில் காண்பவன் அவன். அனைத்திலும் அனைத்து உயிரிலும் அந்த முழுமுதற் செம்பொருளான ஒன்றையே காண்பவன் அவன். அடக்கமும் அமைதியும் கூடிய பேரின்பத் திளைப்பில் யாண்டும் நிலைத்திருப்பவன் அவன். இந்த நிலையினை அடைவதற் குரிய வழிகள் மிகவும் துல்லியமானவை.

இறைவன்பால் பக்தியே வீடு பேற்றிற்கு நிச்சயமானதும் மிக உன்னத மானதுமான சாதனமாகும். உள்ளம் நம்பிக்கையாலும் பக்தியாலும் நிரம்பும்போது இவ்வுடலே கோயில் ஆகின்றது. ஆலயத்தையோ ஆசிரமத்தையோ நாடிச் செல்ல வேண்டியதில்லை. காய்ச்சலால் அவதிப்படுபவனுக்குப் பாலும் கசப்பது போலவே பாவ எண்ணங்களும் தீய நோக்கமும் கொண்டவர்கள் கடவுள் சிந்தனையையே விரும்புவதில்லை. உண்மையான பிரார்த்தனை, சீரியநல் வாழ்வில் நாட்டம்,

நல்லோர், அறவோரின் நட்பில் ஆசை, மெய்யன்பர்தம் தொடர்பு, தீயவர், மூர்க்கரின் இணக்கத்தை ஒதுக்கும் எச்சரிக்கை உணர்வு – இவை ஆன்ம சாதகத்திற்கு மிகவும் இன்றியமையாதவை. இறைவனையே சரணாகத் தஞ்சம் புகுந்து, தமது தவறுகளுக்கு உண்மையாகவே வருந்தி அவனைத் தொழுவோர்க்கு அவர்கள் எத்தனை பாவியராக இருப்பினும் விமோ சனம் உண்டு. தெய்வ நம்பிக்கை அல்லது ஒரு சற்குருவின் துணை – இதுவே சம்சார சாகரத்தைக் கடந்து கரை சேர்க்க வல்லதொரு படகாகும். நிலையான பேரின்ப நிலை அப்போதே வாய்க்கும்.

"எழுத்துக்கள் எழுதுதற்காம்
எழும் தருக்கம் வாதத்திற்காம்
இதர நூல் யாசிக்க உதவும்
இரண்டடெழுத்தில்[2] முக்தி கிட்டும்
ஈதறிவாய் சர்வக்ஞா !"

இவ்வுண்மையைத் தேர்ந்தவனே விவேகியாவான். தூய மனச் சான்றுடன் தனக்குத்தான் உண்மையானவனாக இருத்தல் வேண்டும். சொல்லும் செயலும் ஒன்றாய் இருத்தல் வேண்டும். சத்தியம் வழுவாத ஒருமையுணர்வுடன் வாழ்பவனுக்கு குருவின் அன்பும் இறைவனின் திருவருளும் வெள்ளமாகப் பெருக்கெடுத்து, ஆணவ மலம் ஒடுங்கி அவன் நற்கதி எய்துவான். ஆன்ம அனுபவ பேரின்ப நிலைக்கு அது வழிகோலும். எல்லையற்றதோர் சாந்தி நிலவும். அந்த அதி உன்னத அனுபவ நிலையினை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. ஞானமும் தெளிவும் கூடிய உச்சநிலை அது. அதைப்பற்றி வெறும் வாய்ப்பந்தல் இடுவோர்க்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அந்த அநுபூதி நிலை அடையப் பெற்றோர்க்கு பிறப்பு இறப்பென்னும் சகடச் சுழலினின்றும் விடுதலை கிட்டி விடுகிறது.

ஒருவன் அடைதற்கரிய ஞானம் இதுவே. கதிரவனினும் ஒளிவீசும் பொருள் இல்லை. அதைப் போலவே ஆன்ம ஞானத்தை மீறிய அறிவும் இல்லை. பிரபஞ்சத்தோடு தன்னை முற்றிலுமாக ஒருங்கிணைத்துக் கொண்டு தன்னில் ஈசனைக் காணும் தகுதி இத்தகைய தெளிவு பெற்றவனுக்கே வாய்க்கும்.

---

[2] இரண்டெழுத்துச் சொல்லான 'சிவா' என்னும் நாமத்தைக் குறிக்கிறார்.

அத்தியாயம் ஆறு

சர்வக்ஞரின் படைப்பாற்றல்

தமது மூன்று வரிக் கவிதை ஒன்றில் மிகவும் அடக்கத்துடன் சர்வக்ஞர் தாம் ஆளுக்கு ஒரு சொல்லாக அனைவரிடமிருந்தும் சிறுகக் கற்றுக் கல்விக் குன்றாய் உயர்ந்ததாகக் கூறுகிறார். சர்வக்ஞரைப் போன்றோர்க்கு இந்த வாழ்க் கையே ஒரு பல்கலைக் கழகம். வாழ்க்கையிலிருந்து தாம் அறிந்தவற்றை சிந்தனைப் புடமிட்டு கணக்கற்ற வெவ்வேறு மலர்களின்றும் தாம் சேகரித்தத் தேறலை சுவைமிக்கத் தேனாக வண்டுகள் மாற்றிக் கொள்வதே போல் தேர்ந்த ஞானத்தைச் சேகரித்தவர் சர்வக்ஞர். சர்வக்ஞரின் பாடல்களில் இவ்வாறாக மரபின்வழி கிடைத்த ஞான வசனங்களையும், அறக் கருத்துக்களையும் ஞானியர், அறவோர் மற்றும் முனிபுங்கவர் ஆகியோர்தம் உலகியல் அனுபவம் மிக்க சிந்தனைகளையும் தமது சொந்த அனுபவ ரீதியாக அவர் ஈட்டிய ஞானத்தையும் ஒருங்கே காண முடிகின்றது. பாடலின் உட்கிடக்கை எதுவாயினும் பிறர்தம் கருத்தாயினும் அல்லது அவர்தம் சொந்த அனுபவமாயினும் அவற்றிற்கு அளிக்கும் எழில் மிக்க தனித் தன்மை வாய்ந்த சொல் வடிவம் அவரது சுயபடைப்பாற்றலுக்கு சான்று பகர்கின்றது.

சர்வக்ஞரின் மூன்று வரிப்பாடல்கள் 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பசவேஸ்வரர், இன்னும் பிறவீர சைவ சாரணர்கள் ஆகியோரின் இலக்கியத் தாக்கத்தை நன்கு பிரதிபலிக்கின்றன. சர்வக்ஞர் வீரசைவக் கொள்கை நேரிய வாழ்வினையும், பக்தி மார்க்கத்தையும் போற்றியது. ஜாதி மத வேறுபாட்டிற்கு அப்பால் ஒரு புதிய சமுதாயத்தைப் படைப்பதை லட்சியமாகக் கொண்டிருந்தது. கடுமையான சமயக் கொள்கைகள், சடங்குகள், மூடநம்பிக்கைகள் ஆகியவற்றைக் கண்டித்தது. உழைப்பின் பெருமை , ஆன்மீக சமநிலை ஆகிய பண்புகளைப் போற்றியது. எனினும் அவரது காலத்தில் இந்து தர்மம் இத்தகைய தனது சுயமான பன்பை இழந்திருந்தது. ஜாதியற்றதொரு சமுதாயத்தைப் படைக்க விரும்பிய லட்சிய நோக்கே இன்னுமொரு ஜாதி உணர்வாக இழிந்திருந்தது.

உள்ளத்தால் இவர் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிந்தனையாளரைச் சேர்ந்தவர். அவர்களின் புரட்சிகரமானச் சமுதாயக் கருத்துக்களையும், பகுத் தறியும் நோக்கினையும் ஏற்றுக் கொண்டவர். எனினும் அவர்களது பிரச்சார வெறியை எதிர்த்தவர். சமுதாய நீதிக்கு ஆசைப்பட்டவர். கடவுள் ஒருவரே

என்பதில் நம்பிக்கையும், அக்கடவுள்பால் தீவிர பக்தியும் கொண்டிருந்தவர். வீர சைவ நெறியின் அனைத்து அடிப்படைக் கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டவர். அதாவது குருவழிபாடு, பிரபஞ்சத்தின் அடிப்படைத் தத்துவமான சிவசக்தி வழிபாடு, பக்தி, சத்தியம், தருமம் ஆகிய மூன்றினையும் பரவி நிற்கும் ஜங்கம வழிபாடு, ஆன்மீக மேம்பாட்டினை அளிக்கவல்ல ஆறுபடிகள்—நிலைகள் இவற்றில் நம்பிக்கை, வீரசைவ மரபின் அடிப்படை அம்சங்களான இவையனைத்தையும் அவர் ஏற்றுக்கொண்டவராயிருந்தும் தம்மைப் பொறுத்தமட்டில் சமய சார்பற்ற சுதந்திரச் சிந்தனையாளராகவே திகழ்ந்தவர்.

சர்வக்ஞரின் பல வசனங்கள் (பொன்மொழிகள்)தேவாரதசிமய்யா, அல்ல மரபு பவவேஸ்வரர் ஆகியோரின் கருத்துக்களின் மூன்று வரிப்பாடல் வடிவின் மறுவெளியீடே. எனினும் சர்வக்ஞர் அவற்றிற்குத் தாம் கவிதை வடிவம் கொடுக் கையில் அவற்றை மேலும் சக்தி படைத்த பூடகமான கலைத் திறம் கொண்ட வெளியீடாக விளங்கச் செய்தார்.

கரும்பு வயல் புக்க
கரும்பின் சுவையறியா செம்மறி
கரும்பின் தழையனதத் தின்று நிற்க
கரும்பின் இனிய சாற்றைக்
கடித்துறிஞ்சும் களிறனையார் அவரே
கூடல சங்கம தேவனே நினைக்
காணும் காட்சியுடையார்.

இக்கருத்து சர்வக்ஞரின் மூன்று வரிகளில் மறுபடைப்புப் பெறும் விதம் இது.

கரும்பின் சுவையறியா ஆடொன்று
கரும்பின் புறத்திலை தின்னுமாப்போல்
ஆதார தத்துவத்தை
ஆரறிந்தார் சர்வக்ஞா!

இப்பாடலில் யானைப்படிவம் காணப்படவில்லை. எனினும் கருப்பச் சாற்றின் சுவையறிய மாட்டாத ஆட்டின் தோற்றம் சூசகமாக மிகவும் சக்திவாய்ந்த தோர ணையில் யானையினைச் சுட்டாமல் ஒன்றில் ஒன்று ஒன்றிய பாங்கில் சொல் லாமல் சொல்லும் யுக்தியால் பலம் பெற்றுத் திகழ்கிறது.

இதைப் போலவே பசவேஸ்வரர் இன்னொரு கருத்தையும் வெளிப் படுத்துகிறார். இறந்த விலங்கின் புலாலை உண்பவனைக் காட்டிலும் தெய் வத்தின் பேரால் ஒரு விலங்கை யாகத்திற்காக பலியிட்டு அதனை உண்பவனே மிகவும் மோசமான தீண்டத்தகாத புலையன் என்கிறார் இவர். சர்வக்ஞர் இதே கருத்தை தனது மூன்று வரிப்பாடல் ஒன்றில் இன்னும் விதந்து பேசுகிறார்.

செத்ததைச் செகுத்து உண்பான் புலையன் அன்று
தினம்தினம் வாழும் உயிரின் கழுத்தறுத்து
சுவைத்துண்பான் இழிபுலையன் அவனே சர்வக்ஞா!

கல்வியற்ற வறியவனை தங்கள் சுயநலத்திற்காக ஏய்த்துப் பிழைக்கும் பொது வாழ்க்கைக் கள்ளர்கள், போலிகள் இவர்களே. உண்மையில் தீண்டத்தகாதவர்கள், கண்டனத்துக்கு உரியவர்கள். சமுதாயத்தின் அனைத்து விதமான ஏய்ப்புக்களையும் ஒரே சொடுக்கில் கடுமையாகச் சாடுகிறார் சர்வக்ஞர். அல்லமப் பிரபுவைப் போலவே சர்வக்ஞரும் தீக்கனல் சிந்தையும் தீமைக்கு விட்டுக் கொடுக்காத உணர்வும் பொய்மையைச் சகித்துக் கொள்ளாதப் பண்பும் உடையவராகவும் ஒறுத்தவராகவும் விளங்கியவர். மேலும் அசாதாரண தனித்தன்மை உடையவராகவும் இருந்தவர். எனினும் கவித்துவத்தில் பசவேஸ்வரருக்கு மிகமிக நெருங்கியவர். வீர சைவ ஞானியர் அனைவரிடத்தும் பெருமதிப்பும் கொண்டிருந்தவர். அவருடைய இலட்சிய நாயகராக பசவேஸ்வரரை நேசித்தவர்.

பசவேஸ்வரரைப் போலவே வீர சைவ மரபிலான வாழ்வு வாழ விரும்பியவர் எனினும் நிலை திரிந்து கிடந்த சமய நெறியைப் பரப்பும் பிரச்சாரத்தில் அவருக்கு விருப்பமில்லை. ஜைனம், பிராமணியம் இவற்றின் நல்ல அம்சங்களை அவர் வரவேற்றவர். தனது தொண்டர்களை வீரசைவர்களாக மாற்றுவதில் அவர் விருப்பம் கொண்டிருக்கவில்லை. மாறாக அவர்களை மனிதர்களாக மாற்றுவதையே விரும்பினார். எனவே சர்வக்ஞர் சமயம், ஜாதி இவற்றின் குறுகிய எல்லைகளுக்கு அப்பாற்பட்டு அவற்றுக்கு புறத்தே நிற்கும் சுதந்திரமான அச்சமற்ற மகானாகத் திகழ்கிறார். அதே சமயம் கொஞ்சமும் தன்னோடு தான் முரண்படாதவராக மனப்பூர்வமாக வீரசைவ தத்துவத்தின் உட்கிடக்கையினை போற்றி வாழ்ந்த ஞானியராகவும் விளங்குகிறார். வீரசைவ மரபே அன்றாட வாழ்க்கையின் நடைமுறைக்கு ஒவ்விய அர்த்தமுள்ள சாதனமாக அவருக்குத் தோன்றியது.

அத்தியாயம் ஏழு

தர்மத்தின் அடிச் சுவட்டில்

"தர்மம் நிலையழிந்து
தீமையது உலகில் ஓங்கும்
தருணத்தில் மனிதரூபம்
தாங்கியிவண் அவதரித்து
பொல்லாரை ஒடுக்கம் செய்து
நல்லாரைக் காத்தருளி
தருமத்தை மீண்டும் நிறுவும்
செயலுக்காய் வந்துதிப்பேன்"

பிரபஞ்சத்தின் முதற்பொருளாம் இறையருள் யுகந்தோறும் உலகில் அவதரித்து பிழைபுரியும் மானுடத்தைத் திருத்தி தர்ம நிர்த்தாரணத்திற்காகத் தான் வழங்கும் உறுதிச் செய்தி இது. மனித வரலாற்றில் தொடரும் நிகழ்ச்சி இது .[1]

"இற்றுச் சிதறும் அனைத்துமிங்கே
இருசாய் மையம் நிலைப்பதில்லை
நல்லதனைத்தும் நம்பிக்கை இழக்க
பொல்லது வீறுபெற்று எழுச்சிகொளும்
விசுவதரிசன வெளிப்பாடு ஒன்று
விரைவில் உண்டு நிச்சயமாக."[2]

கவிஞர் யேட்ஸ் அவர்களின் இது சம்பந்தமான கருத்து மிகவும் பொருத்தமான கருத்தாகும். எப்பொழுதெல்லாம் ஒழுக்க நெறி குலைகிறதோ, மனித வாழ்வின் விழுமியங்கள் சிதறிக் கெடுகிறதோ , அப்போதெல்லாம் சமய மறுமலர்ச்சிக்காக வந்துதிக்கும் மகான்களோ, சமுதாய சீர்திருத்த அறநெறியாளராகத் தோன்றும் கவிஞர்களோ வந்துதிக்கின்றனர்.

இந்திய வரலாற்றின் மத்திய காலத்தில் இப்படிப்பட்ட முனிவர்கள், ஞானியர், கவிஞர்கள் தோன்றி சமுதாயச் சீர்திருத்தம், அற, ஆன்மீக

---

[1] பகவத் கீதை

[2] தி.செகண்ட் கமிங் – டபிள்யூ. பி. யேட்ஸ்

மறுமலர்ச்சி, அனைத்து சமயங்களும் போற்றுகின்ற மனித வாழ்வின் மதிப்பீடுகள் இவற்றின் புத்தாக்கம் ஆகிய பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டதைக் காண்கிறோம். பஞ்சாபில் குருநானக், மகாராஷ்டிராத்தைச் சேர்ந்த ஞானேஸ்வரர், துகாராம், ஏக்நாத் இராமதாஸ், குஜராத் தந்த மீராபாய், நரசிமேதா, வடஇந்திய மாநிலங்களில் தோன்றி கபீர்தாஸ், துளசிதாஸ், சூர்தாஸ், அஸ்ஸாமின் சங்கர்தேவ், வங்கத்தில் வாழ்ந்த வித்யாபதி, சண்டிதாஸ், சைதன்ய பிரபு, கர்நாடகத்து புரந்தரதாசர், சர்வக்ஞர், ஆந்திரத்து வேமன்னா ஆகியோர் இப்படி அவதரித்த அறவோர்கள் ஆவர்.

திருவள்ளுவர், பர்த்ருஹரி சர்வக்ஞர், வேமன்னா ஆகியோர் இவ்வழி தோன்றிய குறிப்பிடத்தக்க அருளாளர்கள். இவர்களைப் போன்ற அனேக மகான்களில் இந்நால்வரை மட்டும் தனித்துக் குறிப்பிடுவதற்குக் காரணம் உண்டு. இவர்தம் கருத்துக்களில் பளிச்சிட்டுக் காண்கின்ற கருத்து ஒற்றுமையே அது. *நீதி போதிக்கும் இலக்கிய மரபிற்கு இவர்கள் ஊட்டி இருக்கின்ற வளப்பம்* சிறப்பானது.

தமிழ்ப் புலவரான திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்தவர். கி.பி. முதலாம் நூற்றாண்டில் இவர் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. தமிழ் இலக்கியத்தின் உதயகாலமான சங்க இலக்கிய சகாப்தம் இது. வள்ளுவரும்சர்வக்ஞரைப் போலவே எளிய குடும்பத்தில் பிறந்தவர். இவரது பிறப்பும், பெற்றோர்கள் பற்றிய விவரமும் இன்று வரை அறியப்படாத செய்திகளே. ஆனால் சர்வக்ஞரைப் போல் அல்லாமல் வள்ளுவர் இனிய மணவாழ்வை ஏற்றவராய் இல்லறம் நடத்தியவர். தொழிலால் நெசவாளரான இவர் மனச் சமனம், விவேகம் கவிதையாற்றல் வாய்க்கப் பெற்றவர். இவர் பல்வேறு சமயங்களில் அருளிய கருத்துக்களை இவரது அன்பர்கள் ஒருங்குசேர்த்து பின்னால் தொகுத்தனர். இப்படித் தொகுக்கப்பட்ட வசனங்களே திருக்குறள் என வழங்கப் பெற்றது.[3] தமிழுக்கு வாய்த்த தனிப்பெரும் இலக்கியமாகும் இது. இன்றளவும் கற்றறிந்த சான்றோர் முதல் சாமானிய மக்கள் வரை அனைவராலும் நினைவு கூறப்பட்டு மேற்கோளாக எடுத்துக்காட்டப்பெறும் நூலாக விளங்குவது இது. குறள் என்னும் சொல்லுக்குக் குறுகியது என்பது பொருள். இந்நூலில் பாடல்கள் குறுகிய ஈரடிகளால் ஆக்கப் பெற்று இருப்பதனாலேயே இதற்கு இப்பெயர். ஆனால் வடிவில் மிகச்சிறிய குறட்பா இனம் கன்னடத்து மூன்று வரிப்பாடலைப் போல தெலுங்கில் நான்குவரிச் செய்யுளைப் போல பிரபலமாக வழக்கில் இருந்த பா வடிவம். மாபெரும் ஞானி ஒருவருக்கே வாய்க்கக் கூடிய சொல், செயல், *எண்ணம்* – ஆகிய மூன்றின் ஒருமைப்பாடு, பரிபூரண இயைபு, முதிர்ச்சி, அறிவும் சிந்தனையும் கூடியதொரு நோக்கு–இவை அனைத்துப் பண்புகளையும் பிரதிபலிப்பது. சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் பண்பில் சர்வக்ஞரும், வேமன்னாவும், திருவள்ளுவரும் ஒப்ப நிற்பவர்கள். இவர்கள் அருளி இருக்கும்

---

[3] திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவரே, அவர் கூறியவனவற்றைப் பின்னால் வந்தவர்கள் தொகுத்துக் கூறியதாக இந்நூலாசிரியர் சொல்வது பிழையுடையது.

அற ஒழுகலாறுகள், மதிப்பீடுகள், உலகியல் சிந்தனைகள், நடைமுறை விவேகம் ஆகிய அனைத்தும் ஒரே மாதிரிக் கருத்துக்களாய் இருப்பினும் இவர்கள் மனப்பாங்கு வித்தியாசமானது என்பது குறிப்பிடத் தக்கது. அமைதி அடக்கம் இரண்டும் திருவள்ளுவரின் இயல்புகள். சர்வக்ஞரையும், வேமன்னாவையும் போல கனன்றெழுந்து தீமையைச் சாடியவர் அன்று. மனிதனின் குறைகள், போலித்தனங்கள் கண்டு ஆத்திரத்தில் மனச்சமனம் இழந்தவரில்லை. அன்பும் மென்மையும் கூடிய ஆழ்ந்த பரிவுணர்வுடன் மனித இயற்கையினை, உலகியலைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப அறிவுரைகள் வழங்கியவர்.

மனித வாழ்க்கையின் மூன்று உறுதிப் பொருள்களில் (புருஷார்த்தங்கள்) அடிப்படையில் திருக்குறள் கருத்துக்கள் வரையறைசெய்யப்பட்டுள்ளன. அவையாவன: அறம், பொருள், இன்பம்.[4] மொத்தம் 1330 கருத்துரைகள் உள்ளன. அறத்துப் பால் வலியுறுத்தும் பண்புகளாவன. இறைவன் பால் நம்பிக்கை, பக்தி, நன்னடத்தை பேண வழி செய்யும் பண்புநலன்களைப் போஷித்தல், குடும்பம், சமுதாயம், தேசம் இவற்றுக்கான தனிமனிதனின் கடமைகள், பொறுப்புகள் ஆவன. பொருட்பால், செல்வத்தால் நிகழ்த்தப்பட வேண்டிய சமுதாய, அரசியல், பொருளாதாரப் பணிகள் பற்றிப் பேசுகிறது. காமத்துப் பால் காதல், அதைத் தொடரும் மணவாழ்க்கை, விஷய சுகங்களில் மனிதனுக்குரிய ஆசைகளில் கட்டுப்பாட்டுணர்வு குறித்த நெறிகளைப் போதிக்கிறது.

சத்தியம் நேர்மை அஹிம்சை ஆகியவற்றுக்குத் திருக்குறள் வழங்கியிருக்கும் மிக உயரிய இடம்,அவா, வெகுளி, அழுக்காற்றுக்கு எதிராக மனிதர்க்கு அது வழங்கும் அறிவுரை, குடி, சூது மறுப்பு, வறியோர், ஏழைகளிடம் அருள் உணர்வு கொள்ள வேண்டியதன் அவசியம், பக்குவமற்ற அரைகுறை துறவுணர்வைக் காட்டிலும் நல்ல குடும்ப வாழ்க்கை மேலானது எனச் சிறப்பித்து பேசும் நிலை—இவையாவற்றிலும் திருவள்ளுவருக்கும் சர்வக்ஞருக்கும் இடையே உள்ள கருத்து ஒற்றுமை மிகவும் நெருக்கமானது. வேறுபாடென்பது அவர்கள் கருத்துக்களை வெளியிட்டிருக்கும் விதத்தில்தான். சர்வக்ஞர் பளீரென்று அடித்துச் சொல்பவர். வள்ளுவர் மென்மையும் அன்பும் நிரம்பிய தொனியில் பேசுபவர். எனினும் இருவருமே மனிதனின் பலவீனங்களை ஒதேமாதிரி கண்ணோட்டத்துடனேயே பார்த்தவர்கள். மனிதனையும் உலகையும் அவர்கள் நேசித்தவர்கள்.

வறுமையைப் பற்றி வள்ளுவர் அக்கறையுடன் நிறையப் பேசுகிறார். சோதனை வந்த காலத்தும் ஏழைகள் தம் சீர்மையையும் சுயமரியாதையினையும் காத்தல் அவசியம் என அவர் அறிவுரை வழங்குகிறார். பிறரிடம் கையேந்தி அவர்தம் இரக்கத்திற்காய் ஏங்கிநிற்றலைத் தவிர்த்து தன்னிறைவுடன் வாழக் கற்றுக் கொள்ளல் வேண்டும் என்கிறார். கடுமையான நேர்மைமிக்க உழைப்பு,

---

[4] அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்களில் மூன்றினைப் பற்றி மட்டுமே திருக்குறள் பேசுகிறது.

நிறைமனம், கூடிவாழும் உணர்வு, பகுத்துண்ணும் நற்குணம் ஆகிய பண்புகளே நலவாழ்வுச் சமுதாயத்தை அமைக்க வல்லன என்பது இவரது கூற்று.

வள்ளுவருக்குச் சமுதாயத்தின்பால் கோபமோ கசப்புணர்வோ கிடையாது. இவ்வுலகில் எவ்வாறு வாழ்தல் நெறி என்பது பற்றி ஒரு நண்பனின் இனிய குரலில் பேசுகிறார் அவர்.

பிறப்பு விஷயம் ஒன்றைத் தவிர, வேமன்னாவுக்கும் சர்வக்ஞருக்கும் பொதுவான பண்புகள் அநேகம் உண்டு. வேமன்னா கௌரவமான மத்தியதர விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். சர்வக்ஞரின் ஜீவியகாலத்தைப் போலவே வேமன்னாவின் காலத்தைப் பற்றியும் வரலாற்று ரீதியான தகவல் இல்லை.[5] வேறு வாழ்க்கை தகவல்களும் இல்லை. அவரது இளமைக்காலம் பொறுப்பற்ற இன்பத் தேடல் வாழ்க்கையாக இருந்து விட்டது. எனினும் பின்பு ஏற்பட்ட ஏதோ ஒரு திருப்புமுனைச் சம்பவத்தால் அவர் யோகியானார். அனைத்தையும் துறந்து தவ வாழ்வை மேற் கொண்டார். இயற்கையாக அவரிடமிருந்து வெளிப்பட்ட கருத்துக்களை அவரது சீடர்கள் தொகுத்தளித்தனர்.

வேமன்னாவும் சாமான்ய மக்களிடையே புழங்கியதொரு 'அதவேலடி' என்னும் எளிய பாடல் வடிவினையே பின்பற்றி கவிதை எழுதினார். மக்கள் மொழியில் நான்கு வரிகளில் அமைந்த பாடல்களாகும் இவை.

மனித வாழ்க்கை சம்பந்தப்பட்ட ஆயிரக்கணக்கான கருத்துக்களை அவர் வெளியிட்டுள்ளார். அவரது ரசிகர்கள் சிலரால் பிற்காலத்தில் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட அவரது பொன்மொழிகள் புத்தக வடிவம் பெற்றன. பிற்காலத்திய விளக்கங்கள், இடைச் செருகல்கள்கூட இதில் இடம் பெற்றிருக்கலாம். 18 தலைப்புகளின் கீழ் இவ்வசனங்கள் வகைப்படுத்தப்பட்டன.

வேமன்னாவும் கௌபீனதாரியாக நாடு சுற்றிய யாத்திரிக ஞானியாக வாழ்ந்தவர். இவ்வுலக வாழ்க்கை சார்ந்த எந்தவொரு பொருள் பற்றியும் அவர் பேசாது விட்டதில்லை. சமுதாய, அரசியல், சமயத்துறைகளில் மலிந்து கிடந்த போலித்தனத்தையும், பொய்மையையும் எதிர்த்து நின்றவர் அவர். சர்வக்ஞரைப் போலவே அவரும் இலக்கியப் புகழ், அரசவை விருதுகள் ஆகியவற்றை ஒதுக்கியவர். வாழ்க்கை பற்றிய தனது படிப்பினைகளையும் கருத்துக்களையும் வெளியிடும் கருவியாகவே தமது கவிதையினை அவர் கையாண்டவர். இச்சாதனத்தை அவர் தேர்ந்ததற்குக் காரணம், இது அவருக்கு இயல்பாகக் கைவந்ததாலும் எளிய மக்களை விரைந்து சேரும் தகுதி படைத்ததாக இருந்ததுமே ஆகும்.

'அதவேலடி' நான்கு வரிகளில் அமைந்த சிறு வடிவ கவிதையாகும். இதன் கடைசி வரியினை வேமன்னா 'அங்கிநாமா' எனப்பட்ட தன்னைப் பெயர்வழி

[5] தற்காலத்திய ஆராய்ச்சியாளர் கருத்துப்படி இவர்காலம் 17ஆம் நூற்றாண்டின் பின்பாதியாகும்.

இனங்காட்டும் குறியீட்டு வரியாகப் பயன்படுத்திக் கொண்டார். இதர மூன்று வரிகளில் அரிய பொருள் பொதிந்த கருத்துக்களைக் குறுக்கி வழங்கினார்.

தெலுங்கில் வேறு எந்தக் கவிஞரும் இக்கவிதை வடிவினையும் தெலுங்கு மொழியின் மரபுத் தூய்மையினையும் இந்த அளவிற்கு போற்றிக் காத்ததில்லை. கன்னடமொழியில் சர்வக்ஞர் பின்பற்றியது போலவே வேமன்னாவும் நாட்டுப்புற கவிதா பாணியில் அன்றாட பேச்சுக் வழக்குச் சொற்களை கொண்டு பிரத்தியட்ச உலகில் அறிவை மிகவும் ஆழப்பதியும் வண்ணம் வெளியிட்டார். இன்றளவும் இவ்விருவரும் தத்தம் மொழிகளில் கீர்த்தி மிக்கவர்களாகத் திகழ்வதற்கு இதுவே காரணம். சர்வக்ஞர் வேமன்னா ஆகிய இருவரின் பல கருத்துக்கள் தம்முள் ஒப்புமை உடையனபோல் காணப்படுகின்றன.

இதனால் ஒருவர் மற்றவரை அப்படியே தழுவிச் சொன்ன கருத்துக்கள் என்பதில்லை. வடமொழி சுபாஷிதங்கள் தோன்றிய தொன்மைக் காலந்தொட்டே நாட்டுப்புறப் படைப்பின் அங்கமாக எழுத்தில் இடம் பெறாததொரு அற ஒழுக்கம் பற்றிய கருத்துக்களை வெளியிடும் மரபு தொடர்ந்து வந்துள்ளதே அதன் அடிப்படை. எனினும் இம்மாதிரி மரபு வழிவந்து சேர்ந்த அறவுரைகள் மிகவும் சொற்பமே. இவை என்றுமே இவ்விருவரின் சுயமான சிந்தனை வெளியீட்டை பாதித்ததில்லை.

இருவரும் ஆழ்ந்த தெய்வ நம்பிக்கையும் பக்தி உணர்வும் கொண்டவர்கள். சமயத்தின் பேரால் நடப்பிலிருந்த போலித்தனம், வெளிவேடம், அர்த்தமற்ற சடங்குள், சம்பிரதாயங்கள், மூடநம்பிக்கைக்ள் மக்களைப் பிரிக்கும் பாகுபாடுகள், ஏய்ப்பு, ஒடுக்கப்பட்ட ஏழையர்பால் திணிக்கப்பட்ட அநீதி போன்ற அனைத்துக் கேடுகளையும் கடுமையாகச் சாடியவர்கள்.

பெண்களைப் பற்றி இருவரும் அநேகமாக ஒருமித்த கருத்துடையவர்களே பெண்மையின் புனிதத்தை இருவருமே போற்றியவர்கள். விண்ணுலக சொர்க்க போகத்தையும் புறம்தள்ளி இல்லற வாழ்வை விரும்பி ஏற்கச் செய்து அதற்கு இனிமையும் ஒளியும் கூட்டும் இல்லத்தரசிகளின் நற்பண்பு, பதிவிரதாதர்மம் இவற்றை மிகவும் வியந்து பாராட்டியுள்ளனர். இருவருமே நன்னடத்தையற்ற பெண்கள், விபசாரிகள் இவர்களுக்கு எதிராக ஆண்களை எச்சரித்துள்ளனர். அவர்தம் வலையில் விழாதவாறு காத்துள்ளனர். சொத்தாசையை வளர்க்கும் பேராசை, சுய நலம் இவற்றின் பிடிப்பிலிருந்து காக்கும் மருந்தாக ஈதல் என்னும் அரும் பண்பை குறிப்பிட்டுள்ளார்கள். சான்றோர், நல்லவர், ஞானியர் இவர்தம் நட்பை தீயோர், முட்டாள்கள் இவர்தம் நட்பினின்றும் வேறுபடுத்திக் காட்டி முன்னவரைப் மெச்சிப் பேசியுள்ளனர் இருவரும்.

தமது வாழ்க்கையின் பிற்பகுதியில் இருவருமே வீரசைவர்களாக[6] மாறினார்கள் என்றாலும் சர்வக்ஞர் மட்டுமே விரிவான எடுப்பில் மனிதனின் ஆன்மீக வளர்ச்சியினை 'ஷட்ஸ்தலா' என்று ஆறு நிலைகளாக வகுத்து

---

[6] நம்பிக்கையால் வீரசைவர்கள் பிறப்பால் அன்று. வேமன்னா பிறப்பால் கப்பு–ரெட்டி மரபைச் சார்ந்தவர். ஆயின் 'இந்திய இலக்கியச் சிற்பிகள்' வரிசையில் சாகித்திய அக்காதெமி வெளியீடான வி. ஆர். நரலாலின் 'வேமன்னாவில்' அத்தியாயம் 5–ல் வேமன்னா பிறப்பால் வீரசைவர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

வீரசைவ மரபு உலகச் சமயச் சிந்தனைக்கு விசேடமாக வழங்கியிருந்த பெற்றியினைப் பற்றி எழுதியிருக்கிறார். ஆயினும் அடிப்படையில் இருவருமே மனிதாபிமானிகள்.

அவர்தம் நோக்கு விசாலமான உலகளாவிய ஒன்றாகும். குறுகிய வகுப்புணர்வோ கோட்பாடுகளோ அவர்களின் ஆதரவைப் பெற்றதில்லை. சமயம் போதித்த நற்பண்புகளான, அன்பு, அஹிம்சை, கருணை மற்றவர் பால் கரிசனை துயருற்றோர் பால் இரக்கம், ஈதல் இவற்றைப் போற்றியுள்ளனர். ஆனால் பிராமணர்களின் 'தாம் பிறப்பில் உயர்ந்தவர்' என்ற வாதத்தையோ, அவர்களே வேதஞானத்திற்குரியவர் என்பதையோ இருவருமே கடுமையாக எதிர்த்து விமர்சித்தார்கள். பிற்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், தீண்டப்படாதோரின் உயர்வை லட்சியமாக ஏற்று முன்நின்று ஆதரித்தவர்கள்.

இருவருமே ஒருவன் ஆன்மவளர்ச்சிக்காக ஈஸ்வரனைத் தொழ வெகுதூரம் அலைந்து திரிந்து புனிதயாத்திரை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என ஐயமுறத் தெளிவுபடுத்தியுள்ளார்கள். எங்கும் பரவியிருக்கும் ஈசன் ஒவ்வொரு மனிதனுள்ளேயும் இருக்கிறான். நம்பிக்கையும், அகந்தூய்மையுமே ஆன்ம சாதனைக்கு இன்றியமையாதவை; ஆலயந்தொழுதலும் தலயாத்திரையும் அன்று.

உண்ணும் உணவு, கேட்கும் இசை இரண்டும் பற்றியும் இருவருமே தமது அரிய சுவையுணர்வைக் காட்டியுள்ளனர். வேமன்னா சர்வக்ஞர் இருவருமே ரஸவாதத்தில் நம்பிக்கை உள்ளவர்களாகவும், அது சார்ந்த சோதனைகளில் ஈடுபாடு கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். வேமன்னாவுக்கு ஜோதிடத்தில் நம்பிக்கையில்லை. விதியின் வலிமையிலோ சகுனங்களிலோ கூட அவருக்கு நம்பிக்கை இல்லை. மிகவும் கோபத்தோடு அவற்றைப் பழிக்கிறார் அவர். சர்வக்ஞரோ அவற்றை நம்பியிருந்ததோடல்லாமல் அவற்றில் ஒரு தீவிரமான அக்கறையும் காட்டுகிறார்.

வருங்காலச் சம்பவங்களைப் பற்றிப் பேசும் பல பாடல்கள் அவரால் செய்யப்பட்டவையாகப் பேசப்படுகின்றன. இவையெல்லாம் அவரது மூலப் படைப்புக்களா அன்றி இடைச் செருகல்களா என்பதை அறுதியிட்டுக் கூறல் கடினம்.

இம்மாதிரி ஞானியரில் ஒருவரான பர்த்ருஹரி[7] நுண்மான் நுழைபுலம் மிக்க சான்றோர். கற்றவரோடு மட்டுமே இவர் தொடர்பு கொண்டுள்ளார். ஏனைய மூவரைப் போன்றவர் அல்ல இவர். இவர் அவர்களில் ஒருவராக இருந்தவர் அல்லர். மூன்று தலைப்புகளின் கீழ் தமது பாடல்களை இவர் இயற்றினார். 1. சிருங்காரசதகம் 2. காமக் கவிதைகள் 3. நீதி சதகம் – நீதி சதகத்தில்

[7] இவரது காலமும் சர்ச்சைக்குரியதே. சரித்திரபூர்வமான தகவல்கள் இல்லை. கி. மு. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பது கதைவழிச் செய்தி. ஆராய்ச்சியாளர் கூற்றுபடி இவர் 11 வது அல்லது 12 வது நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

அறக்கோட்பாடுகளும் சதகமும் (துறவுப் பற்றிய பாடல்கள்) அடங்கும். இவையாவும் சம்பிரதாயக் கட்டுக் கோப்பில் அமைந்தவை. மேலும் பத்ததிகள் என்னும் மரபு வழி பாடல்களாக வேறு பொருள்கள் பற்றியும் பேசியிருக்கிறார். இதே மரபு வழியினைப் பின்பற்றியே சர்வக்ஞரின் அல்லது வேமன்னாவின் அறவுரைகளும் தொகுக்கப் பெற்றன. கல்வி, நல்லவர், தீயவர், அறிவிலிகள், அஞ்ஞானம், அறத்தைப் போற்றுதல் ஆகியன பற்றிய இவரது கருத்துக்களும் சர்வக்ஞர், வேமன்னா, திருவள்ளுவர் ஆகியோரின் கருத்துக்களோடு மிகவும் ஒன்றியவை. நடைமுறை ஞானம், அனுபவத் தெளிவு நுண்ணிய நகைச்சுவையுணர்வு, இவர்தம் கருத்துக்களில் விவியுள்ளவை. கவனத்தில் நின்று, நாள்தோறும் மேற்கோளாக வெளிப்படும் தரம் கொண்டவை. பாடல் ஒவ்வொன்றும் தீர்க்கமான கலை வடிவம் பெற்றது. இந்திய இலக்கிய மரபின் பிரவாகமாக பெருகி ஒளிரும், வரருசி, புஷ்பதத்தா, வள்ளுவர், பர்த்ருஹரி, சர்வக்ஞர், வேமன்னா ஆகியவர்கள் ஒரு வாழையடி வாழையான மரபுக்கு உரியோர்.

அத்தியாயம் எட்டு

கலை வாழ்க்கைக்காகவே

சர்வக்ஞர் ஒரு பிறவிக் கவிஞர். விரைந்து செய்யுளியற்ற வல்லவர். அவர் சிந்தனையில் முகிழ்த்த எண்ணங்கள், கருத்துக்களை ஆய்ந்து வடிகட்டி தமக்கு மிகவும் பிடித்தமான மூன்றுவரி பாடல் அமைப்பில் அழகாகச் சுருக்கி பிரயாசையற்ற எளிமையுடன் வழங்கி உள்ளார். உயரிய, மிகவும் பொருத்தமான சொற்கள் இயல்பாகவே பிரவகிக்க அவரது கவிதாச் செயல்திறன் அவற்றை அதி உன்னத பாடல்களாக சமைத்துவிடும். அவரது நீண்டகால அனுபவ தரிசனம் தன்னிச்சையான கவிதா வெளியீடாக பரிணமிக்கும்.

அறிவுக் கூர்மை, நகைச்சுவை, நுட்பமான நையாண்டி, லேசான கண்டனம் ஆகியவற்றின் தாக்கத்தை ஒவ்வொரு கவிதையிலும் காணலாம். எந்தவிதமான செயற்கை அம்சமோ ஆடம்பரமோ இவரது பாடல்களில் துளியும் இல்லாதது மகிழ்வூட்டும் செய்தியாகும். ஆழ்ந்த சிந்தனைகளும் கூடவே லேசாக வெளிப்படும் கருத்துக்களும் இவற்றில் விரவி காணப்படும். எனினும் மனித வாழ்க்கை பற்றிய ஆழ்ந்த அகக்காட்சியோ மனித பலவீனங்களின்பால் அனுதாபமோ இல்லாத உணர்வை இவற்றில் காண முடியாது.

பேச்சு வழக்கிலுள்ள எளிய சொல்லை திறம்பட பிரயோகித்தல், அதன் மூலமாக இயல்பான கற்பனைச் சித்திரங்களை உருவாக்கல், சமுதாய நீதிக்கான புரட்சிமிக்க தம் கருத்துக்களுக்கு குரல் கொடுத்தல், வெறும் சம்பிரதாயமான சடங்குகள் சார்ந்த சமயத்தை அல்லாமல் உண்மையான ஆன்மீக அநுபூதி உணர்வை மதிப்பீடு செய்தல் இவை அனைத்திலும் சர்வக்ஞர் வீரசைவ மரபை பின்பற்றி இருப்பது தெளிவு. ஒளிவு மறைவற்ற கிராமிய பண்பு, புத்திச் சாதுர்யம், நகைச்சுவை உணர்வு, புலமைச் செருக்கற்ற பயனுள்ள நடைமுறை அறிவு முதலியவற்றில் அவர் நாட்டுப்புற மரபினைச் சார்ந்திருப்பவர். இந்திய அறநெறி கீதோபதேச கவிதா மரபைச் சார்ந்த புகழ்மிக்க கவிஞர்களான வரருசி, பர்துருஹரி, திருவள்ளுவர் வேமன்னா போன்றவர்களில் இவர் தலைசிறந்து விளங்குபவர்.

கல்வித் திறம் சான்ற திறனாய்வாளர்கள் பார்வையில் இவர் ஒரு முன்வரிசை கவிஞராகவோ பெரும் கவிஞராகவோ இல்லாமல் இருக்கலாம். ஆயினும் மிகவும் பிரபலமான கவிஞராக விளங்கியவர் என்பதை யாரும்

மறுப்பதற்கில்லை. அவருடைய கீர்த்தி இந்த 4, 5 ஆம் நூற்றாண்டுக் காலத்தில் ஒரு சிறிதும் மங்கியிருக்கவில்லை. இன்றளவும் அதே உயர்நிலையில் வைத்து போற்றப்படுபவர் அவர். மக்களின் உள்ளத்தில் இடம்பெற்று இன்றளவும் பிரகாசிப்பவர் அவர். வேறுயாரும் பற்றிக் கொள்ளமுடியாத இடம் அது. சர்வக்ஞரின் கவிதைகளில் அகச் செறிவும் திரிபாதி என்னும் மூன்றுவரி கவிதாயுத்தியுமே இதற்கான காரணமாகும். இவ்வகை மூன்றுவரிக் கவிதை நாட்டுப்புற இலக்கிய வகையைச் சார்ந்தது. ஆனால் சர்வக்ஞரின் கரங்களில் இது சிறப்புமிக்க புதுமையான சுயமான ஒரு கவிதா உத்தியாக மலர்ந்தது. இவரது அழகிய வசனங்களை முதல்முதலாக கேட்ட மக்கள் மீண்டும் மீண்டும் அவற்றைக் கேட்க ஏக்கம் கொண்டவர்களாக மாறியிருக்கக் கூடும். இதே முறையைப் பின்பற்றி தமது விலைமதிப்பற்ற கருத்துக்களை அவர் மேலும் தொடர்ந்து வெளியிட வேண்டுமாய் மக்கள் அவரை கேட்டு கொண்டிருக்க வேண்டும். இல்லை, இறைஞ்சி வேண்டிக் கொண்டிருக்க வேண்டும். அவரது வார்த்தைகள் எளிதில் புரிபவை மட்டுமன்று; நினைவில் நின்று உவகையூட்டுபவை. ஆம் அவற்றின் எளிமை பொலிவு மிக்கது. நேர்மையுடையது. அச்சமற்றது. கணப்பொழுதில் அவர் புகழ்மிக்க கவிஞராக ஆனதில் வியப்பொன்றுமில்லை.

வார்த்தைச் சிக்கனம், எளிமை, கருத்துச் செறிவு மிக்க வசன நேர்த்தி – இவை அவரது நடையின் பண்புகள். இது அவரது வசனங்களை எளிதில் மனனம் செய்து வெகுகாலம் சிந்தித்துப் பார்க்க வசதி செய்தது. இவ்வாறாகக் கன்னட மொழியின் சக்தி, வளர்ச்சிக்கு அவர் ஆற்றியுள்ள பங்கு குறிப்பிடத்தக்கது.

சர்வக்ஞரின் மூவரிப் பாடல்களின் இதயத்தைப் பிணித்த அருமைப் பண்பு பிற்காலத்தியவர்களில் பலர் தமது கைவண்ணத்தை இவ்வகை சாதனத்தில் சோதித்துப் பார்க்க ஏதுவாயிற்று. பலர் இம் முயற்சியில் அவரை மீறிய வெற்றிக்கு தகுதியற்றவர்களாயினும், அவரோடு சமநிலைக்கு உரியவர்களாக மேலும் தம்மை நிலைநாட்ட முடியாத நிலையில் அவரது கருத்துக்களோடு தம்முடையதை இடைச் செருகி அவர் பெயரிலேயே அவற்றை நடமாட விட்டு தம்மைத் திருப்தி செய்து கொண்டார்கள். இதுவே இடைச் செருகல்களின் விவரம். இத்தனை இருந்தும் சர்வக்ஞரின் கவிதா பாணி தனி ஒரு சம்பிரதாயமாக சமைந்து உருவாகாமல் போவது ஒருவியப்பான செய்தியே. மரபை மீறிய கவிஞரான அவருக்கு இது மகிழ்ச்சி அளித்த விஷயமாகக் கூட இருந்திருக்கலாம். தனது மூன்றுவரி கவிதா யுக்தியின் சிறப்பு படைப்பாளராக தனித்து நின்று பிரகாசிப்பவர் அவர். பகுத்தறிவுவாதியாக விளங்கிய அவர் உணர்வை ஒதுக்கி அறிவுக்கே முதலிடம் கொடுத்து தனது பாடல்களை யாத்தவர். எனினும் இவற்றில் எதுவும் கொஞ்சம் கூட வலிந்து புனையப்பட்டதாகத் தெரியவில்லை. அறிவையே அடிப்படையாகக் கொண்டு எந்திர ரீதியில் உருவாக்கப்பட்டவை போலவும் காட்சி தரவில்லை.

அவரது அனேக வரிகள் உள்ளீடு மிக்க செறிவான வசனங்களே. இவை திறனற்ற இரண்டாம் தர மனிதர் எவரின் கரங்களிலும் வறண்ட உயிரற்ற

சொற்றொடர் களாகவே ஒலித்திருக்கும். ஆனால் சர்வக்ஞரின் மந்திரஸ்பரிசம் இவற்றை எழில் மிக்க உயிர்ப்புள்ள வசனங்களாக மாற்றி அமைத்தன. கன்னட மொழியின் பழ மொழிகள் பொன்மொழிகள் இவற்றின் இலக்கிய வளத்தை மேலும் செழிப் படையச் செய்திருக்கின்றன. அவரது பாடல்களில் மேலும் பலநிலைகளில் திடும் என்றதொரு சொற்பிரயோகமோ ஒரு சொல்லின் புதிய வினோத பொருள் மாற்றமோ பாடல்வரிகளில் தொனித்த சூசகமான கருத்து வெளிப்பாட்டிற்கு ஒரு மின்தூண்டல் சக்தியை வழங்கி உயிர்ப்பிக்கும்.

அவரது வசனங்களில் நன்கு தெரிந்த உருவகங்கள் உவமைகள் கணக்கற்று கலந்திருக்கும். அவரது தயார்நிலை புத்திக்கூர்மை மின்னல் வேகத்தில் ஓர் அழகிய கற்பனைச் சித்திரத்தை அன்றாட வாழ்க்கையின் வழக் கமான காட்சி ஒன்றைக் கொண்டு படைக்க வல்லது. சர்வக்ஞர் தமது புனைவாற்றல் உருவக படைப்பில் அதி உன்னத நிலையை எய்தியவர். எடுத்துக் காட்டாக புதிர் போன்ற பின்வரும் வரிகளைச் சொல்லாம்.

'கல்லது பூவாகும்; காண்போர் காமுருவர்;
காப்பவன் மல்லிகார்ஜுனக் கடவுள்
வதிசிகரம் ஒளியாக்கும்
விதந்திது உரைத்திடுவார் யாரோ சர்வக்ஞா!"

இந்த வரிகளில் புதிர் கல்லில் உருவானதொரு பொருள் வசீகரமிக்க மென்மலர் போன்றதொரு மல்லிகார்ச்சுனரின் ஆலயத்து கோபுரத்துக்கு வெள்ளையடிக்க பயன்படுவதாக பேசுவது. இதன் பொருள் வெள்ளையடிக்க உபயோகப்படும் சுண்ணம் என்பதாகும். ஆனால் ஈசன் மல்லிகார்ச்சுனரின் மலை முடிச்சிகரம் என்பதான சொற்றொடர் (மல்லிகார்ச்சுனர் என்பதன் இயற் பொருள் மாசுமருவற்ற வெள்ளை நிறத்து மல்லிகை என்பதாகும்) அதன் இயல்பான அர்த்தத்தில் ஒரு வியத்தகு உருவகமாக எழில் கூட்டுகிறது. வெள்ளிப் பனி மூடிய கதிரவன் பட்டொளி முத்தமிடும் இமாசல சிகரத்தின் உன்னத அழகினை நினைவுபடுத்துகிறது. பரிபூரணம் எய்திய தவயோகி ஒருவரின் கீர்த்தியை தொட்டுக் காட்டும் இப்பாடலின் அடிப்படைப் பொருளை துலங்கச் செய்யும் சிறப்பு இது. இறையருளின் பிரகாச உண்மையை பிரதிபலிக்கும் உலக இச்சைகளை ஒதுக்கி கல் போன்ற வைராக்கிய சித்தி அடைந்த முனிவனின் பெருமை பேசும் உத்தி இது. இறைவனுக்குத் தன்னை முற்றிலும் அர்ப்பணித்துக் கொண்ட ஆன்மத் தூய்மையினைக் கடின நோன்பால் கைவரப் பெற்ற சிவ யோகச் சிரேட்டரின் பாங்கினை வெளிப்படுத்துவது.

சர்வக்ஞர் நினைவில் என்றும் நிற்கத்தக்க சொற்சித்திரங்கள் படைக் கிறார். அதுவும் சிலவாகிய சொற்களில். ஓர் இணையற்ற கை வினைஞனின் முதிர்ந்த கவிதா உணர்வும் கலைத் திறனும் கொண்டிருந்தவர் அவர் என்பதை அவரது மூன்று வரித் கவிதைகள் மெய்ப்பிக்கின்றன.

பேச்சு வழக்கிலிருந்த சொற்களுக்கு அதி உன்னத கவிதா சக்தியை அளித்த சாதனை, உருவகச் சிருஷ்டி, தான் வாழ்ந்த காலத்தின் சமுதாய தேவை களைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படுதல், அதைப்பற்றிய மதிப்பீட்டில் தவறாமை—இத்தகைய அம்சங்களில் சர்வக்ஞர் நவயுகக் கவிதையின் முன்னோடி எனக் கருதப்படக் கூடியவர்.

நல்ல ரசனையுள்ள ஒருவனின் இனிய சொற் பிரயோக உணர்வை நன்கு அறிந்திருந்தவர் சர்வக்ஞர். பின்வரும் பாடல் வரிகள் இதைப் புலப்படுத்தும்.

" கலையெழில் கண்டுரைப்பான்
ககனத்துச் சுடர்மதியாம்
கலைச்சுவை யறியான் சொற்கள்
காதுகள் உறுத்தக் குத்தும்
கூருடை ஆணியாகும் சர்வக்ஞா"

முதல் இரண்டுவரிகள் பேசும் திறனுக்கு உரியவர் சர்வக்ஞர். சிவசரண சம்பிரதாயத்தைச் சேர்ந்தவரான சர்வக்ஞருக்கு சொல்லே சிவமாகும். வார்த் தையினைக் கொச்சைப் படுத்துவதை ஒரு போதும் சகியாதவர் அவர். சொல், செயல், எண்ணம் ஆகிய மூன்றின் தூய்மையைப் போற்றியவர் அவர்.

சர்வக்ஞர் கன்னடத்தில் ஒரு சுபாஷிதகாரர். எந்த முட்டாள்தனமான செயலும் அவர் பார்வையிலிருந்து தப்புவதில்லை. அவரது ஒவ்வொரு பாடலும் அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடைய அக்கறை கொள்ளச்செய்யும் துடிப்புமிக்க எந்த பொருள்பற்றியும் அவர் கருத்தினை தெரிவிக்க தவறுவதில்லை. மனிதனின் முட்டாள்தனத்தை புன்னகையுடன் கூடிய நகைச்சுவை உணர்வுடன் அணுகிக் கருத்து தெரிவிப்பவர் அவர். ஒரு கொம்பால் அடிக்கும் போதும் அதை அரும்பும் புன்னகையுடன் ஏற்பவர் அவர்.

சர்வக்ஞர் ஓர் அறநெறியாளர்; சீர்திருத்தவாதி; எளிய மக்களுக்கு அறிவு கொளுத்தி வாழ்க்கைபற்றிய கல்வியினை அவர்களுக்கு வழங்குவதை லட்சியமாகக் கொண்டிருந்தவர். மேலும் மனித சமுதாயத்தையே திருத்தி மாற்றி யமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர். பரந்த கண்ணோட்டமும், தாராளமான நீக்குப் போக்கும் உடையவராக விளங்கியவர் அவர்.

சமூக அநீதி, சமத்துவமின்மை, ஜாதிமத வேறுபாடு, ஆணவம், போலி கௌரவம் போன்ற இன்னோரன்ன தீமைகளை மனிதன் தானாகவே அறியாமை யாலும் மூட நம்பிக்கையாலும் தேடிக் கொள்வது என்று தெளிந்து அவற்றை வன்மையாக வெறுத்தவர். எனவே அவற்றுக்கெதிராக வரிந்து கட்டிக் கொண்டு போரிட்டவர் அவர். திறந்த மனத்துடன் வாய்விட்டுப் பேசியவர். தீமை எங்கிருந் தாலும் எவ்வடிவத்தில் இருந்தாலும் அதைக் கண்டனம் செய்தவர். அதே சமயம் நல்லதை எவரிடத்துக் கண்டாலும் எங்கு கண்டாலும் முழுமனத்துடன் மனம் கனிந்து அதைப் பாராட்டியவர்.

போலித்தனத்தை முற்றிலும் கடுமையாக எள்ளிநகையாடிக் கண்டித்தவர். உலக வாழ்வில் போலிகள் விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய

அவசியத்தை வற்புறுத்தியவர். ஆன்மீகத்தில் அதைவிட அதிகமாக போலிகள் விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென வற்புறுத்தியவர். ஏனெனில் ஒரு தனி மனிதனின் சுய ஏமாற்றமாகவும் சமுதாய நிலையில் பெரிய மோசடி யாகவும் இந்த போலித்தனம் செயல்படுகிறது.

இறைவழிபாடு சமய அறநெறிகளைப் பின்பற்றுதல் ஆகிய இவை உண்மையான நம்பிக்கையும் பக்தியும் இல்லாத நிலையில் பயனற்றவை. காலத் தையும் பணத்தையும் வறிதே வீணடிக்கும் காரியம்; ஆன்மீக வளர்ச்சிக்கு ஒரு துளியும் உதவாத செயல்.

எளிதில் நம்பிவிடும் மக்களைப் பலர் உலகில் ஆசாரியர்கள், ஞானியர் என்றும் போர்வையில் ஏய்த்துவிடுகிறார்கள்.

சர்வக்ஞர் அடிப்படையில் ஒரு மனிதாபிமானி. உலகத்தைப் பற்றிய அவர் கண்ணோட்டம் சமயச் சார்பற்றது. அறிவு பூர்வமானது. எனினும் ஆன்மீக விஷயத்தில் இந்த எல்லைகளைக் தாண்டி அப்பாற்பட்ட நிலையில் அவரது பயணம் நிகழ்கிறது. அவரைப் பகுத்தறிவு பேணிய யோகி எனலாம். அவரது அநேகப் பாடல்கள் அவரது ஆன்மீக அனுபவத்தை விவரிக்கிறது. ஆனால் அதீத தீர்க்க தரிசனங்கள் கைவரப் பெற்ற அமானுஷ்யர் என்ற வகையில் அவர் எதுவும் பேசவில்லை. அவரது கவிதைகளில் மூன்று விதமான அனுபவங்களைக் காணலாம். சமய சாத்திரங்கள், தத்துவம் இவற்றை ஆழ்ந்து கற்றதனால் ஏற்பட்ட அறிவு முதலாவது. மனித இயற்கை, உலகியல் அறிவு இரண்டாவது. அகக் காட்சியினால் அடைந்திட்ட ஞானம் மூன்றாவது.

சில கவிதைகள் அங்கும் இங்குமாக மின்னல் கீற்றுக்களின் வீச்சில் அவருக்குள் அவரைப் (சர்வக்ஞரைப்) பற்றி பேசும். பெரும்பான்மை கவிதைகள் மிக உயர்ந்த நிலையில் தன்னிலிருந்து விடுபட்ட ஒரு மூன்றாவது மனித நிலையி லிருந்து பேசுபவை. ஆன்மீக சாதனையின் ஆறு நிலைகள் பற்றி தனது நம்பிக்கை அறிவு இவற்றை அவர் வெளியிட்டாலும் வீர சைவ மார்க்கத்தில் ஈடு பாடு கொண்ட உறுதிமிக்க ஒரு தொண்டன் என்னும் நிலையிலேயே தன்னை அவர் பிரகடனப்படுத்திக் கொண்டிருந்தாலும் பிற மதங்களின் சில நல்ல கோட் பாடுகளை அவர் மதித்துப் போற்றத் தவறியத்தில்லை. எடுத்துக்காட்டாக ஜைன சமயத்தின் அகிம்சைக் கோட்பாட்டை அவர் பெரிதும் பாராட்டியவர். அவர் பற்றி நின்ற வீர சைவ சமயத்தையே வெறும் அர்த்த மற்ற பழக்க வழக்கங்களை அடிப்படைக் கருத்தை மறந்து விட்ட நிலையில் மக்கள் பின்பற்றிய போதெல்லாம் அவர்களை எள்ளி நகையாடத் தவறியதில்லை. அதைப் போலவே புறச் சமயச் சின்னங்கள், அடையாளங்கள், அனுட்டானங்கள் இவற்றை அவர் குறைத்துப் பேசியவர். எனவே அவரது பகுத்தறிவுக் கண்ணோட்டம் அவரது ஆன்ம ஞானத் துடன் ஒன்றிக் கலந்திருந்ததைக் காண்கிறோம்.

ஒரு சமுதாயச் சீர்திருத்தவாதி என்ற நிலையில் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சில சாரணர்களுக்கு இணையான புரட்சியாளர் அவர். தனது மதிப்பீட்டில் அவர் யாரையும் தப்ப விட்டதில்லை. எனினும் அவரது நேரான கவிதைகள் பசவேஸ்வரர் போன்ற வசனகாரர்களின் வசனங்களுக்கு ஒப்பாகக் காண கூடியவை அன்று.

பசவேஸ்வரர், அல்லம பிரபு இன்னும் இவரைப் போன்றோர்கள் வசனங்கள் மனிதனின் மிக ஆழ்ந்த மனப்புலங்களைத் தொட்டு அதி உன்னத பிரக்ஞை நிலைகளை விவரிக்கும் ஆழம் கொண்டவை. ஆனால் சர்வக்ஞரோ தார்மீக நெறிகளைப் போதிக்கும் எல்லையிலேயே நிற்கிறார். மிக்வும் அருமையாக ஒரொரு சமயம் ஆழ்ந்த ஆநுபூதி நிலையை எட்டும் அனுபவமும் உண்டு. அவரது வழியில் அவர் தன்னிகரற்றவர். தன்னைவிட்டு முற்றுமாக நிற்கும் அதீத பண்பில் அவர் தனித்தன்மை வாய்ந்தவர். தனக்கென எதையும் விரும்பாத தன்னையே மறுத்துவிடும் அவரது பண்பில் அவர் ஒரு நோன்பினர். தனக்கென்று தன்னை அடையாளம் காட்டக்கூடிய ஒரு நாமத்தைக் கூட ஏற்றுக்கொள்ளாத அவரது பெருமை ஈடு இணையற்றது.

வெவ்வேறு விதமான பிரபஞ்சம் அளாவிய மனித கோட்பாடுகளில் தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் பொருந்திய சத்தியம் ஆன்மநேயம் என்ற இரண்டு பண்புகளையும் மிக உயர்ந்த நெறிகளாகப் போற்றியவர் சர்வக்ஞர். பசித்தவருக்கு உணவளித்து அனைவர்பாலும் அக்கறை காட்டி வாய்மையே பேசி ஒழுகும் வாழ்வில் அனைத்து ஆதாரக் கோட்பாட்டு நெறிகளும் அடங்கும் எனத் தெளிந்தவர்.

மனித வாழ்வு பற்றி ஒரு கண்கூடான படப்பிடிப்பை அவர் வழங்கும் போது ஆசையும், காமமும் எப்படி மனிதனைத் தீயவனாக்குகின்றன, பலவீனர்களை அவை எவ்வாறு தீயவை புரிய வைக்கின்றன, நல்லவரையும் நீதிவழுவாதவரையும் கூட எப்படி கெடுத்துவிடுகின்றன என்பதைத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறார்.

"மாந்தரைப் பொய்யராக்கும்; நீதி
மாசுறச் செய்யும்; பிறர் உண்பதும்
மறக்கச் செய்யும்; இவையாவும்
மனம் வளர் அவாவைத் தொடரும்."

பொன், பொருள் பால் மனிதர்க்கு இருக்கும் பற்றுதலும் இவ்வாறே தீங்கு செய்யும்.

"துறவோர் தவம் அழிக்கும்
துணைவியவள் கற்பழிக்கும்
அறவோர் பித்தராய்
அவலம் உற்றழிவர்
அவனியில் பொன்னதன்
நாதம் செவிமடுப்பார்
அறியார் சர்வக்ஞா!"

மேற்கூறிய தீயபொருள்களின் பால் பற்றிற்கு எதிராக மனிதரை எச்சரிக்கை செய்யும் சர்வக்ஞர் தனது அறவொழுக்க நேர்மையினையும் மனச் சமனப்பாட்டையும் மிக்க கவனத்துடன் பாதுகாத்திருக்க வேண்டும். அவரது சொந்த வாழ்க்கையில் தூய்மைக்கு ஈடாக இலக்கியத்தில் அவரது நடையின் சக்தி, வெற்று அலங்கார பாவனைகள் யுத்திகளிலிருந்து விடுபட்டுப் பிரகாசித்த பண்பு – இவற்றைக் குறிப்பிடலாம்.

ஐயத்திற்கிடமான நடத்தையுடைய இளம் பெண்களை மணந்து கொள்ளத் தூண்டும் ஆசைக்கு நரை கண்டு வயதில் மிகவும் முத்தவர் பலியாகக் கூடாது. இனிய உணவு வகைகளை புறத்தே எறிந்து விட்டு ஒரு குருடன் ஊர் முழுவதும் பிச்சையெடுத்துத் திரியும் மடமைக்கு இது ஒப்பும் என்பார் சர்வக்ஞர். மேலும் "பாம்புக்குப் பல்லில் மட்டுமே விஷம். ஆனால் பாதகர்க்கு பதாதி கேசம் உடல் முழுவதுமே நஞ்சு" என்றும் "தனக்கென்று ஊழியம் ஒன்று உள்ளவனக்கு செல்வம் சூழ்ந்துவரக் காண்பான்" என்றும் "பிறர்க்கு இட்டு வாழ்வது உயரிய தர்மம். ஆயின் நல்லவர், தக்கவர் எனத் தேர்ந்து அவர்க்கு வழங்குதலை ஒருவன் அறிந்து செய்ய வேண்டும்" என்றும்

"சத்திய தரிசனம் வாய்க்கப் பெற்றவன்
சவம்போல் அமைதி பெற்று வாழலாம்" என்றும்
"உன்னை நீ அறிந்தாலோ

ஒரு பொருளும் வேறாய்த் தோன்றாது" என்றும் போதித்து அருள்கிறார். மேலும் அவரது அரிய வாசகங்களில் சில பின்வருமாறு

"எண்ணையுண்ணும் அகல் விளக்கு
எரியும் இங்கே சிறு நேரம்;
ஏதும் பலன் கோரா
எரி விளக்காம் ஞாயிறவன்
இவ்வுலகில் நேரியவன் சர்வக்ஞா"
"ஈந்து புரக்கும் அருளாளர்
இவ்வுலகாளும் பேறடைவார்.

"மாண்புடை அறவோர் செயற்கரிய செயல்புரிவார் அல்லாமல் அதுபற்றிப் பேசிக் கொண்டிருப்பதில்லை."

" சிறந்த தொண்டனே சிறந்த தலைவனாவான்"

சர்வக்ஞரின் பாடல்களில் நாம்காணும் அரிய கருத்துக்களில் சில மேற்கூறியவை. இக்கருத்துக்கள் சர்வக்ஞர் ஒரு நடைமுறைத் தத்துவஞானி, உலகியலை கூர்ந்து கவனித்த அறிவாளி; காய்தல் உவத்தல் அற்ற தைரியம் மிக்க வாழ்க்கை விமர்சகர் என்பதை தெளிவாக்கும். எனினும் சாமான்ய மனிதனின் பலவீனங்கள் விஷயத்தில் பரிவுணர்வற்ற, கடுமையான மனப் போக்கு உடையவராக அவர் இருக்கவில்லை. இனிய நகைச்சுவை உணர்வோடு மிகவும் லேசாகவே அவற்றினைக் கண்டிக்கிறார். மடமை, போலி கௌரவம், பேராசை, கஞ்சத்தனம் போன்ற மானுடக் குறைபாடுகளை எதிர்க்கும் போதும்,

தீமை ஒன்றை எள்ளி நகையாடும் போதும் மானிடர்பால் அவரது அன்பும் கருணையும் அவற்றில் தொனிப்பது காணலாம். கசப்பும் வெறுப்பும் அறவே அற்றவர் அவர். இவ்வுலகம், வாழ்க்கை இவை எத்தனை குறைபாடுகள் உள்ளவையாயினும் இவற்றை நேசித்தவர் அவர். மக்களின் வாழ்வு நிலையை உயர்த்தி சிறப்புறச் செய்வதில் மிகவும் அக்கறை காட்டியவர் அவர். கவிதை என்பது அவரது ஆற்றல், மனோதர்மம் இவற்றுக்கு ஏற்றாற் போல் அமைந்த அவர்தம் லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள பொருந்தி வந்த சாதனமே ஆகும். 'கலை கலைக்காகவே' என்னும் கொள்கை அவருக்கு ஏற்புடைத்தன்று. கலை வாழ்க்கைக்காகவே என்பது அவரது நம்பிக்கை. வாழ்க்கை கலை இலக்கியத்திற்கும் மேம்பட்ட ஒன்றாகும்.

துணை நூற்பட்டியல்

கன்னடம்

அக்பர் அலி, எம். (1983), சர்வக்ஞ சமாஜா தர்ஷனா, சாஹித்திய சித்வா, கன்னட சாஹித்ய பரிக்ஷத், பெங்களூர்.

பசவராஜு, எல். (ஆசிரியர்) (1972), பரமார்த்தா, பேங்களூர் யூனிவர்ஸிடி.

சித்சகோரா (1934), சர்வக்ஞன சந்தோஷா.

ஹோரகாரி பி.எம். (1978), சம்யோஜகா சர்வக்ஞ ரவிகீர்த்தி

பிரபாஷனா, தனகா, சிரூர்.

கிருஷ்ண சாஸ்திரி, ஏ.ஆர். (1969), சர்வக்ஞ கவி மைசூர் பல்கலைக் கழகம், மைசூர்.

மாரியப்ப பட், எம், (ஆசிரியர்) (1971) சர்வக்ஞ வசன சங்கிரகா, சாகித்திய அகாதெமி, புது டெல்லி.

நாயக் எச். எம் (ஆசிரியர்) (1976) சர்வக்ஞா, கன்னட அத்யனான சம்ஸ்த், மைசூர் பல்கலைக் கழகம், மைசூர்.

சேஷாத்திரி, எச்(ஆசிரியர்) (1974), சர்வக்ஞ, ஜில்லா சாகித்திய பரிஷத், தும்கூர்

சிவமூர்த்தி சாஸ்திரி, டிப. (ஆசிரியர்) (1975), சர்வக்ஞ வசன சங்கிரகா, நான்காம் நூற்றாண்டு கமிட்டி, கர்நாடக மாநிலம், பெங்களூர்.

சிவருத்ரப்பா, ஜி.எஸ். (ஆசிரியர்) (1975), சர்வக்ஞா, ஒந்து செமீக்க்ஷே, பெங்களூர் பல்கலைக்கழகம்.

வெங்கடராமப்பா, கே.(1962), வேமன்னா, மைசூர் பல்கலைக்கழகம், மைசூர்
உமாபதி சாஸ்திரி, ஜி.எம்(ஆசிரியர்) (1973) சர்வக்ஞ மூர்த்திய வசனகளு சாரதா பவன பிரகாஷனா, பாகல்கோட்

உத்தங்கிசன்னப்பா (ஆசிரியர்) (1924) சர்வக்ஞ வசனகளு

சவ்வியசாச்சி (1978) திருவள்ளுவர், ரஷோத்ரோதான பரிஷத், பெங்களூர்.

ஆங்கிலம்

நர்லா வி.ஆர் (1969), வேமன்னா, எம்.ஐ.எல் (இந்திய இலக்கியச்சிற்பிகள்) வரிசை, சாஹித்ய அகாடெமி புது டெல்லி.

ரங்காச்சார் எஸ். சீனிவாசாச்சார் ஆர். (ஆசிரியர்கள்) (1958)

பர்த்ருஹரியின் நீதி சதகம், சமஷ்கிருத காகித்திய சாதனா மைசூர்

சேஷகிரிராவ் டி (மொழிபெயர்ப்பாளர்) (1978) சர்வக்ஞரின் கருத்துக்கள்– தொகுப்பு கன்னட சாஹித்திய பரிஷத், பெங்களூர்

சீனிவாசன், கஸ்தூரி (மொழிபெயர்ப்பாளர்) (1969) திருக்குறள் பழந்தமிழ் நீதி இலக்கியம், பாரதீய வித்யா பவன், பம்பாய்

ஆய்வு உரைகள், பத்திரிக்கைக் கட்டுரைகள்

கன்னடம்

பசவராஜூ எல் (1972) சர்வக்ஞநி கோபனே ஒப்ப லக்ககா சிஷ்யா பிரபுத்த கர்நாடகா, பாகம் 54, எண்.3

சன்னவீர கனவி (1969) சர்வக்ஞ "ஹோலபரிது ஹோட்டி கோடகுவ மாது"

மால்வாட், எஸ்.எஸ். (1970) (சாகித்திய சிந்தனா) ஆனந்தா வெளியீடுகள், தார்வார் (அ) சர்வக்ஞ காவிய ஜன ஜீவன சித்ரனா"

(ஆ) " சர்வக்ஞ கவி" (சாகித்திய சங்கமா) ஜெயபிரகாஷனா, தார்வார்.

முகலி ஆர்.எஸ் (1964), சர்வக்ஞ கன்னட சாகித்ய சரித்ரே உஷா சாகித்ய மாலா மைசூர்.

திப்பெருத்ர ஸ்வாமி, எச் (1968) சர்வக்ஞ கவி (கர்நாடக சமஸ்கிருதி சமிக்ஷே டி.வி.கே. மூர்த்தி, மைசூர்.

சர்வக்ஞர் 16–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானத்துறவி; அறநெறியாளர். கன்னட இலக்கியத்தில் சிறப்பிடம் வகிப்பவர். வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்வதின் இன்றியமையாமை, அதன் பொருள், லட்சியம், கலை – இவை பற்றிய அவரது கருத்துக்கள், அவரது பொன் மொழிகள், உலகப் போக்கு பற்றிய அவரது அனுபவம் இவையெல்லாம் அனைத்துலகிற்கும் பொதுவானவை. காரணம் இவை யனைத்தும் அடிப்படையில் மனித இயல்பு பற்றிய படப் பிடிப்பே. வாழ்க்கையின் அன்றாட சாதாரண நடப்புகளைக் கொண்டு எழில் மிக்க கலைச் சித்திரம் புனைந்தவர் சர்வக்ஞர்.

மூன்று வரி பாடல் வகையினை–கர்நாடகத்தின் அசல் நாட்டுப்புற இலக்கிய வடிவினை – தனது கவிதா சாதனமாக சர்வக்ஞர் தேர்ந்தெடுத்திருந்தாலும், அதற்கு ஒரு புதிய வாழ்வும், சக்தியும் ஊட்டி, அதை வசீகரம் மிக்க, வளமை வாய்ந்ததொரு வெளியீட்டுக் கருவியாக மாற்றியமைத்தவர். எளிமை, சுருக்கம், சிந்தனா தீர்க்கம் – இவை அவரது நடையின் இயல்புகள்.

கே.பி. பிரபு பிரசாத் (பிறப்பு–1929) இந்நூலின் ஆசிரியர்; சிறந்த எழுத் தாளர். இவரது முக்கியப் படைப்புகளில் 'ஹாவ் டோனா பா' – (இசைப் பாடல் தொகுதி) 'தெகுள கேளா தாரியள்ளி' (பயண நூல்) ஆகிய இரு கன்னட நூல்களும் அடங்கும். மேலும் கன்னடத்தில் குழந்தைகளுக்காக பல நூல்கள் எழுதியுள்ளார். அவற்றில் சிலவற்றை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்துள்ளார். இச்சிறு நூலில், கன்னடம் அறியாத பிறமொழி வாசகர்களையும் கருத்தில் கொண்டு சர்வக்ஞர் வாழ்வு மற்றும் சிந்தனைகள் பற்றிய விவரங்களை தெளிவுபட வெளிப்படுத்தியுள்ளார். பிற மொழிவாசகர்கள் இதனை வரவேற்பார்கள் எனக்கொள்ளலாம்.

Sarvajnar (TAMIL)

ISBN - 81-7201-747-2 Rs. 15.00